Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2011

சமூக அவலங்களை துணிச்சலுடன் வெளிக்கொணரும் ஓரேயொரு தமிழ் சஞ்சிகை

# இருக்கிறம்

வார இதழ்

ஒரு பொல்லாப்புமில்லை

காத்திருப்பு 01 இருக்கை 27 | 03 ஒக்டோபர் 2011 | விலை: ரூபா 30.00



நேரடி ரிப்போர்ட்

## கிளிநொச்சி மருத்துவ முகாம்

உண்மையின் பதிவு

## வலையிறவு விமானத்தள விஸ்தரிப்பால் குடிநீருக்கு அலையும் குடும்பங்கள்

## 'எமது மரபுரிமையை பாதுகாப்பதற்கு ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்'

பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்

இருக்கிறம்
வார இதழ்

## தொடர்புகளுக்கு...

ஆசிரியர் பீடம்:
தொ.பேசி : 011 3150836
தொ.நகல் : 011 2585190

கட்டுரை/ஆக்கங்கள்:
weeklyirukkiram@gmail.com

செய்திகள்/படங்கள்:
newsirukkiram@gmail.com

விமர்சனங்கள்/ஆலோசனைகள்:
irukiram@gmail.com

விளம்பரப்பிரிவு:
011 5322730

விநியோகப்பிரிவு:
011 5322781

இணையத்தளம்:
www.irukkiram.tk

தபால் முகவரி:
03, டொரிங்டன் அவனியூ,
கொழும்பு–07.

# இப்படிச் சொல்லுகினம் பாருங்கோ!



'அர்த்தமுள்ள வகையில் ஐ.நா.வுடன் பேசுவதற்கு இலங்கை அரசு ஒருபோதும் வெட்கப்படவில்லை. நியூயோர்க்கிற்கான இந்தப் பயணம் குறித்து பெரிதும் மகிழ்கிறேன். இது மிகப்பயனுள்ள வகையில் அமைந்திருந்தது. எமது சந்திப்புக்கள் மூலமாக உண்மையான நிலவரத்தை அடுத்தவருக்குப் புரியவைக்க முடிந்தது'

★ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ
★ 27.09.2011
(அமெரிக்காவின் டெய்லி எவ்.ரி. பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலின் போது...)



'உலகின் எந்தவொரு நீதிமன்ற விசாரணையையும் சந்திக்க நான் தயார். கேணல் ரமேஷ் அவர்களின் மனைவி வத்சலா தான் எனக்கும் நாட்டு மக்களுக்கு நஷ்டஈடு தரவேண்டும். ஆனால், அவர் எனக்கு எதிராக நஷ்டஈடு வழக்கைத் தொடுத்துள்ளார். நான் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை'

★ மேஜர் ஜெனரல் சவேந்திரா சில்வா
★ 26.09.2011
(சிங்கள ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலில்...)



'நியூயோர்க்கில் சவேந்திர சில்வாவிற்கு எதிராக வழக்கு விசாரணைகள் நடத்தப்படவுள்ளதால் இந்த வழக்கை முறியடிக்க அவருக்கு அரசாங்கம் முழுமையான ஆதரவளிக்கும். தேவை ஏற்பட்டால் சட்டத்தரணிகள் குழுவொன்றை நியூயோர்க் நகரிற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்'

★ அமைச்சர் மைத்திரிபால சிறிசேன
★ 27.09.2011
(கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பில்...)



'பொலிஸ் மற்றும் படையினர் முறையாகச் செயற்பட்டால் யாழ். மாவட்டத்தில் கிறீஸ் மனிதன் மற்றும் ஏனைய அசம்பாவிதங்கள் நடைபெற மாட்டாது. சமூகத்தின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளில் ஏற்பட்ட தளர்வு, பெற்றோர்களின் கவலையீனம், என்பவற்றால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. பொலிஸார் மக்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்கின்றார்களே தவிர, எந்த விதமான நடவடிக்கைகளும் எடுப்பதில்லை'

★ யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார்
★ 22.09.2011
(பத்திரிகையாளர் சந்திப்பின்போது...)



'அமெரிக்கா, கனடா போன்ற அரசுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்தமையானது தமிழ் மக்களின் பிரச்சினை சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளதை தெட்டத்தெளிவாக வெளிக்காட்டுகிறது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் கொள்கை மாறக்கூடாது. இந்த வகையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒருபோதும் தனது கொள்கையில் மாறவில்லை'

★ பா. அரியநேத்திரன் எம்.பி.
★ 24.09.2011
(கல்முனையில் இடம்பெற்ற தமிழ்க் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்...)



'தமிழர் தாயகப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றங்களை அனுமதிக்க முடியாது. முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் மட்டுமல்ல, சிங்களப் பிரதேச பிரிவுகளும் அமைக்கப்பட்டு வருகிறது. சிங்களக்குடியேற்றம், நிலஅபகரிப்பு ஆகியவற்றைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளை எவ்வாறு முன்னெடுப்பது என்பது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆராயவுள்ளது'

★ செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.
★ 26.09.2011
(அறிக்கையொன்றில்...)



'பண்டாரநாயக்க பெயரை இல்லாதொழிப்பதற்கு பாரிய சதித் திட்டமொன்று தீட்டப்பட்டு வருகிறது. தந்தை, தாய் மற்றும் நான் தொடர்ச்சியாக 62 ஆண்டுகள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைமை தாங்கி கின்னஸ் சாதனை படைத்துள்ளோம். நான் இரத்தம், வியர்வை சிந்தி இந்தக் கட்சியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் சென்றேன்'

★ முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க
★ 26.09.2011
(அத்தனகல்லவில் நடைபெற்ற கூட்டமொன்றில்...)



'எங்களுக்கும், கூட்டமைப்பிற்கும் நல்ல புரிந்துணர்வு இருக்கின்றது. கூட்டமைப்பு தலைவர்கள் நேரடியாக கொழும்பில் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டால் புலிக் கூட்டம் ஒன்றுசேர்ந்துவிட்டது என பிரசாரம் செய்வதற்கு நிறைய பேரினவாதிகளும் அவர்களது தமிழ்பேசும் தரகர்களும் தயாராக இருப்பது எங்களுக்குத் தெரியும். சொந்த தேவைகளுக்காக தலைநகர தமிழர்களைப் பயன்படுத்தாதீர்கள்'

★ மனோ கணேசன்
★ 26.09.2011
(அறிக்கையொன்றில்...)



'கொழும்பை அபிவிருத்தி செய்ய திட்டமிடும் முன்பு ஐக்கிய தேசியக் கட்சி முதலில் தமது கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறிகொத்தவுக்கு மின்சாரத்தினை மீளப்பெற வழிசெய்ய வேண்டும். ஐக்கிய தேசியக்கட்சி தகுதி வாய்ந்த மேயர் வேட்பாளரை போட்டியிடச் செய்யின் வெற்றிபெற வாய்ப்பிருந்த போதும் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தன்னால் கட்டுப்படுத்த கூடியவர்களையே தேர்தலில் போட்டியிட வைத்துள்ளார்'

★ பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன
★ 25.09.2011
(கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பில்)



'கிழக்கு மாகாணத்தைப்போல வடக்கையும் பறித்துவிட அரசு கங்கணம்கட்டி நிற்கிறது. ஆயுதப் போராட்டம் தோல்வியடைந்துள்ள நிலையில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு நிற்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் இனி எப்போதும் கிடைக்கப் போவதில்லை'


★ த.சித்தார்த்தன்-தலைவர், புளொட்
★ 26.09.2011
(நீர்வேலியில் கு. வன்னியசிங்கத்தின் நூற்றாண்டுவிழா நினைவுப் பேருரை நிகழ்த்தும்போது...)



'நடைபெற்றுக்கொண்டிருக்கும் இராஜதந்திரப் போரில் நாம் விடயங்களை மிக அவதானமாக கையாள்வதன் மூலமே சர்வதேச நாடுகளின் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும். இந்த யதார்த்த நிலைகளை உணர்ந்துகொண்டு எமது சர்வதேச ஆதரவுத் தளங்களை உருவாக்கிகொள்ள வேண்டும். இனிமேல் தமிழ் மக்கள் தமிழ்த் தலைமைகளை நம்பமாட்டார்கள் என மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் எதிர்பார்த்தது. ஆனால், தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பையே ஏற்றுக்கொண்டார்கள்'


★ மாவை சேனாதிராசா எம்.பி.
★ 25.09.2011
(பிரான்ஸில் நடைபெற்ற உலகத் தமிழ் பண்பாட்டியக்க சர்வதேச மகாநாட்டில்...)

## இருப்பு



"வேட்பாளர்களின் கவனத்துக்கு..."

# 'தையல் பழகியாவது உழைப்பேன்' என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது



பெருமாள் கலைமதி

யுத்தம் விட்டுச் சென்ற தடயங்களில் வலியுடன் கூடிய வேதனையைத் தருவதுதான் உடல் அங்கங்களை இழந்தவர்களின் வாழ்க்கை. அதிலும் வாழ வேண்டிய வயதில் தம் அங்கங்களை இழந்து தவிக்கும் இளம் பெண்களின் நிலை பரிதாபத்திலும் பரிதாபம். இன்று வடக்கு கிழக்கு யுவதிகளில் பெரும்பாலானோர் தம் உடல் அங்கங்களை இழந்துள்ளனர். என்னதான் அவர்கள் ஏனையோருடன் சகஜமாகப் பழகினாலும் அந்த வேதனை அவர்களை ஆட்டிப் படைப்பது அவர்களது முகங்களைப் பார்க்கும்போது நன்றாகத் தெரிகிறது.

தன் வயதையொத்த ஏனைய இரு யுவதிகளுடன் கிளிநொச்சியில் ஒரு பரிசோதனை சிட்டையுடன் வெயிலில் காத்து நின்றார் பெருமாள் கலைமதி. தன் ஒரு காலை இழந்த நிலையில் அதற்கு மாற்றுக்கால் போடுவதற்காக வந்திருந்த அவரை நெருங்கி என்னை அறிமுகப் படுத்திக் கொண்டேன். எவ்வித தயக்கமும் இன்றி ஒரு சகோதரிக்கே . உரித்தான பக்குவமான தொனியில் என்னுடன் கதைத்தார்.



'எண்ட சொந்த இடம் தர்மபுரம். எனக்கு 28 வயசாகுது. ஒரு அண்ணாவும் தங்கையும் இருக்கினம். இறுதி சண்ட டைமிலதான் எண்ட கால் போச்சுது. சண்ட நடக்கேக்க இடம் பெயர்ந்து புதுக்குடியிருப்புக்குப் போய் அப்படியே மாத்தளனில் இருந்தோம். 2009 சித்திரை 4 ஆம் திகதி எண்டு நினைவிருக்கு. தர்மபுரத்திலிருந்து மாத்தளன் போகேக்க வீட்டு வாசல்ல நிக்கேக்க ஷெல் வந்து விழுந்தது. கால்ல பட்டது மட்டும்தான் தெரியும். என்னை ஹொஸ்பிட்டல் கொண்டு போனது, காலை எடுத்தது ஒண்டுமே தெரியாது. ஷெல் பட்டு மறுநாள் தான் எண்ட காலை எடுத்திருக்கிறாங்கள். நினைவு திரும்பிக் காலை பார்த்தபோது எனக்கு உலகமே தலைகீழாக இருப்பது போல இருந்தது. சரியான கவலையாக இருந்தது. நல்லா அழுதுட்டன்' என்ற கலைமதி அந்த நினைவை தொடர்ந்து மீட்க விரும்பாதவராய் தரையைப் பார்த்தார். பின்னர் ஏதோ நினைத்தவராய் அவரே தொடர்ந்தார்.

'பிறகு என்ன செய்யிறது. இங்க எல்லாருமே இப்ப இந்த நிலைமையில தானே இருக்காங்க. நாங்க இடம்பெயர்ந்து போகேக்க எல்லாம் செத்துச் செத்துக் கிடந்ததைப் பார்க்கேக்க நாங்களும் சாகணும் போலத்தான் இருந்தது. அந்த சம்பவங்களை நினைக்கேக்க இப்பவும் ஏதோ மாதிரித்தான் இருக்குது. என்ன செய்ய. அப்படியே கடவுள் துணையால நாங்க தப்பிப் பிழைச்சி வவுனியா செட்டிகுளம் முகாமில ஒருவருசம் இருந்தனாங்கள். முகாம் வாழ்க்கையை என்ன எண்டு சொல்லுறது. தண்ணிப் பிரச்சினை, சாப்பாட்டுப் பிரச்சினை எல்லாத்தையும் அனுபவித்துவிட்டம். 2010 5ஆம் மாதம் எங்கள கொண்டுவந்து தர்மபுரத்தில விட்டவங்க' என்றவரிடம் தற்போது வாழ்க்கை எப்படி போகின்றது என்று கேட்டேன்.

'முகாம் வாழ்க்கைய விட சொந்த வீட்டில இருப்பது சந்தோசம் தானே. நல்ல தண்ணி இல்ல கரண்ட் வசதி இல்ல. அப்பா கூலி வேலைக்கு போறார். ஒரு நாளைக்கு 800 ரூபாவரை கிடைக்கும். அதை வைச்சித்தான் சாப்பிடுறம். அம்மாவும் வருத்தக்காரி. அம்மா அப்பாவுக்குப் பிறகு என்ன செய்யிறது எண்டு இப்ப நான் தையல் பழகுறன். அதைப் பழகினா ஒருநாளைக்கு 500 ரூபாவோ 300 ரூபாவோ வந்தாக்கூட காணும். ஐக்கிய நாணய சங்கம் என்ற ஒரு சங்கத்தால தான் மெசின் ஒண்டு தந்தவங்கள். தையல் பழகி உழைப்பன் என்று நம்பிக்கை இருக்கு' என்றார் மனதில் உறுதியுடன்.




இங்கே என்ன விடயமாக வந்தீர்கள் எண்டு கேட்டேன்.

◀ சாகித்யா ▶

'என்னைப்போல காலை இழந்த அண்ணன் ஒருத்தர் இங்க மாற்றுக்கால் கொடுக்கிறாங்க எண்டு சொன்னவர். அதான் நாங்களும் வந்தம். முதல் போட்ட கால் பெல்ட் எல்லாம் அறுந்திட்டு ஒட்டித்தான் வைத்திருக்கு. ஒரு காலை நெடுகலும் போட்டுக் கொண்டிருக்கேலாது தானே. தண்ணி ஏதேனும்பட்டு நட்டுகள் எல்லாம் கழண்டு போயிடும். இன்னொரு கால் இருந்தால்தான் சுகம்' என்றார்.

தன் ஒரு காலை இழந்தாலும் நம்பிக்கையை சிறிதும் கைவிடாத கலைமதி தன் தோழிகளின் துணையுடன் எழுந்து செல்லும்போது பிரமித்துப் போனேன். ஊனம் என்பது உடலில் மட்டும்தான். மனதில் அல்ல என்பதை நிரூபித்துவிட்டார் கலைமதி. கலைமதி மட்டுமல்ல வன்னியிலுள்ள எல்லோரும் மனத்திடத்துடன் வாழ்வதைப் பார்க்க ஆச்சரியமாகத்தானிருக்கிறது.

# சாதி பார்த்து நீதிசொன்ன நாக்கு அழுகிப்போகட்டும்

*வள்ளுவன் தந்த வற்றாத தமிழ்க்கடலே...!*
*பாரதி பாடிவைத்த புரட்சியின் மறு உருவே...!*
*கற்புடைய கண்ணகியே எரிகிறது அடிவயிறு*
*அணைத்துவிட எழுந்து வாரீர்!*

*மூவேழு வருடங்கள் சிறையிலே வதையுண்ட*
*சாந்தன், முருகன், பேரறிவாளன் எனும்*
*அப்பாவித்தமிழர்களை தூக்கிலே போடும்படி*
*காந்தியம் சொல்லியதாம்!*

*அந்தி நேரம் என் காதில் வந்த செய்தியதால்*
*விழியிரண்டும் விறகாக பற்றியல்லோ*
*எரிகிறது எம்மவர் உயிர்காக்க எங்கெங்கோ*
*திரிகிறது என்னடா என்ன நீதியிது? ஏன் என்று*
*கேட்பதற்கு நாதியற்ற தமிழனடா?*

*குற்றமின்றி அப்பாவிகளை தூக்கிலிடும் சேதி என்ன?*
*நீதி தேவதையே தமிழன் நாடி அறுக்க*
*நினைப்பதென்ன பழி என்ன பாவம் என்ன?*
*அப்பாவிகளை கொல்லச்சொன்ன நோக்கம் என்ன?*

*எம் இனம் அழிக்கும் காங்கிரஸ் பேய்களுக்கு*
*என் வீட்டு பிள்ளைகளைக்கொடுப்பதுவோ?*
*கேட்கின்றாள் தமிழன்னை-வஞ்சகத்தின் வாள்*
*முனைக்கு என் வாரிசுகள் பலியாகிப்போவதுவோ?*
*கதறுகின்றாள் அவன் அன்னை.*


*கேட்கின்றேன் தமிழா நான் உன்னை-நீ என்ன*
*சாகப்பிறந்தவனா இல்லை சபிக்கப்பட்டவனா*
*பொறுமையாக இருக்கின்றாய்போல் பொறுமை*
*தான் சிறந்ததடா பொறுத்திரு! பொறுத்திரு!*
*நாளை உன் இனம் அழிந்தபின்பு*
*அவர் எலும்புகளை பொறுக்கி எடு.*

*ஈழத்தமிழனைப்பார் தளராத தலைவனைப் பார்*
*தானக வீரம் வரும் இன்றல்ல நேற்றல்ல-இந்திய*
*தேசத்திலே உன் இனம் இழிநிலையாய் வாழுவது*
*இன்றுடனே முடிவுறட்டும் வங்கக்கடல் கொதிக்க*
*வா வெளியே நீதி காக்க...*

*சாந்தன், முருகன், பேரறிவாளன் என்ற உன் உடன்*
*பிறப்பை மீட்டுவர் உடன் எழுந்து விரைந்துவாடா!*
*இளைய ரத்தங்களே கொதித்தெழுந்து வாருங்கள்!*
*கொப்பளிக்கும் உன் உதிரம் பூமியைக் கழுவட்டும்!*
*சாதி பார்த்து நீதிசொன்ன நாக்கழுக்கிப்போகட்டும்!*

*நீதிகாப்போம், நீதிகாப்போம் தமிழ்ச்சாதி வாழ*
*நீதிகாப்போம் மரணித்த மானிடத்தே*
*மரண தண்டனை தேவையில்லை*
*ஒன்றுபட்டுக் குரல் கொடுப்போம்*
*எம் உறவுகளை மீட்டுவிடுவோம்!*

**- சங்கிலியம்**



03.10.2011
காத்திருப்பு 01 | இருக்கை 27

# வலுவிழக்கும் வாழ்வியல்

வணக்கம் என் உறவுகளே...!

பொய்மையும் வன்மமும் சூழ்ந்த மாய நகரங்களாக மாறிக்கொண்டிருக்கும் எங்களின் பூர்வீக நிலங்களின் வாழ்வியல் வரலாறின்றி மறைந்துவிடும் நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. நமது ஊர்களில் அடிக்கடி தோன்றும் மாயக் காட்சிகளும் மாயமனிதர்களின் புனரமைப்புக் களங்களும் அதைத்தொடர்ந்து வரும் பத்திரிகை அறிக்கைச் சண்டைகளும் எங்கள் வாழ்வியல் மீதான இருப்பைத் தினம் தினம் சாகடித்துக் கொண்டிருக்கின்றன.

வரலாற்றுடன் வாழ்ந்த இனம் இன்று மரபுரிமைச் சின்னங்களைக்கூட பாதுகாக்க முடியாத நிலையில் வாய் பொத்தி கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. அதிகாரத்திலுள்ளவர்கள் தங்கள் அந்தரங்கங்களை மறைப்பதற்காய் ஆடும் மங்காத்தா ஆட்டம் எங்கள் இனத்தின் ஆணி வேர்களையே பிடுங்கியெறிய வேண்டிய நிலைக்குத் தள்ளியிருக்கிறது.

எங்களுக்கான மரபுரிமைச்சின்னங்களைத் தேடி எங்கள் வாழ்வியலை அடையாளப்படுத்த நாமோ முயன்று கொண்டிருக்கும் இவ்வேளையில் சில பூதங்கள் எங்கள் வாழ்வியலை நாசம் செய்தவர்களுடன் சேர்ந்து தங்களின் சுயலாபங்களுக்காக தேவாரம் பாடிக்கொண்டிருக்கின்றன.

எங்கள் மூதாதையர்கள் வாழ்ந்த நிலம், அவர்கள் கைபட்ட பொருட்கள். அவர்களின் வாழ்வியல் என வரலாற்றுப் பின்னணியுடன் வாழ்ந்த எங்கள் கொள்ளுப் பாட்டனார்களின் பரம்பரைகளை இன்று யுத்தம் தின்றுவிட்டிருப்பதால் மிஞ்சிய அவர்களின் பொருட்களை யாவது எங்கள் புராதனம் சொல்லும் பாரம்பரிய எச்சங்களாக்கி பாதுகாத்து வருகின்றோம்.

எம் வாழ்வின் அடையாளச் சின்னங்கள், மதச் சின்னங்கள். பண்பாட்டுச் சின்னங்கள் அனைத்துமே எம் வாழ்வியலுடன் பின்னிப்பிணைந்து நிற்பவை. எங்களை யுத்தம் நாசமாக்கியது போதாதென்று புனரமைப்பு, நிர்மாணம் என்ற பெயர்களில் எங்கள் சின்னங்கள், இன்று சின்னாபின்னமாக்கப்பட்டு வருவதுதான் வேதனையளிக்கின்றது.

அவர்களுடைய படையெடுப்பில் வீசிய எறிகணைகள் எம் புராதனங்களை புகையுடன் சேர்த்து மேலெழுப்பியபோது எங்கள் நா குழறியது. சொல் பிறழ்ந்தது. படிமங்கள் உடைந்தன. வாழ்க்கை குருதி இழந்தது. கலாசார விழுமியங்கள் வீணாய்ப்போயின. எறிகணை பட்டுத் தெறித்து காயம்பட்ட எங்கள் முதுசங்கள் தங்களின் அவயவங்களை அடுத்த தலைமுறைக்கான வாழ்வியலை வளரவைப்பதற்காய் தேடிப்பிடித்து எங்கள் கைகளில் ஒப்படைத்து விட்டுச் சென்றிருக்கின்றன.


எங்கள் நூலகத்தை எரித்தார்கள், கல்வி வளத்தைத் திட்டமிட்டுச் சிதைத்தார்கள், பழம் பெருமை சொல்லும் வீரனாய் நிமிர்ந்து நின்ற சங்கிலியனை இடித்தழித்து அரசியல்வாதி ஆக்கினார்கள். புராதனமான யாழ்ப்பாணக் கோட்டையை இடித்து மாற்றங்களுக்குள்ளாக்கி தங்கள் வசதிகளுக்கேற்ப கட்டினார்கள், எம் மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட புராதன கல்வெட்டுக்களை தங்களுடையவைகளாக மாற்றினார்கள், இன்றோ எம்மண்ணிலிருந்து பழங்கால பொருட்களை பல இலட்சம் மதிப்புள்ள நோட்டுக்களாக மாற்றிக் கொண்டு செல்கிறார்கள்.

இப்படி எத்தனையோ வழிகளில் எங்கள் வாழ்வியல் வலுவிழந்து கொண்டு போகிறது. எங்கள் வாழ்வியலைப் பாதுகாக்க எங்கள் மரபுரிமைகளைப் பேண எவரும் வரப் போவதில்லை. எங்கள் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருக்கும் மிகப்பெரிய பணி எங்கள் முதுசங்களின் வாழ்வியலை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்வதே.

இவற்றையெல்லாம் தாண்டி இந்தப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதானால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களும் நிலத்தின் மீதான அதிகாரங்களும், நீதித்துறை அதிகாரங்களும் கொண்ட அதிகாரப் பகிர்வுக் கட்டமைப்பு அவசியமானது. மாநில மட்டத்திலான அரச கட்டமைப்பிற்குள் இது அடங்க வேண்டும்.

மரபுரிமைச்சின்னங்களை பாதுகாப்பதற்காய் வீறுகொண்டெழுந்து நிற்கும் இளைஞர் சமுதாயம் துணிவுடன் பயணிக்க முதுசங்களின் ஆசீர்வாதங்களுடன் அடுத்த இதழில் சந்திக்கின்றேன்.

ஆசிரியர்




# பழைய பூங்காவென்ன? புதிய பூங்காவென்ன?

'நக்குற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன' என்று தமிழில் ஒரு பழமொழியிருக்கிறது.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் குறிப்பாகவும் வடக்கில்பொதுவாகவும்நடக்கும்சம்பவங்கள் சில இந்தப் பழமொழியை நினைவூட்டுகின்றன. பழைய அடையாளங்கள் அதாவது விடுதலைப்புலிகள் காலத்தைச் சேர்ந்த அடையாளங்கள் என்று கருதப்படும் எந்த அடையாளங்களும் இருக்கக்கூடாதென்று ஸ்ரீலங்கா ஜனநாயக சோஷலிச நாட்டின் வடமாகாண ஆளுநரான மேஜர் ஜெனரல் சந்திரசிறி சில மாதங்களுக்கு முன்னர் ஒரு வைபவத்தில் தெரிவித்ததாக நினைவு.

வடக்கில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெறவிருந்த சமயத்தில் முத்திரைச் சந்தையடியில் மாவீரன் சங்கிலியன் சிலை உடைக்கப்பட்டதும் ஆளுநரின் கூற்றை நினைவு வைத்து எதிர்ப்புக் கிளம்பியது.

இல்லையில்லை அப்பொழுதிருந்த சிலையில் வீரமில்லாததால் வீரமுள்ள சங்கிலியனை நிறுத்துவோம் என்று நகரமேயரும், யாழ்ப்பாணத்தின் தமிழ் அமைச்சரும் சொன்னார்கள். சொன்னபடி தேர்தலுக்கு முன் சங்கிலியன் குதிரையுடன் நிறுத்தப்பட்டான். ஆனால், பழைய அடையாளங்கள் என்று ஆளுநர் சொன்னதன் அர்த்தம் புரியவில்லையோ அல்லது பழையவை என்றால் அதிலென்ன முந்தியவை பிந்தியவை? எல்லாமே பழையவைதானே என்று எடுத்துக் கொண்டார்களோ தெரியவில்லை.

யாழ்ப்பாணமே பழையதுதானே. நாட்டில் எந்தவொரு இடமும் பகுதியும் எந்தவொரு பிரிவினருக்கும் இனத்துக்கும் சொந்தமானதல்ல என்று அமைச்சர் பசில் ராஜபக்ஷ சொன்னதன் அர்த்தத்தை சரியாக விளங்கிக் கொண்டார்களோ தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தின் அரச செயலகம், அரசாங்க அதிபரின் அலுவலகம், அரசாங்க அதிபரின் வசிப்பிடம், தேர்தல் அலுவலகம் யாவும் இப்போதுள்ள புதிய அரச செயலகம் அமைக்கப்படுவதற்கு முன்னர் இப்போது தரைமட்டமாக்கப்பட்டுவிட்ட பழைய பூங்கா என்றழைக்கப்பட்ட அழகான சோலையின் நடுவே அமைந்திருந்த கட்டடத்தில்தான் அமைந்திருந்தன.

1961ஆம் ஆண்டு ஈழத்துக் காந்தி எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் பழைய பூங்காவை உள்ளடக்கிய கச்சேரி வாயிலிலும் பழைய பூங்கா வாயிலிலும் தொடங்கிய சத்தியாக்கிரக போராட்டம் பிரசித்தி பெற்றதுடன் பழைய பூங்காவும் பிரசித்தமானது.

'பழைய பூங்கா' தொல்லியல் நினைவுச் சின்னங்களுள் ஒன்று முதல் வெள்ளைக்கார ஆளுநரிலிருந்து சமீப காலம்வரை பின்னர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்கள் பலர் இந்த பழைய பூங்காவிலுள்ள அரசாங்க அதிபரின் இல்லத்திலேயே வாழ்ந்தனர். தொல்லியல் நினைவுச்சின்னமாக விளங்கிய பழைய பூங்கா கட்டடங்கள் யாவும் கடந்த 28ஆம் திகதி புதன்கிழமை வடமாகாண ஆளுநரின் கட்டளையின் பேரில் இடிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. தாம் அப்படி உத்தரவிடவில்லை என்று ஆளுநர் மறுத்திருக்கின்றார். பழைய பூங்கா கட்டடங்கள் இடித்தழிக்கப்பட்டது பற்றி யாழ். மாவட்ட செயலாளரும் அரச அதிபருமான இமெல்டா சுகுமார், இங்கு என்ன நடக்கிறதென்றே தனக்குத் தெரியவில்லை என்று அங்கலாய்க்கின்றார்.

பழைய பூங்கா கட்டடங்களின் சுவர்களில் மரங்கள் முளைத்திருக்கின்றன. அவற்றை அகற்றப் போவதாக தொல்லியல் இலாகாவுக்கு ஆளுநர் எழுதிய கடிதத்தின் ஒரு பிரதி தமக்குக் கிடைத்ததாகவும் அது பற்றி எதுவும் செய்வதற்கு முன் கட்டடங்கள் இடிக்கப்பட்டு தரைமட்டமாகியதாகவும் இமெல்டா சுகுமார் தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா இனி இல்லை, தமிழருக்கென தனிப்பிரதேசம் இல்லை, பழைய பூங்காவென்ன புதிய பூங்காவென்ன?

**- எஸ்.எம்.ஜி.**


இருக்கிறம்
ஒரு பொல்லாப்புமில்லை
வார இதழ்

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் வெளியிடப்படுகிறது.

3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு - 07.
தொலைபேசி : +94 11 3150836
தொலைநகல் : +94 11 2585190
மின்னஞ்சல் : irukiram@gmail.com
இணையம் : www.irukkiram.tk

| | |
|---|---|
| ஆசிரியர் | : அருளானந்தம் சஞ்ஜீத் |
| நிர்வாக ஆசிரியர் | : சாந்தி சச்சிதானந்தம் |
| செய்தி ஆசிரியர்கள் | : கலாவர்ஷ்னி கனகரட்ணம்<br>தவநாதன் இரவிவர்மன் |
| நிருபர் குழு | : தர்மராசா சிந்துஜா<br>கந்தலிங்கம் மாலா<br>அருமைத்துரை ஜசீகரன் |
| கார்ட்டூன் | : சஞ்ஜீத் |
| புகைப்படம் | : யாத்ரா<br>தமிழியன் |
| பக்க வடிவமைப்பு | : முஹம்மட் பிறவ்ஸ்<br>முஹம்மட் அஸாம் |


கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.




# போராட்டங்கள் பல போராட வேண்டியவைகளும் பலவே

கடந்த வாரம் யாழ். விழுது அமைப்பின் காரியாலயத்தில் தென்னாசியாவில் பால்நிலைக் கண்ணோட்டம் பற்றிய ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தமிழ்நாட்டிலிருந்து வந்த பெண்ணிலைவாதி பியூலா அஸரய்யா அவர்கள்தான் பேச்சாளர். குறிப்பாக, இந்தியா பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகளில் பெண்கள் இயக்கங்கள் எதையெதையெல்லாம் குறித்து தமது போராட்டங்களை முன்னெடுத்திருக்கின்றன என்பது பற்றி விளக்கினார்.

இந்தப் போராட்டங்களின் தன்மைகளை ஆராய்ந்து பார்த்தால், எமது பிராந்தியத்தின் பொதுப்படையான ஒடுக்குமுறைகளை அறிந்துகொள்ளலாம். முதலாவதாக நின்றது சாதீய அடிப்படையிலான ஒடுக்குமுறைகளே. தலித் பெண்களின் போராட்டங்கள் இதனைத் துல்லியமாகக் காட்டின. அடுத்து சிறுபான்மையினத்தவர் அனுபவித்த ஒடுக்குமுறைகள். இந்தியாவிலிருந்தே பல உதாரணங்கள் இதற்குக் காட்டப்பட்டன.

அடுத்து வர்க்கரீதியிலான ஒடுக்குமுறை. இந்தியாவின் முறை சாரா தொழிற்றுறையில் இருக்கும் தொழிலாளர் பெண்கள் எவ்வாறு தங்களை அணிதிரட்டிக் கொண்டனர் என்பது இங்கேயிருக்கக்கூடிய வீட்டு வேலையாளர்களுக்கும் வீட்டிலிருந்து கொண்டே பீஸ் வேர்க் செய்யும் தொழிலாளர்களுக்கும் ஓர் உந்து சக்தியாக நிச்சயம் அமையும். கலாசார மத அடிப்படையிலான அநீதிகளையும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை. உதாரணமாக பாகிஸ்தான் பெண்கள் அனுபவிக்கும் 'கௌரவக் கொலைகள்' (Honour Killings). ஒரு பெண் தனது பாலியல் நடத்தையில் ஏதேனும் பிறழ்வு காட்டிவிட்டாளென்றால் அவள் அந்தக் குடும்பத்துக்கே இழுக்கு என பெரியவர்களால் தீர்மானிக்கப்பட்டு கொல்லப்படுவது என்பதே இது.

பியூலா நம் முன்வைத்த அனுபவக் கலவையை ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் பல உண்மைகள் தென்படும். எம்மைச் சுற்றியுள்ள சகல வர்க்க இன சாதீய அடிப்படையிலான ஒடுக்குமுறைகளுக்குள்ளும் பெண்ணொடுக்குமுறை விரவியிருந்ததே. தலித் மக்கள் நசுக்கப்படுகிறார்கள்தாம். ஆனால், அவர்களுக்குள்ளும் தலித் பெண்கள் இன்னமும் நசுக்கப்படுகிறார்கள். 'தீண்டாமையில் ஒதுக்கி வைக்கப்பட்டாலும் அவர்கள் தீண்டப்பட்டவர்களாக (உயர் சாதியினரால் பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்தப்படுபவர்களாக) ஆகின்றனர். தமது குழுவினரைச் சேர்ந்த ஆண்களின் கைகளிலும், தம்மை ஒடுக்கும் குழுவினைச் சேர்ந்த ஆண்களின் கைகளிலும், ஆண்டோர்கள் முதலாளிகள் போன்றோர் கைகளிலும் வன்முறையையும் தொழில் ரீதியிலான சுரண்டல்களையும் வேதன அடிப்படையிலான பாகுபாடுகளையும் கூடிய பங்கு அனுபவிப்பவர்கள் பெண்களே.

பெண்களின் நலிவுத்தன்மை (vulnerability) அவர்களின் வர்க்கத்தின் அடிப்படையிலும் சாதியின் அடிப்படையிலும் அவர்களின் இனத்தின் அடிப்படையிலும் அவர்களின் தொழிலின் அடிப்படையிலும் எவ்வாறு உருவாகின்றது என்பதைக் காட்டினார். அதற்கு எங்களுடைய மத நிறுவனங்களும் கலாசார விழுமியங்களும் எவ்வாறு கைகொடுக்கின்றன என்பதையும் காட்டினார்.

ஒரு மணி நேரமாக அவர் எங்களுக்குத் தந்த பார்வை, இலங்கையில் இருக்கும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கான விழிப்புணர்வாகவும் இருந்தது. இன சாதீய வர்க்க கட்டமைப்புக்கள் ஒன்றையொன்று சார்ந்தனவாக ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக இருக்கக் கண்டோம். ஒரு உதாரணம் சொல்லப்போனால், எந்தப் பெண்ணினதும் பால்நிலையும் அவளது சாதியும்தான் அவளது வர்க்கத்தையும் அவளது தொழில் நிலையையும் தீர்மானிக்கின்றன எனலாம். ஆனால், அவளது சாதி அந்தஸ்தோ இனத்துக்கு இனம் மாறுகின்றது. இங்கு இலங்கையில், சிங்களவரிலும் யாழ்ப்பாணத் தமிழர் மத்தியில் சாதி வேற்றுமைகள் அதிகம் என்று சொல்லப்படுவது இதற்கு ஒரு உதாரணமாகும். எனவே ஒரு ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடுபவர்கள், ஏனைய ஒடுக்குமுறைகளினால் உருவாக்கப்படக்கூடிய நலிவுத்தன்மைகளையும் அகற்றப் போராடினாலன்றி அவர்கள் போராடும் முதன்மையான ஒடுக்குமுறையை அகற்ற முடியாது என்பது இதிலிருந்து தெட்டத்தெளிவானது.

இதுவரைகாலமும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டமானது இன விடுதலை என்கின்ற ஒரு பரிமாணத்திலேயே நின்று கொண்டிருந்தது. தமிழ்ச் சமூகம் மத்தியில் இருக்கக்கூடிய ஏனைய நலிவுத்தன்மைகளான சாதீய ஒடுக்குமுறைகள் மற்றும் பெண்ணொடுக்குமுறைக் கட்டமைப்புக்களை, தேசிய விடுதலைப் போராட்டம் தகர்க்க முயற்சி செய்யவில்லையே. நாங்கள் எங்களுக்குள் பல ஊனங்களைச் சுமந்து கொண்டிருக்கின்றோம். இதற்குள் வில்லெடுத்து சமர் செய்வது எப்படி? இந்தப் பார்வை கொண்டு எமது தேசிய விடுதலைப் போராட்டம் நகர்த்தப்பட்டிருந்தால் எவ்வாறு உருவம் பெற்றிருக்கும் என மனக்கண்ணில் விரிகின்றன காட்சிகள்.




பியூலா அஸரய்யா

தமிழ்த் தேசியக் கட்சிகள் வடக்கு, கிழக்கு பிராந்தியத்திலுள்ள பெண் விடுதலை இயக்கங்களுடன் கை கோர்த்து நிற்கும். தொழிற்சங்கங்களின் போராட்டங்களில் இணைந்து கொள்ளும். சாதி ஒழிப்பிற்கான போராட்டங்களைத் தமது அரசியல் விஞ்ஞாபனங்களாக வைத்துக்கொள்ளும். இந்த வகையில் ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக, ஒருவரது போராட்டத்தை மற்றவர் ஊக்குவிப்பதாய், ஒருவரை மற்றவர் பலப்படுத்துபவையாய் அது அமையும். கற்பனை செய்து பாருங்கள். தினம்தினம் போராட்டத்தில் குதிப்பதற்கு ஏதோவொரு விடயம் கையில் அகப்படுமே.

இன்று பெண்கள் மீதான வன்முறைக்கு றோட்டில் இறங்கும் கட்சிகள் நாளை வன்னி விவசாயிகளுக்கான உர மானியத்துக்காக றோட்டில் இறங்கி, நாளை மறுநாளுக்கு யாழ். சிறுபான்மைத் தமிழர்கள் பிரதான சமூகத்துடன் ஒன்றிணையும் கோரிக்கைக்காக றோட்டில் இறங்கி இவ்வாறு ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தையும் அவரவர்களின் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக அணி திரட்டுமே. அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பிரத்தியேகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதால் மேலும்மேலும் தாம் வலுப்பெற்று பின் பொதுவான தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் வலுச் சேர்ப்பதாய் அமையுமே.

ஒரு மக்கள் போராட்டத்திற்கான எவ்வளவு வாய்ப்புக்கள் உருவாகியிருக்கும். சும்மா இனப்பிரச்சினையின் தீர்வுக்காக சத்தியாக்கிரகம் என்று மென்ற அவலையே திரும்பித்திரும்பி மென்று இப்பொழுது எதனை மெல்வது என்று மெல்ல முடியாமலும் விழுங்க முடியாமலும் இருக்கின்றது எங்களது அரசியல் தலைமைத்துவம். தனித்தனியாக அங்கொன்றும் இங்கொன்றுமாய் நின்று அறிக்கைகளை விடும் வித்தைகள் செய்கிறார்கள்.

இப்படி நாமெல்லோரும் அரசியல் தத்துவ விசாரங்களில் ஆழ்ந்துவிட, கேள்வி நேரம் வந்தது. யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் தொழிலாற்றுபவர் களும் கூடியிருந்த அந்த சபையில் இந்தப் பேச்சுக் குறித்து என்னனென்ன கேள்விகள் வந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள். 'பெண்தான் பெண்ணுக்கு எதிரி, பாருங்கள் மாமியார்கள்தான் சீதனம் கேட்கிறார்கள்!'. 'கிறீஸ் மனிசனுக்கு இந்தப் பெண்கள் இயக்கங்கள் எங்கே குரல் கொடுத்தன!' இந்த வகையறாதான். கழிவிரக்கம்தான் எஞ்சியது.

எத்தனை சபைகளில் இந்த மாமூல் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லியாயிற்று இன்னும் எத்தனை சபைகளிலப்பா இதைத் திருப்பித் திருப்பிக் கேட்பார்கள். இன்னும்எவ்வளவுகாலந்தான்கண்ணைமூடிக்கொண்டிருப்பார்கள். மாப்பிள்ளையின் அம்மாதானே சீதனம் கேட்கின்றார் பெண்ணின் அம்மா வாய்பொத்திக் கொண்டுதானே இருக்கின்றார், என அந்தப் பெண்கள் ஒரு தந்தையுரிமைச் சமுதாயத்தின் அடிப்படையில் தான் தமது அதிகாரங்களைப் பெறுகின்றனர் அல்லது இழக்கின்றனர் என்பதை உணர்த்தினார் பியூலா என்பது அடுத்த கதை. அதே போலத்தான் பெண்கள் அமைப்புகள் பற்றியும் பதில் கேள்விகள் கேட்க வேண்டியிருந்தது. கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை யாகிப் போனது கலந்துரையாடல் பகுதி.

பியூலாவின் உரைக்கு எதிர்வினையாக படித்த சமூகத்தினர் மத்தியிலிருந்து வந்த கேள்விகள் எமது சமூகத்தின் சிந்தனைத் தளங்களைக் கோடு காட்டிற்று. இன்னமும் அவர்கள் நுனிப்புல் மேய்ந்து கொண்டிருக்கிறார்களா என்கின்ற கேள்வியையும் எழுப்பிற்று. இன விடுதலைக்கு கற்றோர் மத்தியிலான அறிவுத் தேடல், ஒரு மறுமலர்ச்சி, நிச்சயம் அவசியமாகும்.

# நாடும் நடப்பும்

## கிளம்பிட்டாங்கய்யா கிளம்பிட்டாங்க

கேட்டியளோ சங்கதிய ஐ.நா. தலைவர் கொலைக்களம் பாக்கேல்லயாமுங்கோ. அவர் ஏற்றுக்கொள்ளப்படாத பொய்யளப் பாக்காதவராமுங்கோ. அதுதானுங்கோ சனல் நாலு வெளியிட்ட வீடியோவ அவர் இன்னும் பாக்கேல்லயாம். ஆனா பாருங்கோ மகராசன் இலங்கை அரசாங்கம் வெளியிட்ட வீடியோவப் பாத்தவராம். மனித உரிமை அமைப்புக் களெல்லாம் கத்து கத்தெண்டு கத்துதுகளுங்கோ. ஆனாப் பாருங்கோ உலகத்தின்ர தலைவர் தான் எண்டு சொல்லுற உவர் தனக்குக் குடுத்த வீடியோவில என்ன கிடக்கெண்டாவது பாக்காம விட்டிட்டாருங்கோ. உதுதானுங்கோ உலகத்தலவற்ற பொறுப்பு. இரண்டாம் உலகப்போர் நடந்தாப்பிறகு நாடுகளுக்கி டையில யுத்தங்கள் வரக்கூடாது. யுத்தங்கள் வந்தா மனித உரிமைகள் மீறப்படாது அது மதிக்கப்படோணும் பாதிக்கப்பட்டவைக்கு நீதி கிடைக்கோணும் எண்டுதானுங்கோ உவர் தலைவரா இருக்கிற உந்த அமைப்பே தொடங்கினவங்களுங்கோ. ஆனா, உவயள் பணக்கார நாடுகள் குடுக்கிற காசில உல்லாச வாழ்க்கை அனுபவிக்கிறத்துக்கும். உலகத்தச் சுற்றி சுற்றுலா போறத்துக்கும் காணுங்கோ உங்க அமைப்ப பயன்படுத்தினம் போலக் கிடக்குங்கோ.

பின்னப்பாருங்கோ யுத்தம் நடக்கேக்க சனம் கத்து கத்தெண்டு கத்தினதுகளுங்கோ. உவர் ஐ.நா. தலைவர் சனம் சாகட்டும் எண்டு விட்டுட்டாருங்கோ. யுத்தம் முடிஞ்சாப்பிறகு ரூறிஸ் மாதிரி ஒருக்கா வந்து பாத்திட்டுப்போனவர் தெரியுமே. பிறகு மறந்து போனாருங்கோ. உந்த மனித உரிமைக்காரங்கள் கத்திக்குழறினதில நிபுணர் குழு அறிக்கை எண்டு ஒண்ட விட்டவர். அது இப்ப கறையான் பிடிச்சிருக்கோ இல்லாட்டிக்கு எலி அரிச்சிருக்கோ தெரியாதுங்கோ. அவர் அடுத்த முறையும் தலைவர் பதவிக்கு போட்டி போடப்போறாராமுங்கோ. அதுக்குத்தானா முங்கோ உவர் சிலதுகளக் கண்டும் காணாம இருக்கிறாராம்.

உப்பிடிப் பொறுப்பில்லாம நடக்கிற ஐ.நா. தலைவர்மார பிடிச்சு உள்ளுக்க போடுறத்துக்கும் ஏதும் சட்டம் கொண்டு வரவேணும் பாருங்கோ. உவரும் ஒருநாளைக்கு பதில்சொல்ல வேண்டிய காலம் வரும். அதுதான் பாருங்கோ எட்டரக்கோடி தமிழனுக்கும் தான்தான் தலைவரெண்டு சொன்ன ஐயா கருணாநிதியையே சனம் எதிர்க்கட்சி அந்தஸ்துகூட குடுக்காம தெருவில விட்டுடுத்துகளுங்கோ. மக்கள் முடிவு பண்ணினா எதையும் செய்திடலாமெல்லே.

உதச் சொல்லேக்க தானுங்கோ ஒண்டு ஞாபகம் வருதுங்கோ. யாழப்பாணத்தில தாங்கள் தான் கிருஸ்ண பரமாத்மா எண்டு சொல்லிக்கொண்டு சில ஆக்கள் கிளம்பிட்டினமுங்கோ. உவயள் சங்கு முழங்குவமெண்டும் சக்கர வியூகம் அமைப்பம் எண்டும் சனத்துக்கு கதையள் விட்டீனமாமுங்கோ. தாங்கள் தான் உண்மையான தமிழ்மக்களின்ர பற்றாளர்கள் எண்டு சொல்லிக்கொண்டு தமிழ்க்கூட்டமைப்ப கருவறுக்க கங்கணம் கட்டியிருக்கினமாமுங்கோ. ஒரு பக்க அரசியல் பேசுற உவயள் தமிழ்ச்சனங்கள் விரும்பி வாக்குப்போட்ட தமிழ்த் தலைமையள் சரியில்ல எண்டும் தாங்கள் புதுசா வியூகம் அமைச்சு தமிழ்ச்சனத்தக் காப்பாத்தப்போறமெண்டும் சொல்லித் திரியினமாமுங்கோ. அதுக்கு சூரியக் கட்சித் தலைவர உசுப்பேத்தி தீண்டிவிடுற முயற்சியிலயும் ஈடுபட்டிருக்கீனமாமுங்கோ.

அவற்ற தலைமையில அந்தக்கட்சி போனகிழமை கட்சி மாநாடு நடத்தினதும் உவயளின்ர பின்னணியில தான் எண்டு அரசல் புரசலா கதையள் அடிபடுதுங்கோ. தமிழ்க்கூட்டமைப்ப உடைச்சு அதில இருக்கிற சில கட்சியள வளைச்சு சூரியனுக்கு கீழ அணிதிரட்டி தங்கட தாளத்துக்கு அவயள ஆட்டுவிக்க பிளான் பண்ணுறதாவும் கதையள் உலாவுதுங்கோ.

அதுக்குத்தானுங்கோ இப்ப உவயள் கூட்டமைப்புத்தான் இலங்கை அரசாங்கத்த நடத்துறமாதிரி, என்ன நடந்தாலும் அடிக்கடி கூட்டமைப்புத்தான் பொறுப்பு கூட்டமைப்புத்தான் பதில் சொல்லோணும் எண்டு கதையள் விடீனம் பாருங்கோ. சனத்துக்கு நல்லது செய்யிறமாதிரி நடிச்சு தமிழ்ச்சனத்த வித்து பிழைப்பு நடத்துற உவயள மாதிரி ஓநாய்க் கூட்டங்கள சனம் நல்லா இனங்காணோணும் பாருங்கோ.

**- வண்டில்கார வைரவி அப்பு**




போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தாலும் இதைத் தடுப்பது தற்போது நடைமுறைச் சாத்தியமற்ற விடயமாகவே பலராலும் கருதப்படுகின்றது. கசிப்பு எனும் விலை குறைந்த, தரம் குறைந்த போதைப் பொருளால் மூழ்கிக் கிடந்த மலையகம் தற்போது கள்ளச்சாராயத்துக்கும் அடிமையாகியுள்ளது.

மலைத் தொடர்களையும் காடுகளையும் புதர்களையும் கொண்ட இடமாக மலையகப் பகுதிகள் காணப்படுவது கள்ளச்சாராய உற்பத்திக்கும் விற்பனைக்கும் ஏதுவாக அமைந்துவிடுகின்றது. காவல்துறை அமைந்துள்ள பகுதிகளும் பெரும்பாலும் தோட்டப் புறங்களிலிருந்து வெகு தூரத்தில்தான் காணப்படுகின்றது. (அருகில் இருந்தால் மட்டும் வந்து பிடிப்பார்களாக்கும்)

இக்கள்ளச் சாராயமானது மதுச்சாலையிலும் விற்பனைக்குண்டு. இது போத்தலொன்று 75 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. தோட்டப்புறங்களில் கஷ்டப் பட்டு வேலை செய்யும் தொழிலாளர் வர்க்கத்தினர் இப்புதுவிதமான போதையேற்றும் பொருளை அருந்துவதில் மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றனர். கசிப்பு உற்பத்தியிலும் விற்பனையிலும் கெடுபிடிகளுக்கு உள்ளானோருக்கு இது நல்ல வாய்ப்பாக அமைந்து விடுகின்றது. நகர்ப்புறங்களுக்கு மிக அருகாமையிலுள்ள பெரும்பாலான தோட்டப் புறத்தவர்களின் பணம் இதிலேயே முதலீடாகின்றது. மலையகத்திலுள்ள பல பெரும் புள்ளிகள் தமது முன்னேற்றத்தினை மாத்திரம் கருத்திற்கொண்டு செயற்படுவதால் இதனைத் தடுக்கவோ அல்லது இந்நிலைமையை மாற்றியமைக்கவோ முன்வருவதில்லை. இதனால் தொடர்ந்தும் வீணாகிப் போவது தொழிலாளர் வர்க்கமேயன்றி வேறொருவருமில்லை.

பெருந்தோட்டப்புற தொழிலாளர்கள் ஒருநாள் கூலிக்காக மாடாய் உழைத்து சாக வேண்டிய சூழ்நிலையிலேயே உள்ளனர். இவர்களின் களைப்பைப் போக்க முன்னைய காலங்களில் மாலைவேளைகளில் ஆங்காங்கே கொட்டகை நாடகங்கள் நடத்தப் பட்டு வந்தன. அதை மக்கள் குழுமியிருந்து இரசித்து மகிழும் போது அவர்களின் களைப்பு தானாகப் பறந்தோடி விடும். காலப்போக்கில் ஏற்பட்ட நாகரீக வளர்ச்சியின் காரணமாக அந்த நாடகக்கலைகள் படிப்படியாக வீழ்ச்சியடைந்து போக அதன் இடத்தை கசிப்பும் இந்தக் கள்ளச்சாராயங்களும் பிடித்துக் கொண்டன. இதற்கு அடிமையானோர் தொடர்ந்தும் இதனை நாடிச் செல்வதாலும் விற்பனையில் எந்த இடையூறுகளும் இல்லாத காரணத்தாலும் இது நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகின்றது. அதிலும் வேதனை என்னவென்றால் தற்போது பெருமளவான இளைஞர்களும் இதற்கு அடிமையாகி விட்டனர் என்பதுதான்.



**எம். சந்திரசேகரன்**

இந்தக் கள்ளச்சாராய விற்பனையின் மூலம் தோட்ட மக்களின் பொருளாதாரம் முடக்கப் படும் சூழலே தற்போது மேலோங்கிக் காணப் படுகிறது. ஆகவே இதனை தற்போதே தடுத்து நிறுத்துவது காலத்தின் தேவையாகும். பொறுப்புவாய்ந்த அதிகாரிகள், மலையகப் பிரதிநிதிகள் இந்த விடயத்தில் சற்று சிந்தித்து செயற்பட வேண்டும்.

# யாழ் நகர வீதிகளில் வலம்வரும் பழைய மொடல் கார்கள்!!!



ஒல்ட் இஸ் கோல்ட்

என்னதான் புதிதாகக் கண்டுபிடிப்புகள் வந்தாலும் பழையனவற்றிற்கு உள்ள மதிப்பே தனிதான். புதுமை விரும்பிகளைப் போல பழமை விரும்பிகளும் இருக்கத்தான் செய்கின்றனர். பழைய உற்பத்திகளில் கார்களின் மவுசு தனித்துவமானது.

கார்களின் வரலாறு இங்கிலாந்தில் தான் ஆரம்பித்திருக்கிறது. மொரிஸ் மைனர், ஒக்ஸ்போட், பரீனா என பழைய கார்களின் வரலாறுகள் சுவாரஷ்ய மானவை. கார்களில் பிரயாணிகளை ஏற்றி இறக்கும் கார் டக்சி பிரயாணங்கள் இலங்கையில் 1970, 1980 களில் பிரபல்யம் பெற்றிருந்ததாகக் கூறப்படுகிறது. போக்குவரத்துச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டமை மற்றும் கஜஸ் போன்ற சொகுசு வாகனங்களின் வருகையும் ஆட்டோக்களின் வருகையும் கார் சவாரிகளின் வர்த்தகரீதியான பயணங்களைப் பின் தள்ளியிருக்கிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் தலைநகர் கொழும்பு உட்பட ஏனைய மாவட்ட நகரங்களில் பழைய மொடல் கார்களின் சவாரிகளுக்கு ஒய்வு கொடுக்கப்பட்டுவிட்டது என்றுதான் சொல்லலாம்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் பழைய கார்களின் வர்த்தகச் சவாரிகள் தற்போதும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறன. வீட்டுக்கு வீடு புதுப்புது வகை கார்களின் வருகை, சந்திகள் தோறும் ஆட்டோ சவாரிகள் என பிரயாணப் போட்டிகள் பல்கிப் பெருகிவிட்ட சூழலில் பழைய மொடல் கார்களின் சவாரிகளை நம்பி யாழ் நகர கார் சவாரிக்காரர்கள் சிலர் தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கென வாடகைக் கார் சங்கம் என்று ஒரு சங்கம்கூட இருக்கிறது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இந்தக் கார்களை அதிகம் காணலாம். அப்படி ஒருநாள் யாழ் ஆஸ்பத்திரி வீதியில் வரிசையாக நின்ற கார்களைக் கண்டு அதன் உரிமையாளர்களைச் சென்று சந்தித்தோம்.


அவர்களில் கே. இரத்தினம் என்பவர் வாடகைக் கார் சங்கத்தின் தலைவர். கடந்த முப்பது வருடங்களாக வாடகைக்கு கார் ஓட்டும் தொழில் செய்துவருகிறார். முப்பது வருட கால அனுபவம் என்பது சும்மாவா ென்ன? அவரும் தன் நீண்ட அனுபவத்தை எம்மிடம் பகிர்ந்துகொண்டார்.

◀ ஏ.யசீக் ▶

'நான் மைனர் கேம்பிரிச் என பல்வேறு ரகமான கார்களை மாறிமாறி வாங்கி ஓடியுள்ளேன். தற்போது எட்டு மாதங்களாக பரீனா ரகக் காரினைக் கொள்வனவு செய்து தொழில் செய்து வருகிறேன். தற்போது கார்ச் சவாரிகள் குறைந்துவிட்டன. கடந்த 30 வருடங்களில் பாரிய மாற்றத்தை என்னால் உணர முடிகிறது. தற்போது காலடி எடுத்து வைக்கும் இடங்களில் எல்லாம் ஆட்டோக்கள் வந்து நிற்கின்றன. பழைய மொடல் கார்களுக்கு யாழ்ப்பாணத்தில் தனி மவுசு இருப்பதால் எம்மால் தொழில் செய்ய முடிகிறது. ஆட்டோவை விட நாங்கள் நூறு ரூபா அதிகமாக அறவிடுகிறோம். 1980 காலப்பகுதியில் ஒரு கலன் பெற்றோலின் விலை 4ரூபா 75 சதம். தற்போது லீற்றர் 100 ரூபாவரை விற்கிறது. அக்காலப்பகுதியில் ஒரு மைல் தூரத்திற்கு ஐந்து ரூபா அறவிடுவோம். தற்போது 100 ரூபா அறவிடவேண்டி இருக்கிறது. யுத்தகாலத்தில் பெற்றோலுடன் மண்ணெண்ணெய் கலந்து ஓடினோம். தற்போது அந்த நிலைமை இல்லை. தனியே பெற்றோல்தான் பாவிக்கிறோம்' என்றார்.

1980 காலப்பகுதியில் இருந்து வாடகைக் கார்ச்சங்கம் இயங்குகின்றது. அன்றைய காலப்பகுதியில் சுமார் நூறுபேர்வரை சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்துள்ளனர். தற்போது 22 பேர்தான் சங்கத்தில் இருக்கின்றனர். நிர்வாக உறுப்பினர் களாக 9 பேர் இருக்கின்றனர். ஒவ்வொரு புதன் கிழமையும் இவர்களது சந்திப்பு இடம்பெறும். ஆனால் இவர்களுக்கான ஒரு நிரந்தரக் கட்டிடம் இல்லை என்பதை தலைவர் வருத்தத்துடன் கூறினார். அது பற்றி அவர் மேலும் கூறுகையில்

'இங்கு கார்கள் தரிப்பிடத்திலும், வீதி ஓரத்திலும்தான் ஒன்றுகூடுவோம். முன்னர் யாழ். மாநகர சபையால் ஒரு கட்டடத்தை தந்துவிட்டு பின் திருப்பி வாங்கிவிட்டார்கள். பின்



ஆலய வளவொன்றினுள் இருந்து செயற்பட்டுவந்தோம். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் அதுவும் சாத்தியமற்றுப் போய்விட்டது. எமது சங்கம் கார்ச்சாரதிகளுக்கான சட்டதிட்டங்களை இடுவது, குற்றங்கள் புரியுமிடத்து அவர்களிடம் தண்டங்கள் அறவிடுதல் போன்ற பணிகளைச் செய்கிறது. நாம் பிரயாணிகளிடம் இவ்வளவு பணம்தான் அறவிடுவது என ஒரு அளவு வைத்திருக்கிறோம். அளவிற்கு அதிகமாக ஏமாற்றிக் கட்டணம் அறவிட்டதாக எமக்கு முறைப்பாடு வந்தால் அதுபற்றியும் நாங்கள் விசாரணை நடாத்துகின்றோம்' என்று கூறினார்.

கார் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் சங்க உறுப்பினர்கள் அங்கு கூடி சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் நியாய அடிப்படையில் பேசித்தீர்த்து வைப்பர். மிகவும் சிக்கலான சந்தர்ப்பங்களில் மட்டுமே பொலிஸார் அதனை பொறுப்பேற்பர். அவ்வாறான ஒரு அழகான ஒழுங்குமுறையைப் பேணி வருகின்றனர் இக்கார்ச்சவாரி சங்கத்தினர்.



பத்மநாதன் க.இரத்தினம் நடராசா

தற்போது கார் ஓடும் தொழிலில் போதிய வருமானம் கிடைப்பதில்லை எனக் குறிப்பிடும் நடராசாவும் இத்தொழிலில் முப்பது வருடம்அனுபவம்வாய்ந்தவர். அவரைச் சந்தித்தபோது, 'நான் வட்டுக்கோட்டையில இருக்கிறனான். கடந்த மூன்று வருசமா மொரிஸ் மைனர் கார் தான் தொழிலுக்கு வச்சிருக் கிறன். முன்னாடி வேற கார்களும் வச்சிருந்தனான். இப்ப தொழில் மந்தமாப்போச்சு. இத விட்டுட்டு வேற தொழிலுக்கு மாறுறத்துக்கு மனமும் இல்ல. அதுக்கேற்ற வயதும் இல்ல. ஏதோ செய்த தொழிலையே செய்து சீவிக்கிறம்' என்று கூறியவர் சவாரிக்காக ஒருவர் வரவே எம்மிடம் விடைபெற்றுக்கொண்டு பறந்து விட்டார்.

இவர்கள் தாம் நினைத்தபடி பிரயாணிகளை வாங்கோ வாங்கோ எண்டு இடையில் நின்று கூப்பிட முடியாது. வரிசை ஒழுங்கில்தான் கூப்பிடவேண்டும். பிரயாணி தானாக விரும்பி வந்தால் எந்தக் காரிலும் போகலாம்.

இங்கு சிவா என்பவர் மற்றவர்களைவிட வித்தியாசமான யுக்தி ஒன்றைக் கையாண்டு வருகிறார். அவரிடம் காரும் ஓட்டோ வும் இருக்கிறது. இரு வாகன தரிப்புகளும் அருகருகில் நிற்பதால் இரண்டு தரிப்புகளிலும் தனது வாகனங்களை நிறுத்தியுள்ளார். ஓட்டோசவாரிக்கு வரும்போது ஓட்டோ, கார்ச் சவாரிக்கு வரும் போது கார் என இரண்டு வாகனங்களையும் வைத்து தொழில் செய்து வருகிறார்.

தனது முதல் புதிய கார் பயணத்தில் குடும்பத்தி னருடன் மடுத் தேவாலயத்திற்குச் சென்றுவந்ததாக தனது பழைய நினைவுகளை அசைபோட்ட திருநெல்வேலியைச் சேர்ந்த வடிவேலு பத்மநாதன் தான் கடந்த ஒரு வருடமாக ஒக்ஸ்போர்ட் கார் வைத்திருப்பதாக கூறுகின்றார்.

'நான் கடந்த 15 வருடங்களாக கார் ரக்சி ஓட்டும் தொழில் செய்துவருகின்றேன். வடக்கு மாகாணத்திற்குள் எங்கும் தற்போது ஓடித்திரிகின்றோம். எனினும் வவுனியா போன்ற தூர தேசங்களுக்கு ஓட்டங்கள் எப்போதாவது ஒருமுறை வரும். நாம் வைத்தியசாலை ஸ்ராண்ட், பஸ்தரிப்பிட ஸ்ராண்ட் என இரண்டு இடங்களில் கார்களை தரித்து வைத்திருக்கிறோம். எமது கார்கள் பழைய மொடல்கள் ஆகையால் திருத்தங்களும் திருத்தச் செலவுகளும் அதிகம். பழைய மொடல் கார்களை விரும்பி வாங்கி ஓடுபவர்களும் இருக்கிறார்கள். தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் தற்போதும் இவ்வகை கார்களையே வைத்திருக்கிறார்கள். சுமாரான பழையமொடல் கார்கள் ஒன்றரை இலட்சம் முதல் மூன்று இலட்சம்வரை போகின்றது. இதனால் எங்களுக்கு தொழில் முதலீடு பெரிதாக இல்லை' என்கிறார்.

தற்போது யாழ்ப்பாணத்தில் லீசிங் கம்பனிகள் பல்கிப் பெருகிவிட்டன. விதம் விதமான வாகனங்களையும் கார்களையும் லீசிங்கில் விற்றுத்தீர்க்கி றார்கள். எனினும்பழையமொடல்கார்கள்வீதிகளில் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன. பழைய மொடல் கார்கள் போக்குவரத்துச் சவாரித் தொழிலுக்கு பாரிய முதலீடற்ற பொருள் என்பதைத்தாண்டி இங்கிலாந்து தயாரிப் பான பழைய மொடல் கார்களின் பயன் பாட்டு கால அளவும் நீண்டதாகவே காணப்படுகின்றது.

கடந்தவாரம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற யாழ்ப்பாண வாழ்வியல் என்னும் கண்காட்சியில் பழைய மொடல் கார் ஒன்றும் ஓடுகின்ற நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது ஆச்சரியமாக விருந்தது. அக்காலத்தில் அதன் பெறுமதி 500 ரூபாய் என அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர். ஆனால் இன்றோ அதன் பெறுமதி பல கோடி மதிப்புள்ளது.

யாழ்ப்பாண வாழ்வியலில் பழமையென்பதும் அதனைப் பாதுகாப்பதென்பதும் மிகவும் முக்கியமானதும் பெறுமதி வாய்ந்ததுமாகும். முப்பது வருடகால யுத்தத்திற்குள்ளும் மக்களோடு மக்களாக தப்பிப்பிழைத்து நீண்ட ஆயுளுடன் நிற்கும் இத்தகைய கார்களைப் பார்க்கும் போது எமது சமூகத்தின் பழமையும் வளமான வாழ்வியலும் கண்முன்னே தெரிகிறதல்லவா?

என்ன தான் இருந் தாலும் ஓல்ட் இஸ் கோல்ட்!!



உண்மையின் பதிவு

# வலையிறவு விமானத்தள விஸ்தரிப்பால் குடிநீருக்கு அலையும் குடும்பங்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவுப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு பின்தங்கிய பிரதேசமே வலையிறவுக் கிராமம். சுற்றிலும்



நீர்வளம் பொருந்தியதாக அக்கிராமம் காணப்பட்டாலும் அம்மக்கள் குடிநீருக்காக காத்துக்கிடக்கவேண்டிய நிலையே இன்று காணப்படுகின்றது.

வலையிறவுக் கிராம மக்கள் பொதுவில் ஒரு குழாய்க்கிணறை அமைத்து அதிலிருந்தே நீரைப் பெற்று வருகின்றனர். சேத்துக்குடா, திமிலைத்தீவு, புதுநகர், வவுண தீவு, பத்தரைக்கட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் குடி நீரைப்பெற்றுக்கொள்வதற்காக பல மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலையும் பல மைல் தூரங்கள் சென்று அதனைப் பெற வேண்டிய நிலையும் காணப்படுகிறது.

**◄நா. ராஜா►**

சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது அம்மக்கள் குடங்களையும் வாளிகளையும் தூக்கிக் கொண்டு தலையில் வெயிலுக்காக ஒரு துண்டைப் போட்டுக் கொண்டு நடந்து சென்றனர். 'இங்க வந்து தண்ணி சரியான பற்றாக்குறையாக இருக்குது. ஒரேயோரு பொது நீர்க்குழாய் மட்டும்தான் இருக்குது. அதில வந்து டைமுக்குத்தான் நீர் வருகுது. வாற தண்ணியக்கூட வரவிடாமல் சில பட்டிகள் தடுத்துக் கொண்டிருக்கு. அத நீங்கதான் வெளிப்படுத்தணும் எண்டு கேட்டுக் கொள்கிறம். அதுமட்டுமில்ல ஒவ்வொரு ஒழுங்கைக்கும் நீர்ப்பாசனக் குழாய் அமைச்சுக் கொண்டு போறாங்க. ஆனால் எங்கட கிராமத்துக்கு மட்டும் நீர்ப்பாசனக்குழாய் அமைக்கப்படல்ல. அது என்ன காரணம் எண்டுதான் விளங்குதில்லை' என்று கூறிய அப்பிரதேசவாசியொருவர் தமக்கு மட்டும் ஏன் இந்த நிலை என்று எம்மிடம் கூறி வருந்தினார்.

வலையிறவுப்பிரதேசத்தில் இருக்கின்ற விமானப்படைத்தளப் பகுதியை விஸ்தரிப்பு செய்ததால் அங்கு குடியிருந்த 475 குடும்பங்கள் வசித்த அக்கிராமத்தில் இப்போது 48 குடும்பங்கள்தான் இருக்கின்றன. இலங்கை விமானப்படையின் மட்டக்களப்பு படைத்தளம் விஸ்தரிக்கப்பட்டதாலேயே அங்குள்ள மக்கள் வேறு பிர தேசங்களுக்குச் சென்றுவிட்டனர். இதனால்தான் தாம் சிறியளவிலான நீரைப் பெறுகிறோம் என்று அம்மக்கள் கூறுகின்றனர். வெறும் ஐந்து லீற்றர் கொள்ளளவு உடைய இரண்டு போத்தல் குடிநீர்தான் தங்கள் குடிநீராக இருப்பதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

'எங்களுக்கு இந்த பாதுகாப்பு வலயத்துக்கெண்டு எடுத்த 30 குடும்பத்து வீட்டுத் திட்டமும் பள்ளமும் படுகுழியா இருக்குதே தவிர அத வந்து ஒருவரும் பார்த்ததுமில்ல கேட்டதுமில்ல. எது செய்யோணுமெண்ட தீர்மானமெடுத்தது மில்ல. அந்த முப்பது குடும்பமும் இருக்க இடமில்லாம அங்கையும் இங்கையும் இருந்து கொண்டே இருக்குது. அதால பெரிய கஸ்டமா இருக்குது. பயிர் செய்ய வசதியில்ல. எங்களுக்கு வாய்க்கால் பாதையை திருத்தி போறத்துக்கு வழியமைச்சுத் தரோணும். குடி நீர்ப்பிரச்சினை பாம்புகள் பற்றைகள் எல்லாம் துப்பரவாக்கித் தரவேணும்' என்கிறார் இன்னொருவர்.

திமிலைத் தீவு கிராம மக்களும் இக்குடிநீர்ப் பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருகின்றனர். தற்போது குடிநீர் வழங்குவதற்காக வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக அம்மக்கள் கூறுகின்றனர். அதிலும் அம்மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அக்கிராமவாசி ஒருவர் 'திமிலை தீவுக் கிராமத்தில குழாய் நீர் குடுத்து வாறாங்க. அதில எங்கட ஏழு டானியல் சதுக்கத்துக்கு ஏழு ஒழுங்கைகளுக்கு குழாய்கள் பதிக்கப்படவில்லை. அடுத்த மாதம் தண்ணி குடுக்கக்குள்ள குழாய்கள் பதிக்கச் சொல்லி சொல்றாங்க. அதுக்கும் மேலதிகமாக காசு கட்டணும் எண்டு சொல்றாங்க. அதால எங்கட சனங்கள் சரியான கஸ்டப்படுகுதுகள். மற்றது ஒவ்வொரு ஆளுக்கும் 22 ஆயிரம், 27 ஆயிரம் ரூபா கேட்கிறாங்க. அந்தக் காசு இல்லாத நிலையில் சனங்கள் கஸ்டப்படுறாங்க. அந்தக் காசையும் குறைக்கவேணுமெண்டு கேட்டுக்கொள்றம்' என்றார்.

இந்த விடயம் குறித்து மட்டக்களப்பு மாநகர சபை மேயர் சிவகீதா பிரபாகரனை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது. 'இங்கு சேத்துக்குடா, வலையிறவு, புதூர் போன்ற கிராமங்களுக்கு குடிநீர்ப் பிரச்சினை காலம் காலமாக இருந்துகொண்டு வந்திருக்குது. மட்டக்களப்பு மாநகர சபையும் பொது இடங்களில தாங்கிகள வச்சி கூடுமானவரை குடி நீர் விநியோகம் செய்துகொண்டு வந்தனாங்க. இப்பவும் செய்துகொண்டு வாறம். நான் நினைக்கிறன் இன்னும் ஓரிரு மாதங்களில் அந்தப் பிரச்சினை முற்றுமுழுதாக தீர்ந்துவிடும். ஏனென்றால் இப்போது உன்னிச்சையிலிருந்து நீர் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த மாத மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்திலும் கூட நாங்கள் இது தொடர்பாக கதைத்தம். நீர்ப்பாசன அதிகாரியுடனும் கதைத்திருக்கம். விரைவில் அது மக்களது பாவனைக்காக விடப்படும்' என்று உறுதியுடன் கூறினார்.

திமிலைத் தீவு மக்கள் குழாய் பதிப்பதற்காக தம்மால் அவ்வளவு பெரிய தொகையை செலுத்த கஷ்டப்படுவதாக் கூறுகின்றனர். இதற்கு ஏதாவது தீர்வு உண்டா?

'அந்தக் குடியிருப்பாளர்கள் அவர்களது கிராம அபிவிருத்தி சங்கத்தினூடாக அல்லது கிராம சேவையாளர் ஊடாக தங்கள் கோரிக்கைகளை பிரதேச செயலாளரிடம் கையளித்து, அரசாங்க அதிபருக்கு முன்வைப்பார்களாயின் நிச்சயமாக இவர்களது பிரச்சினைக்கு ஒரு தீர்வை பெற்றுக் கொள்ளலாம்' என்றார் சிவகீதா பிரபாகரன்.



சிவகீதா பிரபாகரன்

காலம் காலமாக குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டாத நிலையில் இம்மக்கள் வறையறுக்கப்பட்ட சிறியளவு நீரைக் கொண்டு தம் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறார்கள். மாநகரசபை மேயர் குறிப்பிட்டதைப் போன்று விரைவில் அம்மக்கள் சுதந்திரமாக நீரைப் பெற்றுக் கொள்வார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.



# நாசமாய்ப்போன சமுதாயமும் சீரழிந்துபோன நீதித்துறையும்

## வெற்றி வேலாயுதம் ரஜனி கொலைச் சம்பவம்

◄ பஹமுன அஸாம் ►

கொழும்புக்குச் செல்லும் சந்தோசத்தை தனது சொந்த பந்தங்களுக்கு சொல்வதற்காகச் சென்ற ரஜனி தான் இனி உயிருடன் வீடு திரும்ப மாட்டேன் என்று கனவிலும் நினைத்திருக்கமாட்டார்.

இற்றைக்கு 15 வருடங்களுக்கு முன் ஒரு அப்பாவிப் பெண்ணுக்கு நடந்த கொடூரம் இத்தனை வருடங்கள் கழிந்தும் நினைவலைகளில் நீராய்க் கசிகின்றது. அன்று நடந்த கொடூரச் சம்பவத்திற்கு காரணமானவர்களைத் தண்டிக்க இந்த அரசாங்கத்துக்கு 15 வருடங்கள் எடுத்திருக்கின்றது என்பது நம் நாட்டின் நீதித்துறையின் சிறப்பான செயற்பாட்டையே எடுத்துக் காட்டி நிற்கிறது.

24 வயதுடைய வெற்றி வேலாயுதம் ரஜனி யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்தவர். தன் தம்பியோடும் மாமாவோடும் வசித்து வந்த ரஜனி கொழும்பிற்குச் செல்ல ஆயத்தமாகி அதனை தன் உறவினர்களுக்கு அறிவித்துவிட்டு வருவதற்காக மானிப்பாய் சென்றார். 1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி மானிப்பாய் சென்ற ரஜனி மறுநாளாகியும் வீடு திரும்பாததை அறிந்த ரஜனியின் மாமாவும் தம்பியும் கலவரமடைந்தனர். தாம் அறிந்த இடங்களிலெல்லாம் தேடி அறிந்தவர்களிடம் எல்லாம் கேட்டு விசாரித்து அது பலனளிக்காமல் பொலிஸாரிடம் முறையிட்டனர்.

இரு வாரங்களாகியும் அவர் பற்றிய எந்த விதமான கவல்களும் கிடைக்காததையிட்டு ஆத்திரமடைந்த உறவினர்கள் சில அரசியல் பிரமுகர்களின் உதவியோடு இவ்விடயத்தை குடா நாட்டு இராணுவத் தளபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.



அப்போது புதிதாக கடமையேற்றிருந்த மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இவ்விடயம் தொடர்பாக தன் முழுக் கவனத்தையும் செலுத்தினார். பிரச்சினை அவரது கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்ட 13 நாட்களின் பின் ரஜனி தொடர்பான உண்மைகள் கசியத் தொடங்கின. அதன்படி கோண்டாவில் பஸ் தரிப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள ஒரு வீடொன்றின் மலசல குழியிலிருந்து ரஜனியின் உடல் உருக்குலைந்த நிலையில் தோண்டி எடுக்கப்பட்டது.

ரஜனி மானிப்பாய் சென்றுகொண்டிருந்த போது ஆறு இராணுவச் சிப்பாய்களால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டே கொலை செய்யப்பட்டிருக்கிறார். தன் எதிர்காலத்தின் நிமித்தம் கொழும்பு செல்ல இருந்தவரை சிதைத்து அவரது உயிரையும் பறித்த ஆறு காமுகர்களும் கைது செய்யட்டனர்.

ரஜனியின் கொலை சம்பந்தமாக யாழ்ப்பாண நீதிமன்றத்தில் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்கு காலச்சூழல் காரணமாக கொழும்புக்கு மாற்றப் பட்டது. 15 வருடங்களாக இழுத்தடிக்கப் பட்டுக் கொண்டிருந்த விசாரணைகளுக்கு கடந்த மார்ச் 31ஆம் திகதி முடிவு கட்டப்பட்டது. அதாவது குறிப்பிட்ட இராணுவச் சிப்பாய்களில் மூவருக்கு மரணதண்டனை அளித்து தீர்ப்பளிக்கப்பட்டது. அத்தோடு குற்றவாளிகள் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யும் உரிமையும் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. ஜனாதிபதி கையெழுத்திட்டால் மேற்படி தண்டனை நிறைவேற்றப்படும். தீர்ப்பளித்து ஐந்து மாதங்கள் கடந்த நிலையில் இவற்றில் எந்தளவு தூரம் உண்மையுள்ளது, அவர்களுக்கான தண்டனை செயன்முறையில் எப்போது நடக்கப்போகிறது என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்கவேண்டிய நிலையில் இருக்கின்றோம். காரணம் இது போன்ற எத்தனையோ மரணதண்டனைத் தீர்ப்புக்களை நாம் பார்த்துவிட்டோம். ஆனால் அவை ஒன்றும் இன்னும் அமுலில் வந்தபாடில்லை. இந்தச் சம்பவமும் அந்தப் பட்டியலில் இணைக்கப்படப்போகும் ஒன்றாகத் தான் இருக்கப்போகிறது.

மேல் முறையீடு செய்யும் உரிமை ரத்து செய்யப்பட்டுள்ளதாகச் சொல்வது வெறுமனே கண்துடைப்புதான். அது மக்களை ஏமாற்றுவதற்காக குறிக்கப்பட்டுள்ளதாகும். அதாவது அரசு இவ்விடயத்தில் முறையாக நடந்து கொண்டது என்பதைக் காட்டுவதற்காகவே அவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது. ஒரு சுதந்திர தின விழாவோ அல்ல ஜனாதிபதியின் பிறந்ததின விழாவோ வந்தால் பொது மன்னிப்பு என்ற பெயரில் இராஜ மரியாதையோடு அவர்களை வீடுகளுக்கு அனுப்பிவிடுவார்கள். இதுதானே காலம் காலமாக நடக்கும் சமாச்சாரம்.

இதுபோன்ற விடயங்களினால் இனியும் அவதிப்படப் போவது தமிழ் மக்கள்தான். காரணம் யாழ்ப்பாணத்தில் தற்போதைய நிலையைப் பார்த்தால் அன்றைய நிலை எவ்வளவோ மேல் என்றே சொல்லலாம். சட்டம், நீதி எல்லாமே அவற்றை ஆள்பவனின் கைப்பொம்மையாக இருக்கும்போது நாம் என்ன செய்ய முடியும்? தீர்ப்பு வழங்குவதற்கே 15 வருடங்கள் எடுத்த அபூர்வமான நிலையில் அதனை நிறைவேற்ற எத்தனை வருடங்கள் எடுக்கப்போகின்றது என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

### ◄ நக்கல் நையாண்டிப் போடியார் ►

*எப்புடி சொகமா இருக்கீங்களா...?*

*என்ட கொடலே, இந்த கல்முனயில என்ன நடக்குதெண்டே தெரியலப்பா. புள்ளக்கெளயல் எல்லாம் எலக்ஷன் கேட்டுக்கிட்டு ஊர் வம்ப அளந்து திரியுதுகள். எங்க பாத்தாலும் மீட்டிங்காத்தான் இரிக்கி. காது கணம் வெச்சிக்கிட்டு இரிக்க முடியல. ஊடு ஊடு வந்து 'நான் சமூக சேவகன்' எனக்கு வோட்டுப் போடுங்க எண்டு கேட்டுத் திரியுறானுகள். நான் எலக்ஷன்ல வெண்டா அது கட்டித் தருவன், இது கட்டித் தருவன் எண்டு வாக்குறுதியெல்லாம் அள்ளி வீசுறானுகள். போன மொற நம்ம ஜனாதிபதி சொன்னது இவங்களுக்கு ஞாபகம் இல்ல போல, உள்ளூராட்சித் தேர்தல்ல எலக்ஷன் கேக்குறவங்க செல்லுறதெல்லாம் அரசாங்கம் செய்யாது. இத யாரும் நம்ப வேணாம் எண்டு சென்னாரே? ஞாபகமில்லியோ?*

*அதவிட முசுப்பாத்தி என்ன எண்டா, இலங்கயிலேயே இங்கதான் உள்ளூராச்சி எலக்ஷனுக்கு தேர்தல் விஞ்ஞானம் வெளியிட்டாங்க. [நெனப்புத்தான் பொளப்பக் கெடுக்கும்] அதுவும் காங்கிரஸ் கல்முனயில தனியா அரசாங்கத்து எதிரா போட்டியிடும் எண்டு செல்லிப்புட்டு கோத்தபாயக்கிட்ட அத குடுக்கிறாங்க. காங்கிரஸ்ட தனித்துவத் தலைவர் எண்டு செல்றவர் எப்புடி என்டாலும் கல்முனயில காங்கிரஸ் வெல்லும் எண்டு அவர்ர பாட்டுல திரியுறார். இங்க கட்சிக்குள்ளேயே அடிச்சிக்கிட்டு திரியுறாங்க எலக்ஷன் கேக்கிறவங்க. எனக்கு ஒண்டும் மட்டும் புரியல்லீங்க, யாரு கல்முன மாநகர சபையின்ட மேயர்? இந்த டவுட்டு யாராச்சும் கிளியர் பண்ணுங்கப்பா...!*

*மறுகாவும் வருவன்...!*





# சகுனம்

'இன்னைக்கும் ஆரம்பிச்சாச்சா. 'ச்சு.. போ அங்காலே..' கத்தியபடியே ஒரு கல்லை விட்டெறியவும், சத்தம் அடங்கி.., அங்கிருந்து மூன்றாவது வீட்டின் மாடியில் மறுபடியும் முளைத்தது.

'யாரது.. கூரைல கல்லெறியிறது..?' வீட்டுக்காரனின் குரல் கோபத்துடன் ஒலித்தது.

'நெடுகலும் ராத்திரியானா இதே தொல்லையா போச்சு..'

ஒரு வாரமாக வீடுகளிலும், பைப்பில் தண்ணீர் பிடிக்கும் பெண்களிடமும் இதே பேச்சுதான். ஏதோவொரு வீட்டில் கைக்குழந்தை அழுகிறது என்றுதான், இரவில் வீட்டுக்கு வெளியில், காற்றுக்காக உட்கார்ந்துகொண்டு வம்பளந்து கொண்டிருந்தவர்கள் முதலில் நினைத்தார்கள். 'புள்ளையை அழவிட்டுட்டு எங்க போனா.. என்ன செஞ்சுக்கிட்டிருக்கா..' என்று பார்க்காத அம்மாவுக்கு பேச்சு விழுந்தது.

இரண்டு நாளில், 'ஏ.. இது புள்ளை அழற சத்தமில்லை.. பூனைதான் கத்துது' என்று தெரிந்துவிட, 'பூனை அழுதா நல்லதில்லையே..' என்று ஒவ்வொருவரும் சகுனம் சொல்ல ஆரம்பித்தார்கள். வெள்ளையில் கறுப்பு டிசைன் போட்ட புடவை மாதிரியிருந்த அந்த அழகான பூனை, இதனாலேயே அனைவரின் வெறுப்புக்கும் ஆளாகியிருந்தது. சும்மாவே அது எதிரே வந்தால் சகுனம் சரியில்லை என்று வெறுத்தவர்கள் இன்னும் கூடுதலாகவே அந்த வெறுப்பைக் கடைப்பிடித்தார்கள்.

ஏதோ சிறுகுழந்தையின் அழுகுரலாக ஆரம்பிக்கும்,.. நேரம் செல்லச்செல்ல சுதியும் வேகமும் கூடி, நெஞ்சைப்பிசையும் நீண்ட கத்தலாக தொடரும். இந்தச் சத்தத்தைக் கேட்டு இன்னும் சில பூனைகளும் வந்து உட்கார்ந்துகொண்டு கூட்டாக ஒப்பாரி வைக்கத்தொடங்கின. ஒன்று யாராவது கல்லெறிந்து விரட்டவேண்டும். இல்லையென்றால் வேறு ஏதாவது பூனையோ, கடுவனோ வந்து சீறும்போதோ, இல்லை தெரு நாயொன்றின் குரைப்பிலோ சட்டென சத்தம் அமுங்கிவிடும்.

'யாருக்காவது மரணம் சம்பவிக்க இருந்தால், பூனைக்கு அது முதலிலேயே தெரிந்துவிடும். அப்படியிருந்தால்தான் அது அழும்' என்று ருக்மணி பாட்டி சொல்லி வைத்துவிட, அந்த ஏரியாவில் சாகக் கிடப்பவர்கள் யார்யாரெல்லாம் இருக்கிறார்கள் என்று கணக்கு எடுக்கப்பட்டது.

அவர்கள் கணிப்பில் முத்தையா தாத்தா ஒருவரைத்தவிர, மற்ற வயசானதுகள் எல்லாம் கிழங்கு மாதிரி இருந்தன. எப்படியும் ஆறேழு வருஷங்களுக்காவது, கம்பை ஊன்றிக் கொண்டு நடந்தாவது தாக்குப்பிடித்துவிடும். முத்தையா தாத்தா ஒருவர்தான், படுத்த படுக்கையாக இருக்கிறார். உணர்வுகளெல்லாம் மங்கி, சகலமும் படுக்கையில் என்றான பின்னும், உயிர்மட்டும் ஊசலாடிக் கொண்டிருந்தது.

◄ நளாயினி ►

'எல்லாம் தின்னு, ஆண்டு அனுபவிச்சாச்சு, நெறைய நல்லது கெட்டது பார்த்து, வாழ்ந்து தீர்த்தாச்சு. அப்புறமும் என்ன குறையோ' என்று அடிக்கடி ஊர்வாயில் அடிபடுவார். 'என்னடா கதிரேசா.. உங்க தாத்தா அமாவாசை தாண்டிடுவாரா...' என்று சிலர் அவர் பேரனை வம்பிழுக்கையில் தலையை குனிந்து கொண்டே போய்விடுவான். எத்தனை வயதானால் என்ன.. சொந்தமல்லவா!!

பூனை அழுவது அவரது மரணத்துக்காகத்தான் என்று எல்லோரும் அனுமானித்துக் கொண்டார்கள். எப்போது நிகழும் என்றே காத்திருக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள். விட்டால், யமனையே ஆட்டோவில் கூட்டிக்கொண்டுவந்து, தாத்தாவையும் சேர்த்து அனுப்பிவைத்து விடுவார்கள்போல.

சிறுகதை

கதிரேசனுக்கு ரொம்பப் பெருமையாக இருந்தது. அந்தத் தெருவிலேயே முதல் முதலில் கார் வந்தது அவனது வீட்டுக்குத்தான். காரை நிறுத்த இடம் வேண்டுமென்பதற்காகவே, தோட்டத்தில் ஒரு பகுதியில் ஷெட் கட்டியிருந்தான். 'கார்க்காரர் வீடு...' என்று அவர்களது வீடு அடையாளம் காட்டப்படுவதில் அவன் அம்மைக்குத்தான் பெருமை.

கார் வாங்கி, வீட்டுக்குக் கொண்டு வந்தபின் அதில் முதல்முதலாக கோயிலுக்குத்தான் குடும்பத்துடன் செல்லவேண்டும் என்று அவன் அம்மை பிடிவாதம் பிடித்து அதில் வெற்றியும் பெற்றிருந்தாள். திட்டமிட்டபடி வெள்ளிக்கிழமை மாலையன்று சந்தனம், குங்குமம் இடப்பட்டும் மாலை யணிந்து கொண்டும் கார் தயாராக இருந்தது. சக்கரங்களின் அடியில் எலுமிச்சம்பழமும் பலியிட தயாராக இருந்தது. 'கொஞ்சம் இருப்பா.. நல்ல சகுனம் பார்த்து வண்டியை எடுக்கணும். அம்மா விஜயா நிறகுடத்த கொண்டு எதிர்ல வாம்மா' என்று உத்தரவிடவும் அவள் எதிரில் வந்து நின்றாள்.

கார் ஸ்டார்ட்டாகி, காம்பவுண்டை விட்டு வெளியே வரவும் திடீரென்று அது நாலுகால் பாய்ச்சலில் குறுக்கே பாய்ந்தது. விரட்டிக்கொண்டு வந்த தெருநாய், நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டு களைக்க களைக்க நின்றது. கண்மூடித் திறப்பதற்குள் என்ன நடந்ததென்று ஒரு வருக்கும் உறைக்கவில்லை.

மெதுவாக டிரைவர் ஆசனத்திலிருந்து இறங்கியவன், காருக்கு கீழே குனிந்து பார்த்தான். இரத்த சகதியினூடே வெள்ளையும் கறுப்பும் கலந்த நிறத்தில் ஒரு கால் லேசாகத் துடித்து பின், மெதுவாய்... மெதுவாய்... அடங்கியது. இப்போதெல்லாம் அந்தத் தெருவில் இராத்திரியில் அழுகுரல் கேட்பதேயில்லை.

# பால் குடிக்கும் பூனைகள்

'ஹலோ.... நான் சுபையிர் பேசுறண்டா.....'

'சொல்லு மச்சான்'

'என்னடா இந்தமுற 'ஸ்கொலசிப்' ல ஒண்ட ஸ்கூல் பேர்தான் பெரிசா அடிபடுது.... புதிய 'சென்டர்' கிடைச்சதும் கிடைச்சது. ஒரு கலக்கு கலக்கிட்டியே...'

'என்னடா சொல்ற.....? நீ நினைக்கிற மாதிரி 'அப்படி' ஒண்டுமே இல்ல மச்சான்...!'

◄ வி.ஏ. ஜுனைட் ►

'சும்மா உடாத... கண்ண மூடிக்கொண்டு பூனை பால் குடிச்சா உலகமென்ன இருண்டா கிடக்கும்...?'

'ஏன்டா, உன்டபாடும் பிழையில்லதானாமே... 'எல்லாம்' கேள்விப்பட்டனான்...'

'என்டாலும் உன்னப்போல வாய்க்குமா...?'

'நான் என்னடா அப்படி...'

'ஏன்டா, பத்து வருஷத்தில ரெண்டு புள்ளயள் பாஸ் பண்ணின



பள்ளிக்கூடத்தில, இந்த முறை ஒரேயடியா பத்துப் புள்ளயள் எண்டால், அது பெரிய விஷயமில்லியா...? நாளைக்கு 'ஷோனல்' மீட்டிங்ல பாரு, நீதான் கதாநாயகன்...'

'ஏன்டா இவ்வளவு பொறாம... முன்னால நீங்க போறீங்க. பின்னால நாங்க வாறம். பாதை ஒண்டுதானே மச்சான்..... இதில பெரிசா அலட்டிக் கொள்ள என்ன இரிக்கி...? அது சரி, இந்த முறை உனக்கு என்ன நடந்த? வீதம் குறைஞ்சி போச்சுதாமே...! அவன் நிஹார் கூட பாவம் எண்டு சொல்லி வருத்தப்பட்டான்...'

'ஓம் மச்சான், நாலே நாலு... எதிர்பார்த்ததுதான்...'

'ஏண்டா, இந்த முறை பிள்ளையள் அமையல்லியா...?'

'பிள்ளையள் அமைஞ்சி என்னடா செய்ற...? 'சென்டர்' அமையணுமே...!'

'ஏன் வழமையான 'சென்டர்' தானே...?'

'அட நீவேற, 'அப்பம்' என்டால் உனக்கு புட்டு புட்டு வைக்கணும்... பழைய 'சென்டர்' தாண்டா, 'ஆள்' புதுசு மச்சான்.... மிச்சம் பயந்த மனுஷன். ஒண்டுமே செய்ய ஏலாம போச்சி... ஒரு மாதிரியா புடுச்சி கிடுச்சி 'மெக்ஸிமம் றை' பண்ணித்தான்...'

சிறுகதை

'அப்ப 'ஷோனல்' மீட்டிங்ல ஒரு மாதிரியா தப்பிட்டாய் எண்டு சொல்லன். 'டியூஷன்' பாடுதான் இந்த முற கொஞ்சம் இறங்க பாக்கும் என்னடா...?'

'ஓம் மச்சான், அத நினைச்சாதான் மனசுக்கு கொஞ்சம் சங்கடமா இரிக்கி...'

'சரி மச்சான், கவலப்படாத. எல்லாம் நல்லா முடியும்... இஞ்ச எங்கட பள்ளிகூடத்தில ஊரே திரண்டு பெரிய அமளிதுமளியா கிடக்கு... பாஸ் பண்ணின பிள்ளையள இண்டக்கி ஊர்வலம் கொண்டு போறாங்க...

'வெரி பிஸி' எண்டு சொல்லன்...

'ஓம் மச்சான், வெரி சொறிடா, பின்னேரம் நான் ஊருக்கு வாறன். மற்ற ஸ்கூல் புதினங்களையும் சேர்த்துவையன். ஆறுதலா இருந்து கதைப்பம்...'

'சரி மச்சான் வைக்கிறன்'

# இழந்த உறுப்புக்களை படைக்கும் இவர்களும் கடவுளர்களே!

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் 'தாருண்ய அட்டாக், மனிதவள அமைப்பு மற்றும் சென்னை சன்சிற்றி றொட்டரி கிளப்பின் ஏற்பாட்டில் கடந்த மாதம் கிளிநொச்சியில் மருத்துவ முகாம் (Medical camp) ஒன்று நடைபெற்றது. இங்கு இலவச பரிசோதனைகள் மற்றும் செயற்கை உறுப்புகளை வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன. கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் இதனால் பயனடைந்தார்கள் என்பது மகிழ்ச்சியான விடயம். இதற்கென இந்தியாவின் புகழ்பெற்ற 14 மருத்துவர்கள் இலங்கை வந்திருந்தனர். இதற்கு முன்பும் ஒருதடவை இம்மருத்துவமுகாம்நடைபெற்றதுகுறிப்பிடத்தக்கது.அப்போது செயற்கை உறுப்புகளுக்கான அளவுகளை கொடுத்தவர்களுக்கு இம்முறை செயற்கை உறுப்புகள் கிடைத்தன. இம்முறை புதிதாக அங்கு சென்ற உறுப்புகளை இழந்தவர்களுக்கு அதற்கான அளவுகள் எடுக்கப்பட்டன. அவர்களுக்கான செயற்கை உறுப்புகள் இவ்வருட இறுதியில் வழங்கப்படும் என்று கூறப்பட்டது.



யுத்த பாதிப்புகளுக்கு உள்ளான மற்றும் தம் உறுப்புக்களை இழந்த பல மக்கள் இங்கு வருகை தந்திருந்தனர். விரக்தியும், வேதனையும் நிறைந்த வன்னி மக்களின் துயரங்களை ஓரளவாவது நிவர்த்தி செய்வதாக இம்மருத்துவ முகாம் அமைந்திருந்தது. எந்தப் பக்கம் திரும்பினாலும் ஊன்றுகோல்களுடனும் காயத் தழும்புகளுடனும் இருக்கும் மக்களைப் பார்க்கையில் எமது மனங்கள் கனத்துப் போயிற்று. இம்மக்களுக்காக தமிழகத்திலிருந்து வந்திருந்த மருத்துவர்களும் றோட்டரி கிளப் உறுப்பினர்களும் தன்னலம் பாராது வெயிலில் ஓடியாடி சேவை செய்தமை வியக்கத்தக்கது.

இந்தியாவின் சன் சிற்றி றொட்டரி கிளப் வறிய மக்களுக்கு உணவு வழங்குதல், அவர்களுக்கான கல்வியை பெற்றுக் கொடுத்தல், மற்றும் தொழில்சார் பயிற்சி நெறிகளை வழங்குதல் போன்ற சேவைகளை மக்களுக்கு வழங்கி வருகின்றது. அவர்களது அடுத்த சேவைதான் பாதிக்கபட்ட மக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்குதல் போன்ற வேலைத்திட்டங்கள்.

மக்களோடு மக்களாக நின்று அவர்களது நிலைமைகளை கவலை தோய்ந்த முகத்துடன் பார்த்துக் கொண் டிருந்த சென்னையைச் சேர்ந்த றொட்டேரியன் கணேஷ் அருகில் சென்றோம். அவரிடம் எம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு எம்மக்களின் மனநிலை மற்றும் அவர்களது சேவைகள் தொடர்பாகக் கேட்டோம்.

'தற்போது இந்த மக்களுக்குத் தேவையானது அமைதியானவாழ்க்கையும்நல்லமருந்தும்தான். இதற்கான அனைத்து உதவிகளையும் அரசாங்கமே செய்யவேண்டும். போன முறை நாங்க அளவெடுத்துக் கொண்டு போன நூற்றுக்கும் அதிகமான செயற்கை உறுப்புகளை இம்முறை வந்து வழங்கினோம். அவற்றைப் பெற்றுச் செல்லும் போது அம்மக்களின் முகத்தில் தோன்றிய


விஜயராஜன்


கவிதாஞ்சலி



# நேரடி ரிப்போர்ட்

# கிளிநொச்சி மருத்துவ முகாம்

மகிழ்ச்சிதான் எமக்குக் கிடைத்த வெற்றி' என்று மனநிறைவுடன் சொன்னார்.

இப்படிப்பட்ட மக்களுக்கு கட்டாயம் சேவை செய்ய ணும் என்பதால நாங்க ஒரு குழுவாக வந்தோம்' இங்குள்ள மக்கள் தூங்கிட்டு இருக்கிறபோது கால் போச்சுது கை போட்டுது என்று சொல்லுறாங்க. எங்கள பார்த்துதிரும்பவும்எப்பவருவீங்களண்டுகேக்குறாங்க. இதுவரை நாங்க ஒரு குகைக்குள்ள இருந்து வெளில வந்த மாதிரி இருக்கு. எங்களப் பார்க்கிறதே அவங்களுக்கு பெரிய சந்தோஷமா இருக்கு' என்றார் தொடர்ந்து கணேஷ்.

**த. இரவிவர்மன்**

மனிதவள அமைப்பின் தலைவரான கிருஷ்ணசாமி கந்தராஜாவிடம் இந்த மருத்துவ முகாமின் தேவைப்பாடுகள் குறித்து உரையாடினோம்.

முதல் தடவை இலங்கையில் நடந்த மிகப்பெரிய விடயம் இதுவாகத்தான் இருக்கும் என்று நான் நினைக்கின்றேன். எப்படி அவங்களுக்கு ரீட்மென்ட் பண்ணணும் என்று யோசித்து யோசித்துச் செய்தாங்க இந்தியன் டொக்டர்ஸ்மார். அவர்கள் பேசிய விதமே எம்மக்களின் பாதி நோயை இல்லாமல் செய்துவிட்டது. இதில வந்தவங்கள் பாதிப் பேர் நோயில்லாமல் போனாங்கள் தெரியுமா? இப்போ 100 பேருக்கு செயற்கை உறுப்புகளுக்காக அளவெடுத்திருக்கிறாங்க. அவங்க ஒவ்வொரு மாதமும் 100 பேருக்கு இலவசமாக செயற்கை உறுப்புகள் கொடுக்கிறதுக்கு தயாராக இருக்கின்றாங்க. அவர்களின் மகத்தான சேவைக்கு எத்தனையோ நன்றிகளைக் கூறலாம்' என்றார் நன்றிப் பெருக்குடன்.


கணேஷ் கந்தராஜா சுரேஷ் ஜோசி

இம்மருத்துவ முகாமிற்கு சிகிச்சைக்காக வந்திருந்த மார்க்கண்டு விஜயராஜன் என்ற உறவை சந்தித்தோம். ஷெல் தாக்குதலில் காயமடைந்த விஜயராஜன் அதற்கான சிகிச்சையைப் பெற்றுக் கொண்டிருந்தார். 'இத நடத்துறது பற்றி சந்தோஷப்படுறம். இதுவரை காலமும் வசதியில்லை. வெளியிலை கொண்டுபோய் பரிசோதனை செய்ய நிறைய காசு தேவப்படும். ஆனால், ரெண்டுநாள் காணாது. கொஞ்சநாள் நீடிச்சா நல்லம் என்றுதான் நினைக்கின்றேன். நேற்று அறிவிச்சாங்கள் இப்படி இந்தியாவில் இருந்து டொக்டர்மார் வந்திருக் கின்றாங்கள் எண்டு. ரொம்ப சந்தோசப்பட்டு வந்தனாங்கள். ஒரு மணியோட நிப்பாட்டிட்டினம். எத்தனையோ ஆக்கள் திரும்பிப் போட்டாங்கள். பாவம். மற்றபடிகுறை ஒண்டும் இல்லை' என்றார்.

இதேபோன்று எறிகணைத்தாக்குதலில் தனது ஒரு கையை இழந்திருந்த 36 வயதான இராசரத்தினம் கவிதாஞ்சலி 'நான் கனகபுரத்திலிருந்து இதுக்காக வந்திருக்கன். நல்லாக் கவனிக்கின்றார்கள் டொக்டர்மார். கை போடுறதுக்கு அளவு எடுத்தவை. ஒன்றரை மாதத்திற்குப் பிறகு கை கொண்டந்து விட்டு அறிவிப்பீனமாம். கை கிடைச்சால் ஓரளவு நிம்மதியாக இருக்கும்' என்று அவர் தன் வேதனையை மறைக்க முற்பட்டாலும் அவரது கண்கள் அதற்கு அவகாசம் அளிக்கவில்லை.

செயற்கைஉறுப்புக்களைப்பொருத்தும்வேலையில் மும்முரமாகவும் நேர்த்தியுடனும் ஈடுபட்டுக்கொண்டிருந்த டொக்டர் ஜோஷி மற்றும் அவரது மகனான



டொக்டர் கபிர் ஜோசி இருவரையும் மதியநேர இடைவேளையில் சந்தித்தோம்.

'கைகால் இழந்த மக்களுக்கு நம்மளால முடிந்த உறுப்புகளைக் கொடுத்து அவங்கள திருப்பியும் செயல்பட வைக்கணும். அவங்களின் மனநிலைய மாற்றணும். மற்றவங்கள போல தங்களுக்கும் கையிருக்குது, தங்களாலும் எல்லாம் செய்ய முடியும் எண்ட தைரியத்த கொண்டு வருவதற்காகத்தான் நாங்க வந்திருக்கின்றோம். எங்களால முடிந்த சேவையை செய்வதற்கு கடமைப்பட்டிருக்கின்றோம். திருப்பியும் நாங்க வருவதற்கு நவம்பர் மாதம் கடைசியில தேதி கொடுத்திருக்கிறம்' என்றார்.

தன்னலம் பாராத இவர்களது சேவை காலத்தால் அழியாது. அம்மருத்துவ முகாம் முடிந்த பின்புகூட எத்தனையோ பாதிக்கப்பட்ட உறவுகள் ஏக்கம் கலந்த பார்வையுடன் அங்கு நின்றிருந்ததை எம் கண்கள் காணத் தவறவில்லை. எதிர்காலத்தில் இச்சேவை சிறிது நாட்கள் தொடரவேண்டும் என்பதுதான் அம்மக்களின் அவா. அதுமட்டுமன்றி சன் சிற்றி றொட்டரி கிளப் எதிர்காலத்தில் எம்மக்களுக்காக சுய தொழில் வாய்ப்புகளையும் ஊக்குவிப்பதாக உறுதிபூண்டுள்ளது. ஒரே இடத்தில் இருந்து நடந்தவற்றை நினைத்து மன உளைச்சலுக்கு உள்ளாகும் மக்களுக்கு அது சிறந்த நிவாரணமாக அமையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.





# 'எமது மரபுரிமையை பாதுகாப்பதற்கு ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்'

## வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்

பண்டைத் தமிழரின் வாழ்வியல் கலை, கலாசாரங்கள், பண்பாட்டு விழுமியங்கள் ஆகியவற்றைப் பிரதிபலிக்குமுகமாக கடந்த 24ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமான 'யாழ்ப்பாண வாழ்வியல்' எனும் பொருட்கண்காட்சி 28ஆம் திகதி இனிதே நிறைவடைந்தது. கண்காட்சி வெற்றிகரமாக நிறைவடைந்த மகிழ்ச்சியில் திளைத்திருந்த இக்கண்காட்சியின் தலைவரான யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் அவர்களை விருந்தினர் பக்கத்திற்காகச் சந்தித்தோம்.

**யாழ்ப்பாண வாழ்வியலைப் பற்றியதான இக் கண்காட்சி பற்றிச் சொல்லுங்களேன்.**

'மனிதனுடைய அனைத்துப் பரிமாணங்களையும் அல்லது செயற்பாடுகளையும் உள்ளடக்கியதுதான் வாழ்வியல். வாழ்வியல் என்ற சொல்லுக்கு யாழ்ப்பாணத்து மக்களுடைய பூர்வீக வரலாறு மற்றும் மொழிகள் கலைகள், வாழ்க்கை முறைகள், சமய நம்பிக்கைகள் என்பவற்றையெல்லாம் எடுத்துக் காட்டுவதுதான் இந்தக் கண்காட்சியின் நோக்கம்' என்று விளக்கியவரிடம்,

* சோழர் காலத்தைச் சேர்ந்த நடராஜர் விக்கிரகம் ஒன்று சிலநாட்களுக்கு முன்னர் மன்னாரில் வைத்து 2000 ரூபாய்க்கு விற்கப்பட்டது. கொழும்பிலுள்ள ஒருவர் அதை 4000 ரூபாய்க்கு வாங்கி கொழும்பிலுள்ள முதலாளி ஒருவருக்கு 75 இலட்சம் ரூபாய்க்கு விற்றிருக்கின்றார்.

**இன்றைய சூழலில் இதுபற்றிக் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணம் பற்றிக் கேட்டேன்.**

'ஒரே நோக்கத்தைக் கொண்ட பல கண்காட்சிகள் நடாத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், முந்தைய கண்காட்சிகளைவிட இதில் ஒரு முக்கியத்துவம் இருக்கு. இது என்னவென்றால் முதல்முறையாக யாழ்ப்பாணத்தில் ஒரு தொல்லியல் திணைக்களம் ஒன்று உருவாக்கப்பட்டு அந்தத் திணைக்களத்திலே யாழ்ப்பாணத்தின் தமிழ் தொல்லியல் பட்டதாரிகள் முதன்முறையாக இணைந்து வேலைசெய்கின்றார்கள். ஆகவே, இந்த ஆய்வுகளில் புதிய விடயங்கள் எங்களுக்கு வருகின்றன. அந்தப் புதிய விடயங்களைக் காட்சிப்படுத்துவதில் இந்த வாழ்வியல் ஒரு முக்கிய களமாக எமக்கு அமைந்திருக்கின்றது' என்றவரிடம்,

**கண்காட்சியின் வெற்றி குறித்துக் கேட்டேன்.**

'தொல்லியல்துறை மாணவர்களும் ஏனையதுறை மாணவர்களும் மற்றும் விரிவுரையாளர்களும் இரவு பகல் பாராது கடந்த ஒரு மாதகாலமாக இப்பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். கலைப்பீடாதிபதி பேராசிரியர்கள் ஆகியோர் கண்காட்சியில் பங்குபற்றியிருந்தார்கள். அதிலும் துணைவேந்தருடைய பங்களிப்பு முக்கியமானதாகும். எல்லாவற்றுக்கும் மேலாக இப்படியானதொரு எண்ணக்கருவை ஏற்படுத்தி அவர்களுக்கு ஆலோசனையை வழங்கிய பேராசிரியர் பத்மநாதன் எங்களை முழுதும் ஊக்கப்படுத்தி வருகிறார். வீரகேசரி கலைக்கேசரிக்கு நன்றிக்கடன் செலுத்தவேண்டும். அவர்கள் முயற்சி எடுத்துத்தான் இந்தக் கண்காட்சியை நடத்தினார்கள். இந்தக் காலம் மிகக் குறுகியது. வெற்றி என்பது எங்கட நோக்கம் நிறைவேறுவதில்தான் இருக்கிறது' என்றார் மனதில் மகிழ்ச்சியுடன்.

**யுத்தம் மற்றும் தொடர்ச்சியான இடப்பெயர்வுகள் காரணமாக நிறைய புராதன வரலாற்று சின்னங்கள் காணாமல்போய்விட்டன. அவற்றைத் திரும்பவும் கொண்டுவருவதில் நீங்கள் எத்தகைய சவால்களை எதிர் கொண்டீர்கள்?**

**நேர்காணல் : யாத்ரா**

'நிறையச் சவால்கள் உண்டு. நாங்கள் இந்தக் கண்காட்சியை நடத்துவதன் அவசர நோக்கம் எங்களுடைய மரபுச் சின்னங்கள் நாளாந்தம் இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றன. யுத்தம் மற்றும் தொடர்ச்சியான இடப்பெயர்வால் இவற்றைப் பாதுகாப்பது பெரிய பிரச்சினையாகிவிட்டது. இருக்கிறதைப் பாதுகாப்போம் என்பதுதான் எங்கள் நோக்கம். மக்களும் அதை உணர்ந்து புராதனப் பொருட்களை அருங்காட்சியகத்திற்குத் தருகிறார்கள். இது எங்களுக்குக் கிடைத்த வெற்றி என்றுதான் சொல்லவேணும். ஏனென்றால், தங்களுக்குக் கிடைத்த பொருட்கள் அழிந்துபோகின்றதைவிட ஒரு அருங்காட்சியகத்தில் இருக்கட்டும் என்ற ஒரு எண்ணத்துடன்தான் மக்களிடம் இருந்து எங்களுக்கு தரப்பட்டது. ஆகவே, நாங்கள் அதைப் பயன்படுத்திக் கொள்வோம். எதிர்காலத்திலதான் அதன் முக்கியத்துவம் விளங்கும். இப்ப உள்ளவர்களுக்குச் சில பொருட்கள் பாவனைக்குகந்ததாக இருக்கலாம். அது வீடுகளில் மறைந்துபோகேக்குள்ளதான் அட இப்படியெல்லாம் எங்களுடைய வீடுகளில் இருந்ததா என்று யோசிக்க வேண்டி இருக்கின்றது' என்றார்.

உண்மைதான் இது எங்களுடைய மண்ணிற்குரிய தனிப்பட்ட அடையாளம். இது ஒட்டுமொத்த மக்களுடைய மரபுரிமை. அதைப் பாதுகாப்பதில் எந்தவிதத் தடையும் இருக்காது. இருக்கவும்கூடாது. இன்றைய தலைமுறையைச் சேர்ந்த எத்தனையோ இளையவர்களுக்கு மக்கு, கொத்து, நீத்துப்பெட்டி என்றால் என்னவென்று தெரியாத நிலை காணப்படுகின்றது. இவ்வாறான கண்காட்சிகள் மூலம்தான் இவற்றின் முக்கியத்துவத்தை வெளியில் சொல்ல வேண்டும்.

'யாழ்ப்பாணத்தில இருக்கின்ற மக்கள் அனைவரும் ஒரே மதத்தை, ஒரே பண்பாட்டை பாதுகாக்கவும் இல்லை பின்பற்றவும் இல்லை. விரும்பிய மதம், விரும்பிய வாழ்க்கை முறையை வைத்திருக்கின்றார்கள். ஆனால் தாங்கள் தமிழர், தாங்கள் யாழ்ப்பாணத்தார் என்று சொல்லிக் கொள்வார்கள். ஆனால் எல்லாவற்றையும் மதித்துப் பாதுகாக்கின்ற பக்குவம் எல்லாரிட்டையும் இல்லை. நாங்கள் எடுக்கின்ற முயற்சி எங்களுடைய அக்கறையாலும் ஒரு சவாலாக எடுத்துப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்' என்றவரிடம்,

***'யாழ்ப்பாணத்தில இருக்கின்ற மக்கள் அனைவரும் ஒரே மதத்தை, ஒரே பண்பாட்டை பாதுகாக்கவும் இல்லை பின்பற்றவும் இல்லை. விரும்பிய மதம், விரும்பிய வாழ்க்கை முறையை வைத்திருக்கின்றார்கள். ஆனால் தாங்கள் தமிழர், தாங்கள் யாழ்ப்பாணத்தார் என்று சொல்லிக்கொள்வார்கள்'***

**கந்தரோடையில் உள்ள சின்னங்கள், அதன் ஆரம்பகாலம் பற்றிக் கேட்டோம்.**

'யாழ்ப்பாணத்திற்கு 3000 ஆண்டுகளுக்குரிய வரலாறு ஒன்று உள்ளது என்பதை விஞ்ஞானரீதியாக எடுத்துக்காட்டிய அகழ்வாராய்ச்சிதான் கந்தரோடை. அங்கு முதல்முறையாக விஞ்ஞானரீதியான அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டது. இப்பொழுது இலங்கை தொல்லியல் திணைக்களமும் நாங்களும்தான் இணைந்து ஒரு அகழ்வாராய்ச்சியைச் செய்திருக்கின்றோம். அதே போன்ற பொருட்கள்தான் கிடைத்திருக்கின்றன. ஆனால், காலத்தைக் கணிக்கக்கூடிய புதிய தடயங்கள் இப்போது வந்திருக்கின்றன. அது விஞ்ஞான பூர்வமான தடயங்கள். அந்த ஆரம்பகால மக்கள், பண்பாடு என்பவற்றைப் பார்த்தால் பெரும்பாலும் தென்னிந்தியாவின் தென்பகுதியோடுதான் குறிப்பாக தமிழகத்தோடு தொடர்புடையது. அதில் சந்தேகம், கருத்து வேறுபாடு இருந்தாலும் அதை நாங்கள் ஏற்றுத்தான் ஆகவேண்டும். அந்த மக்கள் எந்தெந்த இடங்களில் குடியேறினார்களோ அந்த மக்களின் வழித்தோன்றல்கள்தான் இப்பவும் கந்தரோடையில் வாழ்ந்து வருகின்



வரலாற்றுப் பழைமை வாய்ந்த நூல்கள், ஓலைச்சுவடிகள், பழங்கால வீட்டுப் பாவனைப் பொருட்கள், நாணயங்கள், கல்வெட்டுக்கள், பாரம்பரிய விவசாயம், மருத்துவம், சடங்குகள், தொடர்பாடல் முதலான கருவிகள், போன்றவை உங்களிடம் இருந்தால் அவை குறித்த தகவல்களையும் அப்பொருட்களையும் யாழ். பல்கலைக்கழகத்துடன் தொடர்புகொண்டு வழங்கமுடியும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.
தொலைபேசி : 0776006402, 0212227419

றார்கள் என்பதைக் கலாசார மண்படைகள் எடுத்துக் காட்டுகின்றன' என்று கூறி எம்மை ஆச்சரியப்பட வைத்தார்.

**எங்களுடைய தொல்லியல் தொடர்பான ஆதாரங்களும் சரி அத்தகைய இடங்களும் சரி மதச்சாயம் பூசப்படுகின்றனவே. அதுபற்றி...**

'பேராசிரியர் சுதர்சன் செல்வரட்ணம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வந்தபோது ஒரு கருத்து சொன்னார். அதாவது எந்தவொரு இடத்திலும் ஆதியில், குறிப்பிட்ட மதம், குறிப்பிட்ட மொழி இருந்தது என்று கூறப்படவில்லை என்று. கந்தரோடையை எடுத்துக் கொண்டால் அயனீக்ஸ் கலாச்சாரத்தையுடைய மக்கள் குடியேறினாலும் அவர்களுடன் கிரேக்கத் தொடர்பு, உரோமத் தொடர்பு, அரேபியத் தொடர்பு, சீனத் தொடர்பு, வட இந்தியத் தொடர்பு என்பனவெல்லாம் இருக்கலாம்.




பல்வேறு பண்பாட்டின் சங்கமிப்பில் தான் ஒரு நாகரீக உருவாக்கம் இருக்கு. நீங்கள் கருதுவது போல இண்டைக்குப் பௌத்தத்தை பெரும்பான்மையான சிங்கள மக்கள் பின்பற்றுவதை வைத்துக் கொண்டு அல்லது இந்துக்களை வைத்துக்கொண்டு கடந்த காலத்திலும் அப்படி இருந்தது என்று சொல்ல ஏலாது. நாங்கள் பௌத்தத்தை ஒரு இனத்தின் சின்னமாகப் பார்க்க வேணுமே ஒழிய ஒரு இனத்தின் அடையாளமாகப் பார்ப்பது ஆதிகாலத்திற்குப் பொருத்தமில்லை. ஏனென்று சொன்னால் ஆதிகாலத்தில் தமிழர்களும் பௌத்தர்களாக இருந்திருக்கின்றார்கள். இதை மறுக்க ஏலாது. சோழர்காலம் வரையும் திருகோணமலையில் இருக்கின்ற பதினாறு கல்வெட்டுக்கள் தமிழ் பௌத்தத்தைப் பற்றிச் சொல்லுது' என்று ஆதாரங்களோடு முன்வைத்தார்.

**இதுவரை காலமும் ஏன் எங்களால் தனித்துவமான ஒரு தொல்லியல் அமையத்தை அமைக்கமுடியாமல் போனது?**

'எல்லா நாடுகளிலும் தொல்லியல் என்பது ஒரு அரசின் கட்டுப்பாட்டுக்குள்தான் இருக்கும். எங்களுடைய பெரிய தவறு என்னவென்றால் எங்களுடைய உரிமைக்குப் போராடியவர்கள் அந்த நேரத்திலேயே எங்களுக்கென்று ஒரு ரீஜெனல் டிப்பாட்மெண்ட் ஒன்றை எடுத்திருக்க வேண்டும். அந்தப் பெரிய தவறைச் செய்திட்டீனம். அதை வைத்துக்கொண்டே பல ஆய்வுகள் செய்திருக்கலாம்' என்றார் சிறு வருத்தத்துடன்.



**எங்களுக்குரிய மரபுரிமையைப் பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வு யாழ். மக்களிடம் இப்போது இருக்கின்றதா?**

'நான் இதைப்பற்றி நிறையக் கட்டுரை எழுதியிருக்கின்றேன். இன்று யாழ்ப்பாணத்தில் சில குடும்பங்கள் ஓரளவு அதைச் செய்யுது. சாதாரண குடில் தொடக்கம் வில்லு வண்டி வரை அதைப் பாதுகாத்து வைக்கின்றனர். எங்களுக்குத் தெரியாமல் எத்தனையோ மரபுரிமையைப் பாதுகாக்கின்ற ஆர்வலர்கள் உள்ளார்கள். யாழ்ப்பாணத்தில் பாலசுப்பிரமணியம் என்ற ஒரு நகைக்கடை முதலாளி தனியொருவராய் எவ்வளவோ பொருட்களை பாதுகாத்து வைத்திருக்கின்றார். போர்த்துக்கேயர் காலத்துப் போத்தில் ஒன்று 20 ஆயிரத்துக்கு இப்ப விக்கலாம். யாழ்ப்பாணத்தில கேட்டுக் கொண்டு திரியிறாங்கள்.

இந்தக் கண்காட்சி மக்களிடத்தில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தக் கண்காட்சிக்குப் பிறகு மூக்குப்பேணி, செம்பு விக்கிறது, உலோகச் சிலைகளை விக்கிறது எல்லாம் தடைப்படும். ஏன் எண்டால் யாழ்ப்பாணத்தில எங்கட மாணவர்களது காலடி படாத இடமேயில்லை. கடந்த ஒரு மாதமாக எங்கடபிள்ளைகள்வீடுவீடாகச்சென்றுபொருட்களைச் சேர்த்திச்சினம்' என்றவர் இந்தக் கண்காட்சிக்காக பழங்கால உறி ஒன்று எடுப்பதற்கு எவ்வளவு முயன்றும் எடுக்க முடியாமல் போனதாக மனவருத்தப்பட்டார். கொழும்பு அருங்காட்சியகத்தில் பதினெட்டு இருபது வகையான உறிகள் இருக்கின்றன. 20 வகையான அகப்பை வைத்திருக்கின்றார்கள். திருகணை வைத்திருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**இனிவருகின்ற சந்ததியினருக்குத் தொல்லியல் சம்பந்தமான பொருட்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அதுவும் இன்றைய சூழலில் இது அவசியமானதொன்றாகும். அது பற்றி...**




'இந்த மேற்கத்தேய கலாசாரம் எங்களுடைய சுதேச பண்பாட்டை படிப்படியாக அழிச்சுக் கொண்டு போறதால விஷயம் தெரிந்த நாடுகள், விஷயம் தெரிந்த மக்கள் தங்களுடைய மரபுரிமையை பாதுகாக்க மிகக் கடினமாகப் போராடுகின்றார்கள். அந்தவொரு விழிப்புணர்வை நாமும் எடுக்கணும். எப்படியெல்லாமோ அழிக்கப்படுகின்ற எமது மரபுரிமையை பாதுகாக்க ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். யுத்தத்தினால் அழிவடைந்தவற்றைத்தான் நாங்கள் இப்போது கொஞ்சம் சேகரித்துள்ளோம்.

**படங்கள் : இரவிவர்மன்**

கொழும்பு அருங்காட்சியகத்திலும் யாழ்ப்பாண பழங்கால பொருட்கள் சிலவற்றை வைத்திருக்கிறார்கள். இவை எங்களுக்குரிய பண்பாட்டு அம்சங்களாக இருந்தாலும் அதற்குரிய பெறுமதியைச் சரியாக உணர்ந்து காட்சிப்படுத்தியிருக்கிறார்கள். அவை இந்த நாட்டு மரபுரிமைச்சொத்து அதைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு எமது மக்களுக்கு இருக்க வேண்டும். இதை மக்களுக்குச் சொல்ல வேண்டியது எமது கடமையல்லவா' என்றார் உணர்ச்சி பொங்க.

இன்று புராதன கலை வடிவங்களை விற்பதில் எமது மக்கள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். வெளியில் உள்ள சில மக்களும் அதற்கு அதரவளிக்கிறார்கள். வேற்றுப் பிரதேச வியாபாரிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து இரும்பு முதலிய தொன்மையான பொருட்களைக் கொண்டுசெல்கின்றனர். எமது புராதனத்தின் தொன்மை உணர்ந்து நாங்கள்தான் எம் தொல்லியலைப் பாதுகாக்க முன்வரவேண்டும். மற்றவர்களையும் பாதுகாக்கத் தூண்டவேண்டும்.

# 'வைத்தியராகி ஏழை மக்களுக்கு மருத்துவம் பார்ப்பேன்'



விளையும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். அப்படித்தான் இந்த சர்மிகாவும். இவ்வருட தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் 193 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து வவுனியா மாவட்டத்தில் முதலாவது இடத்தையும் வடமாகாணத்தில் இரண்டாம் இடத்தையும் அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழி மூலம் மூன்றாம் இடத்தையும் பிடித்துக் கொண்ட சர்மிகா, மருத்துவ தம்பதிகளான

## மாணவி சர்மிகா சர்வானந்தன்

டொக்டர். த.சர்வானந்தன், டொக்டர் சத்தியாவதி சர்வானந்தன் ஆகியோரின் மூத்த மகள். இவருக்கு ஒரு தம்பியும் இருக்கின்றார்.

வவுனியா இறம்பைக்குள மகளிர் மகாவித்தியாலய மாணவியான சர்மிகாவுக்கு தன் பெற்றோரைப் போல தானும் ஒரு வைத்தியராக வரவேண்டுமாம். பரீட்சை எழுதும்போதே தனக்கு இத்தனை புள்ளிகள் கிடைக்கும் என்று அனுமானித்துவிட்டதாகக் கூறுகிறார்.

தனக்குக் கிடைத்த பரிசுப்பொதிகள் மற்றும் புத்தகங்களை எல்லாம் பார்த்துக்கொண்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருந்த சர்மிகாவிடம் உரையாட எமக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. எவருடனும் அதிகம் பேசாத சர்மிகா நாம் கேட்டதற்கு 'ஓம்' என்றுதான் அடிக்கடி பதில் கூறினார்.

நீங்கள் பரீட்சைக்கு எவ்வாறு தயாராகினீர்கள்? உங்கள் பெற்றோரின் பங்களிப்பு என்ன?

'பாடசாலை நேரங்கள் தவிர மேலதிகமாக வீட்டில ஐந்து மணித்தியாலங்கள் படிப்பன். ரியூசன் போவன். வீட்டில அம்மா எல்லா பாடங்களையும் சொல்லித்தருவார்' என்றார்.

பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் எல்லோரும் என்ன கூறினார்கள்?

'எல்லோருக்கும் நல்ல சந்தோஷம். கெட்டிக்காரி, தொடர்ந்து இதுபோல படிக்க வேணுமெண்டு Wish பண்ணினாங்க' என்ற சர்மிகாவுக்கு தன் வகுப்பாசிரியை கோமதி ஸ்ரீதரனை மிகவும் பிடிக்குமாம்.

சர்மிகாவுக்கு கணித பாடம் தான் அதிகம் பிடிக்கும். விளையாட்டுகளில் பெட்மின்டன் என்றால் அதிகம் பிடிக்குமாம். சாப்பாட்டு விசயத்தில் யாரையும் துணைக்கு அழைக்கமாட்டாராம். எதுவாக இருந்தாலும் ஒரு கட்டு கட்டிவிடுவேன் என்று அவரே கூறிவிட்டார். அதுமட்டுமல்ல. தான் ரொம்ப சமத்துப் பிள்ளையென்றும் தன் தம்பிதான் தன்னோடு சண்டைக்கு வருவாரென்றும் கூறினார்.

தந்தை சர்வானந்தாவிடம் மகள் பற்றிக் கேட்டபோது 'இயற்கையாகவே நன்றாக படிக்கக்கூடிய ஆற்றல் இவருக்கு இருக்கு. அதோட நாங்களும் நல்லா வழிகாட்டினம். முதலாம் வகுப்பிலிருந்தே வகுப்பில் முதலாவது பிள்ளையாகத்தான் வருவாள். எல்லா விடயங்களிலும் கெட்டிக்காரி' என்று தன் மகளைப் பார்த்து அகமகிழ்ந்தார்.

வருங்கால வைத்தியருக்கு வாழ்த்துக்கள் கூறி விடைபெற்றோம்.

- தவசி

# பாடல்களுடன் சேர்த்து வரிகளையும் பார்க்கலாம்

You tubeஇல் பாடல்களைப் பார்க்கும் சிலர் வரிகளையும் தேடுவார்கள். குறிப்பாக பாடகர்களுக்கு இது அவசியமாக இருக்கும். சிலவேளைகளில் இங்கு பாடலைப் பாத்துவிட்டு அல்லது Download செய்துவிட்டு பின் இணையத்தில் அதற்கான வரிகளைத் தேடிக் கொண்டிருப்பர். குறிப்பாக ஆங்கிலப் பாடல்களைப் பார்க்கும்போது அதிலுள்ள வரிகள் இலகுவில் புரிவதில்லை. You tube இல் பாடல்களோடு சேர்த்து அதற்கான வரிகளையும் அதனுடனேயே பார்க்கக் கிடைத்தால் எவ்வளவு சந்தோசமாக இருக்கும். வாருங்கள் பார்க்கலாம்.

**1. Lyrics for Firefox**



இதற்கு உதவக்கூடியதாக Firebox நீட்சி ஒன்று இருக்கிறது. இதன் பெயர் Lyrics. இது பாடலுக்கு ஏற்ற பாடல்வரிகளை இணையத்தில் தேடி எடுத்து அருகிலேயே காண்பித்து விடும். இதனால் நாம் பாடல்வரிகளைத் தேடும் வேலை மிச்சமாகிறது.


ஆனால், தற்போது ஆங்கிலப் பாடல்களுக்கு மட்டுமே அதிகமான பாடல் வரிகள் வருகின்றன. சில தமிழ்ப் பாடல்களுக்கும் ஆங்கில வரிகள் கிடைக்கின்றன. இதைக் கீழே உள்ள சுட்டியில் கிளிக் செய்து நிறுவியபின் ஒருமுறை Firebox I Restart செய்து கொள்ளவும்.

https://addons.mozilla.org/en-US/firefox/addon/lyrics/

பின்னர் You tube இல் வீடியோ பார்க்கும்போது அதன் அருகிலேயே சைட்பாரில் Lyrics என்ற இடத்தில் பாடல்வரிகளைக் காண்பிக்கும்.

உதாரணம் : மின்னலே வசீகரா பாடல் - http://www.youtube.com/watch?v=e_TZaqqnyJg

**02. Chrome - Music video lyrics for You tube**




நீங்கள் குரோம் உலவி பயன்படுத்தினால் அதற்கு தனியாக ஒரு நீட்சி இருக்கிறது. ஆனால், இது மேற்குறிப்பிட்ட Firebox நீட்சி அளவுக்கு அதிகமான வீடியோக்களுக்கு பாடல்வரிகளைக் காண்பிக்கவில்லை. இருந்தாலும் பயன்படுத்தலாம். குரோம் உலவியில் இந்த சுட்டியைக் கிளிக்செய்து நீட்சியை Add to Chrome கொடுத்தால் நிறுவப்படும்.



Download Music video lyrics for youtube பிறகு குரோம் உலவியில் யூடியூபில் ஏதேனும் வீடியோ பார்க்கும்போது அதற்குப் பொருத்தமான பாடல் வரிகள் இருந்தால் உலவியின் மேல்பகுதியில் Address bar இல் இருக்கும் ஐகன் Lyrics என்று காட்டும். அதைக் கிளிக் செய்தால் பாடல் வரிகள் காட்டப்படும்.

நிறுவிய பின்னர் உதாரணத்திற்கு இந்த வீடியோவை மாதிரிக்குப் பார்த்துக் கொள்ளுங்கள். http://www.youtube.com/watch?v=weRHyjj34ZE&feature=relmfu

# Cheat Books Data base



கையடக்கத் தொலைபேசியில் விளையாடுவதிலும் கணனியில் விளையாடுவதிலும் சிறியோர் மட்டுமன்றி வளர்ந்தோரும் தீவிர ஈடுபாடு காட்டி வருகின்றனர். சிலநேரம் அடுத்த கட்டத்திற்கு (Level) செல்வதற்கு சிலர் விழிபிதுங்கி நிற்பார்கள். விளையாட்டுக்களில் சில இரகசியச் சொற்களைக் கொடுப்பதன் மூலம் அடுத்த கட்டத்திற்கு முன்னேறலாம். இச்சொற்கள்தான் Cheat Codes என்று அழைக்கப்படுகின்றது. அதாவது விளையாட்டில் குறுக்கு வழியில் முன்னேற இதனைப் பயன்படுத்துவார்கள்.

கணனியில் விளையாடப்படும் விளையாட்டுகள் ஆயிரக்கணக்கில் இணையத்தில் பகிரப்படுகின்றன. குறிப்பிட்ட விளையாட்டுக்கு Cheat codes வேண்டும் என்றால் நீங்கள் அதனை கூகிளில் தேடிக்கண்டு பிடிக்கலாம். இதற்கென இருக்கும் ஒரு மென்பொருள்தான் Cheat Books Database. இதில் 20000 க்கு மேற்பட்ட விளையாட்டுகளின் இரகசியச் சொற்கள் கொடுக்கப்பட்டுள்ளன. சில முக்கியமான இடங்களில் எப்படி விளையாட வேண்டுமென்ற குறிப்புகளும் இதில் தரப்படுகிறது.

Database என்ற பெயருக்கேற்ப அனைத்து தகவல்களும் இதன் தரவுத் தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் PC, Walkthroughs, Playstation, Playstation 2, Playstation 3, Sega, Nintendo 64, Nintendo DS, DVD, Gameboy Advance, Gameboy Color, N-Gage, Nintendo DS, XBox, XBox 360, iPhone, Gamecube, Dreamcast, Super Nintendo, Wii, Sony PSP போன்ற வெவ்வேறு வகையான கருவிகளில் விளையாடக்கூடிய விளையாட்டுகளின் குறிப்புகள் மற்றும் சீட் கோட்களை ஒரே இடத்தில் தொகுப்பாகப் பார்த்துக் கொள்ள முடியும்.

மேலும் உங்களுக்கு எதேனும் இரகசியச்சொற்கள் தெரிந்திருப்பின் இதிலேயே புதிதாக சேர்த்துக் கொள்ளலாம். குறிப்பிட்டகால இடைவெளியில் இதனை update செய்து கொண்டால் அண்மைய குறிப்புகள் அனைத்தும் இந்த மென்பொருளில் இணைந்துவிடும்.

இதில் எளிதாக விளையாட்டுகளின் வரிசைப் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. எளிதாகத் தேடுவதற்கும் வசதியிருக்கிறது. இங்கிருந்தே குறிப்பிட்ட விளையாட்டுக்கு இணையத்திலும் தேடும் வசதியும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த இலவச மென்பொருள் விளையாட்டுப் பிரியர்கள் பயன்படுத்திப் பார்க்க வேண்டிய மென்பொருள்.

தரவிறக்கச் சுட்டி: http://www.cheatbook.de/cheatbookdatabase2011.htm

# பெரிய கோப்புகளை இலகுவாகப் பிரிக்கலாம்

இணையத்தில் பெரிய கோப்புகள் பகிரப்படும் போது சற்று கடினம்தான். அவற்றை எமக்குத் தேவையான விதத்தில் Folder மற்றும் Size வாரியாக பகுதி பகுதியாகப் பிரித்துக் கொள்ளலாம். அப்படிப் பிரிக்கும்போது அளவையும் நாமே தெரிவுசெய்து பிரிக்கும் வசதியும் உள்ளது.

**bkPrograms**

தரவிறக்கச் சுட்டி : http://bkprograms.weebly.com/downloads.html

இத்தளத்திற்குச் சென்று Download என்ற பொத்தானை சொடுக்கி மென்பொருளைத் தரவிறக்கலாம். தரவிறக்கி மென்பொருளை இயக்கி நம்மிடம் இருக்கும் பெரிய அளவுள்ள கோப்புகளை Select Folder என்பதை சொடுக்கி தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

Destination Folder என்பதில் எந்த இடத்தில் சேமிக்க வேண்டுமோ அதையும் கொடுத்து, அடுத்து இருக்கும் By Size என்பதில் எவ்வளவு அளவுள்ள கோப்புகளாக பிரிக்க வேண்டும் என்பதையும் கொடுத்து Files Should be என்ற Option இல் Copied என்பதையும் தேர்ந்தெடுத்து Split என்பதை சொடுக்கினால் போதும்.

உடனடியாக கோப்புகள் நாம் குறிப்பிட்ட இடத்தில், நாம் குறிப்பிட்ட அளவில் அப்படியே சேமிக்கப்பட்டிருக்கும். இணையத்தில் சிறிய கோப்புகளாக பிரித்து அனுப்புபவர்கள் File type என்பதில் Zip அல்லது Rar என்ற Option ஐ தேர்ந்தெடுத்து Split செய்தும் அனுப்பலாம். கண்டிப்பாக பெரிய அளவுள்ள கோப்புகளை சிறிய அளவுள்ள கோப்புகளாக பிரிக்க விரும்புபவர்களுக்கு இந்த தகவல் பயனுள்ளதாக இருக்கும்.



# சமூகத்தின் கண்களான ஆசிரியர்களின் பங்களிப்பு

## ஒக்டோபர் 06 சர்வதேச ஆசிரியர் தினம்

சர்வதேச ரீதியாக கொண்டாடப்படுகின்ற தினங்களில் முக்கியமானது ஆசிரியர் தினமாகும். இத்தினத்தின் பிதாமகன் ஆசிரியர் என்றும் பாராட்டப்பட வேண்டியவர்தான் என்பதை உணர்ந்ததால் என்னவோ உலக சமுதாயத்தின் எழுச்சிப் பெருவிழாவாக ஒக்டோபர் 06ஆம் திகதி, சிலநாடுகளில் ஒக்டோபர் 5ஆம் திகதியிலும் கொண்டாடி வருகின்றனர்.


அனைத்துவிதமான தொழில் துறைகளுக்குச் செல்வதற்கு முன்னர் ஒருபிள்ளை ஆரம்பத்தில் பள்ளி சென்று ஆசிரியரிடம் பாடம் பயின்று அதன்பின்னர் எழுதவும், வாசிக்கவும் பழகி அவனது வளர்ச்சியில் சுமார் 13 ஆண்டுகள் பாடசாலையிலேயே கழிகிறது. ஆசிரியரும் மாணவரும் ஒன்றாக இணைந்து கற்றல் தொழிற்பாட்டில் ஆசிரியர் தன்னை மெழுகுபோல் உருக்கியும், உருகியும் பிள்ளையின் வாழ்வில் உயர்வான இலட்சியங்களை ஊட்டிவிட்டு, நாட்டினதும் அவனது குடும்பத்திற்குமான நற்பிரஜையை தோற்றுவிக்கின்றான்.

இந்தநிலைக்கு ஒருபிள்ளை வந்தபின் அவன் என்றும், எப்போதும் நினைத்தாலும் அவன் நினைவில் வருபவர்கள் ஆசிரியர்கள். ஒவ்வொருவருடைய வாழ்விலும் உன்னதமான திருப்பத்தை ஏற்படுத்திய ஆசிரியர்களை நினைவுக்கு கொண்டுவரும் இந்நாளில் சர்வதேசமே கைகூப்புகிறது.

ரூசோவின் சமுதாய ஒப்பந்தம் (Social Contract) என்கிற நூலில் 'மனிதர்களால் புதிய சக்திகளை சிருஷ்டிக்க முடியாது. ஆனால் ஏற்கனவே உள்ள சக்திகளை ஒன்றுதிரட்டி அவற்றைக் கொண்டு செலுத்த முடியும்' எனக் கூறப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மனிதர்களிடம் உள்ள சக்திகளை திறன்களை வெளிக்கொணர வைக்கின்ற, மாணவர்களின் திறமை எதிர்காலத்தில் ஒளிபாய்ச்சிட உதவுகின்ற ஒரு சீர்மையாளராக ஆசிரியர் சமுதாயம் திகழ்கின்றது. அவ்வாறு திரட்டப்படுகின்ற கல்வியின் ஊடாக அதாவது 'ஒரு சமூகம் பண்பாட்டைக் காப்பாற்றி பின்வருகின்ற சந்ததிகளுக்கு கொடுக்கின்ற கருவிதான் கல்வியாகும்' என்று சிந்தனையாளர் பேர்சிநண் கூறுகின்றார்.

இறைவனின் அருட்கொடையாகவே நாம் ஆசிரியரை பார்க்கவேண்டும். குருகுல அமைப்பில் ஆசிரியருக்கு அதிக மதிப்பும் மரியாதையும் இருந்தது. இன்று கணனி யுகம். எதிலும் வேகம் காணப்படுகிறது. இன்று கற்றல் செயற்பாட்டில் முக்கியத்துவம் கொடுத்துள்ள நவீனகற்றற் சாதனங்கள் எதுவும் ஆசிரியருக்கு ஈடாகாது என்றே கூறலாம். நேரிடையாக ஆசிரியரின் வழிகாட்டலுடன் ஒவ்வொரு கற்றலும் அமைகின்றபோது அவை நினைவில் நிற்கும்.

மனிதவாழ்வினை நெறிப்படுத்துவதே கல்வியின் பொதுநோக்குகளில் ஒன்றாகும். அவ்வாறான நெறியினை பாடசாலையில் ஆசிரியர்களே நெறிப்படுத்துகின்றனர். யாவரும் தன்பிள்ளை என்று வகுப்பறையில் ஒவ்வொரு மாணவனையும் இனங்கண்டு பாடங்கள் ஊடாக நல்லாற்றலையும்,




தத்துவக் கருத்துக்கள் ஊடாக இலட்சிய வேட்கையையும் உருக்கொடுக்கின்ற ஒரு முகவராக ஆசிரியர் தொழிற்படுகின்றார். யாதும் ஊரே யாவரும் கேளீர் எனும் உயரிய சிந்தனையுடன் வாழ்ந்த மக்கள் மனதில் நிறைந்திருந்த விபுலானந்தர் அடிகளார் ஒரு ஆசிரியராகவே தம் பாதையை அமைத்துக் கொண்டார்.

ஆசிரியர் பணியானது வெறுமனே ஏட்டுக் கல்வியை மாத்திரம் மாணவர்களுக்கு கற்பிக்கின்ற நிலையிலிருந்து மாற்றம் பெற்று இன்றைய நவீன சிந்தனைகளின் அடிப்படையில் மாற்றமுற்றுவருகின்றது. சமுதாயத்தின் ஏணிகளாகவும், தோணிகளாகவும் இருந்து வழிகாட்டுகின்ற பாலங்களாய் அமைகின்ற ஆசிரியர்களது பல்வேறு பிரச்சினைகளும் இங்கு நினைவு கூறப்படுதல் அவசியமாகும். சம்பள முரண்பாடுகள் இன்னும் சரியான முறையில் திட்டமிட்ட அடிப்படையில் அமையவில்லை. முக்கியமான பிரச்சினையாக காணப்படுவது இடமாற்றம். அரசியல்வாதிகளைக் கையில் வைத்துக் கொண்டு நீண்டகாலம் ஒரே பாடசாலையில் கற்பித்தல், புதியவர்களுக்கு வீட்டுக்கு அண்மையில் உள்ள பாடசாலைகளில் நியமனம் பெறல் போன்ற செயற்பாடுகள் காரணமாக தொலை தூரங்களில் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கும், இடமாற்றம் பெற முடியாத ஆசிரியர்களுக்கும் பரிகாரம் காணுதல் அவசியமாகும்.

இன்றைய நாளில் வேலைப்பளுக்கள் அதிகமுள்ள ஒரு தொழிலாக கற்றல் செயற்பாடுகள் காணப்படுவதாக பலர் தெரிவிக்கின்றனர். வெளிவாரி மதிப்பீட்டின் போது ஆசிரியர்களை மதிப்பிட்டு கூடுதல் புள்ளிகளைப் பெறுகின்ற ஆசிரியருக்கு எவ்விதமான பிரயோசனமும் இல்லை. குறைவாக எடுப்பவரும், கூடுதல் புள்ளிகள் எடுப்பவரும் சமனாகவே கருதப்படுகின்ற ஒரு போக்கு இன்றைய பாடசாலைக் கல்விப் புலத்தில் காணப்படுகின்றது. இந்த நிலை மாறவேண்டும். ஆசிரியர் பணியின் புனிதத்துவமும் மதிக்கப்படுகின்ற நிலை பேணப்படுவதற்கு பாடசாலையின் அதிபர்களும் உதவிக்கரம் நீட்ட வேண்டும். சில பாடசாலைகளின் அதிபர்கள் தங்களுடைய வேலைக்காக வெளியே சென்று விடுவார்கள். இதைப் பற்றி ஆசிரியர் ஒருவர் வினவினால் அவர் கூடாத ஆசிரியர் என்கிற பட்டத்தைச் சூட்டிவிடுகின்ற அதிபர்கள் பலர் இன்றைய கல்விப் புலத்தில் காணப்படுவது வேதனையான விடயமாகவே தோன்றுவதாக ஆசிரியர்கள் பலர் தெரிவிக்கின்றனர்.

வீட்டில் வேலைகள் ஒன்றும் செய்யாத பிள்ளைகூட ஆசிரியரின் அன்பான வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நடக்கும். எதையும் செய்வதற்கு துணிந்து நிற்கும். இதனைப் பயன்படுத்தி பிள்ளைகளை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துகின்ற பல ஆசிரியர்களைப் பற்றியெல்லாம் அண்மைக் காலங்களில் பத்திரிகையில் செய்திகள் வெளிவந்தும் உள்ளன. மனிதப்பிறவிகளில் எத்தனையோ வகையில் இருப்பது போல ஆசிரியர் தொழிலுக்கு பொருத்தமில்லாதவர்கள் சிலர் இணைந்துள்ளமையினால் இவை ஏற்படுகின்றன என்றுதான் கூறவேண்டும்.


அதற்காக அனைவரும் பொருத்தமில்லாதவர்கள் என்கிற சொல்லை வேறாக வைத்துவிட்டு ஆசிரியர் கள் தம்மை நாடிவருகின்ற மாணவர்களுக்காக அர்ப்பணம் செய்கின்றார்கள் என்பதற்காக அவர்களின் சேவைகளையும், அந்தஸ்தினையும் சமுதாயப் பார்வையில் எப் பெறுமானத்துடனும் கணிப்பிட முடியாது என்றே கூறவேண்டும். வரலாற்று ரீதியாகப் பார்த்தால் பண்டைய குருகுலவாசமுறையின் போது மாணவன் குருவிடத்தில் சென்று சிலகாலம் வாழ்ந்து குருவின் பண்புகள், நடத்தைகள், அறிவுத்திறன்கள் என்பவற்றை அப்படியே பின்பற்றி நெட்டுருப்பண்ணி இறுதியாக குருவின் மதிப்பை பெற்றுவிடுகின்றான்.

◄ எஸ்.எல்.மன்சூர் ►

இன்று அந்நிலை இல்லாவிட்டாலும் மதிக்கப்படுகின்ற தன்மைகள் அண்மைக் காலங்களில் குறைவடைந்து கொண்டு வருவதாக பல ஆசிரியர்கள் கூறுகின்ற செய்திகள் நமது காதுகளுக்கும் விழுகின்றன. இருந்தாலும் மாணவன் ஆசிரியர் என்கிற புனிதமான உறவு அழிவில்லாமலும் இருக்கின்றன. தனியார் பள்ளிக்கூடங்கள் அதிகமதிகம் உருவாகி வருகின்ற இன்றைய நாட்களில் நாம் காசு கொடுத்துத்தானே கற்கின்றோம் எதற்கு மதிப்பு என்கிற மாணவர்களுக்கு மத்தியிலும் இந்த ஆசிரியரை என்னால் மறக்கமுடியாது அவரின் அறிவுரைதான் என்னை இந்த உயர்நிலைமைக்கு ஆளாக்கிவிட்டது என்றுகூறும் பலரையும் பார்த்தும் இருக்கிறோம். அப்படியானவர்களின் உள்ளங்களில் நிறைந்திருக்கும் ஆசிரியர்களை நினைவுறுத்துவதற்காக இந்நாள் அவசியமானதே



## ◄ சிலோன் சின்னத்தம்பி ►



*வணக்கம் பாருங்கோ...! எப்பிடிச் சுகமா இருக்கிறியளே...?*

*எங்கண்ட பிள்ளயளிண்ட பழக்க வழக்கத்தால எங்கட இனம் எங்க போய் நிக்கப்போகுதோ தெரிய இல்ல பாருங்கோ. சும்மா சுனாமி மாதிரியெல்லே எங்கட பிள்ளயள் போனும் கையுமாச் சுழண்டு திரியுதுகள். உது கிடக்கட்டும் மோன அண்டைக்கு உந்தச் சாட்டிக் கடற்கரைக்கு ஒருக்காப் போவமெண்டு அந்தப்பக்கம் போனனான் பாருங்கோ அங்க எல்லாம் ரெண்டு ரெண்டா இருக்குதுகளடாப்பா. அங்க ஒருத்தர் புறுபுறுத்துக் கொண்டு வேலியடைச்சுக்கொண்டு நிண்டார் மோன. 'என்னண்ண இங்கால குடிவரப்போறியளே? அட உமக்கென்ன விசரே அண்ணை இடிஞ்சு கிடக்கிற வீட்டுக்கு வேலிபோடுறியள்' எண்டு கேட்டதுக்கு மனுசன் குழம்பிட்டுது. 'இல்லயடாப்பா சின்னத்தம்பி சோடி சோடியா வாறதுகள் மறைவா போய்த் தங்கட 'அலுவலுகள' முடிக்கீனம். அதாண்டாப்பா அடைக்குறன்' எண்டுது மனுசன். நானும் கொஞ்சம் அங்கால எட்டிப்பாத்தன் அதுகளும் கொஞ்சம் கிளுகிளுப்பாகத்தான் இருக்குதுகள். மோன முந்தியெண்டால் ஆடு மாடு போகாமல் இருக்கத்தான் வேலி அடைப்பம். ஆனா இப்ப மனுசர் போகாம இருக்கவெல்லோ அடைக்க வேண்டியிருக்குது பாருங்கோ. அது சரி ஆடு மாடுகளெல்லாம் உடுப்போடயே திரியுதுகள் இல்லத்தானே. உதைக் கவனிக்குறதுக்கு எங்கட தலைவர்மாருக்கு நேரமில்ல பாருங்கோ... ஏனெண்டால் எங்கட தலைவர்மார் எல்லாரும் வெளிநாட்டுச் சிற்றிசன்காரர் தானே? பாவம் அவை பிசி மோன...*

*அப்ப நான் போட்டு வரட்டே!!!*

*''மக்கள் வேறொன்றில் நம்பிக்கை வைக்க வேண்டுமென்றால் முதலில் தங்களில் நம்பிக்கை இழக்க வேண்டும்!!''*

# தத்துவ விசாரம்



1995ஆம் ஆண்டு சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பயனாக யாழ் மாவட்ட மக்கள் அனைவருமே வன்னிக்கு இடம் பெயர்ந்த காலம். கிட்டத்தட்ட ஆறு இலட்சம் மக்கள் தங்கள் உடைமைகளையும் சொந்தங்களையும் இழந்து விட்டும் பலகாத தூர நடைப்பயணத்தில் பயங்கரம் நிறைந்த கிளாலி கடலையும் கடந்து வந்து சேர்ந்திருந்தார்கள். எங்கு பார்த்தாலும் அகதிகள் நலன்புரி நிலையங்கள். உணவு போதாது, குடி தண்ணீருக்குத் தட்டுப்பாடு. மலேரியா வேறு அவர்களை வயது வித்தியாச மின்றி வருத்திக் கொண்டிருந்தது. மருந்துகளோ தடை செய்யப்பட்டிருந்தன. இந்த மனித அவலத்தின் மத்தியில் ஒரு எட்டு வயதுச் சி றுவனை அங்கு நான் சந்தித்தேன். 'எம்.ஜி.ஆர் வருவாரா?' என்று என்னிடம் கேட்டான் அந்த அப்பாவிச் சிறுவன். 'ஏன் கேக்கிறீங்கள்?' என்று நான் ஆச்சரியத்தோடு வினவவும், 'அவர் வந்தால்தான் கெட்டவங்க எல்லாரையும் அடிச்சுப் போட்டுட்டு எங்களை எங்கடை வீட்டுக்குக் கொண்டு போய் விடுவார்' என்றான் அவன்!

எம்.ஜி.ஆர் இறந்து 8 வருடங்களின் பின்பும்கூட அவரின் வரவை எதிர்பார்த்து ஏங்கிய அந்தச் சிறுவனைப் போலத்தான் அனேகமான வளர்ந்தவர்களின் மனநிலையும் இருக்கின்றது. எங்களெல்லோருக்கும் ஒரு ஹீரோ தேவை. நாங்கள் ஒன்றுமே செய்ய மாட்டோம். அவர் எப்படியாவது கடைசி நேரத்திலேயாவது எங்களை வந்து ஒற்றைக் கையால் சண்டை பிடித்துக் காப்பாற்றுவார் என்கின்ற நப்பாசையுடன் காலந்தள்ளத் தயாராக இருப்போம். சினிமாவிலும் அதைத்தானே காட்டுகின்றனர்? இந்த யாரையோ எதனையோ நம்பி வாழும் போக்குகளினால்தான், ஸ்தாபிக்கப்பட்ட மதங்கள் தாமும் வாழுகின்றன.

உங்களுக்குத் தெரியாத பதில்கள் எல்லாம் தங்களிடம் இருக்கின்றது என்பதை உங்களை முதலில் நம்ப வைப்பன அவை. உலகம் எப்படித் தொடங்கியது, ஆணா பெண்ணா முதலில் இறைவனால் படைக்கப்பட்டார், நல்ல விசயம் எது தகாத விசயம் எது என்று இவ்வாறு ஆயிரத்தெட்டு வரையறைகள் கொண்டியங்கும். அது மட்டுமா? தான் வழங்கும் பதில்களைக் கேட்ட கேள்வியின்றி ஏற்றுக்கொள்ளவும் பலவழிகளினால் நிர்ப்பந்திக் கும். அது சொல்வதற்கு எதிராக நாம் ஏதேனும் செய்தாலும்கூட அதற்குரிய தண்டனையை அனுபவித்தே தீருவோம் என்று வேறு எம்மைக் கனகச்சிதமாகப் பயமுறுத்தியும் வைக்கும். தமது நூல்களின் வழியேயும் ஒழுங்கு விதிகள் வழியேயும் கேள்வி கேட்காமலேயே வாழ்ந்து மடிய வழி செய்யும்.

கேள்வி கேட்டால் என்ன நடக்கும்? பிரச்சி னையின் மூலத்துக்கே நாம் போவோம். போனால் மதங்கள் எமக்குச் சொன்ன பதிலைவிட வேறொரு பதிலுக்கு நாங்கள் வரக்கூடும். அப்படி வந்தால் பிறகு மதங்களில் தங்கியிராமல் எமக்கொரு வழி உருவாகி விடுமே. எனவே, ஒவ்வொருவரும் தமது சொந்த விவேகத்திலும் தமது விளக்கத்திலும் நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதையே முதலில் அவை ஊக்குவிக்கின்றன. இன்னும் ஏதோவொன்றை நாம் நம்பத் தொடங்கினால், எம்மில் எமக்கே நம்பிக்கை இல்லை என்பதுதானே அர்த்தம்?


மனித வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே எத்தனை மத நிறுவனங்கள் தோன்றியும் எத்தனை போதனைகளைச் சொல்லியும் இன்னமும் கருணையும் அமைதியும் இந்த உலகத்துக்குக் கைகூடவில்லையே என்பதைக் கண்கூடாகக் கண்டும்கூட, அனேக வன்முறையான முரண்பாடுகளுக்கு அவை காலாக இருப்பதை அனுபவித்தும்கூட, முன்னேற்றமான பரிணாம வளர்ச்சி கண்ட மனிதாபிமானக் கொள்கைகளின் பயனாக அவை தாம் காலாவதியாகி நிற்பதை உணர்ந்தும்கூட அவற்றையே கண்மூடித் தனமாக நாம் பின்பற்றுவது, திரை செலுலாய்டான எம்.ஜி.ஆரை நம்பிய சிறுவன் போலத்தான் இருக்கிறது. இத்தனை மைல்கள் கடந்து எத்தனை கட்டங்களை வெற்றி கொண்டு வன்னி வந்து சேர்ந்த மக்கள் திரை பிம்பமான எம்.ஜி.ஆரைவிட எவ்வளவு சக்தி வாய்ந்தவர்கள்! அவர்கள் தங்கள் சக்தியில் நம்பிக்கை கொண்டு ஒன்று திரண்டு தகுந்த மூலோபாயங்களைக் கைக்கொண டிருந்தால் எந்த சாதனையையும் செயற்படுத்தி யிருக்கலாமே.

எங்களுக்கு வேண்டியது ஆன்மீக வாழ்முறையேயன்றி நிறுவனமயப்படுத் தப்பட்ட மதங்களல்ல. எங்கள் மீதும் அன்பு காட்டும் எமது ஆற்றல் மீதும் அன்பே உருவான கடவுளின் மீதும் நம்பிக்கை கொள்ளுவோம், ஆனால் பயத்தில் அல்ல.

**◄ ரிஷி பத்தினி ►**

---

**நூல் : மேகவாழ்வு**
**ஆசிரியர் : வெலிமடை ரபீக்**
**உரிமை : புரவலர் புத்தகப் பூங்கா**
**வெளியீடு : ஞானம் பதிப்பகம்**
**விலை : ரூ. 150**




பொதுவாகவே கவிதைகளை கவிஞர்கள் கற்பனை வடிவில் இயற்றுகிறார்கள் என்கிற ஒரு நிலையையும் தாண்டி தனது நேரடி அனுபவங்களையும் கவிதையாக பொழிந்து சுவைபட மக்களுக்கு தெளிவுபடுத்தவும் செய்கின்றனர். வெலிமடை ரபீக் நாடறிந்த மலைநாட்டு எழுத்தாளர். கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக தனது ஊரின் பெயரை இணைத்து தேசிய பத்திரிகைகளில் மாத்திரமன்றி பல்வேறு இலக்கியச் சஞ்சிகைகளிலும் தனது எழுத்தாற்றலை கவிதையாக பொழிபவர்.

இக்கவிதைத் தொகுதியினுள்ளே 28 தலைப்புக்களில் கவிதை யாத்துள்ளார். 'சுனாமியின் சுவடுகள்' எனும் கவிதையில் தாயின் வேதனையை தத்ரூபமாக படம்பிடித்துக்காட்டியிருக்கிறார். 'நெருப்பணைக்க' என்ற கவிதையில் யுத்தத்தின் அகோரத்தினை இவ்வாறு விளக்குகிறார்.

'நெருப்பணைந்தால்

விறகுகளை விற்பதெவ்வாறு
ஒருவர் முழங்கினார்'

'சமாதானப்பாடல்'
என்ற கவிதையில் ஓரிடத்தில்
கவிஞர் கூறும் மொழிநடையே ஒரு அலாதிதான். 'இனியொரு கொடிய போர் இங்கில்லை இங்கில்லை' என்று கூறுகிறார். வேறொரு கவிதையில் மரத்திற்குள்ளது மனிதனுக்கு இல்லையே எனும் கருத்தை 'இருக்கும் நிலையிலும், இல்லாத நிலையிலும் உதவும் இதயம் மரத்திற்கு, நமக்கு?' இவ்வாறு கேள்வி கேட்டு கனவுலகுக்கு செல்ல தனது கண்மணியை அழைக்கிறார். காரணம் கேட்டால் இவ்வாறு கூறுகிறார் 'இன்னதென்று பிரித்தெடுத்து அறியமுடியாமல் பெரும் சமுத்திரமாய் கலந்து, ஒன்றாகி நிற்கவேண்டிய மானுடத்தில் ஒரு பௌத்தனை, ஒரு இந்துவை, ஒரு முஸ்லிமை, ஒரு கிறிஸ்துவை தேடியலைகிறது' வேசம் போடுகிற மனிதர்களின் நிலையை அறிந்து கண்மணி நீயாவது கனவுலகிற்கு வா என அழைப்பு விடுக்கிறார் கவிஞர்.

யுத்தத்தின் அவலங்கள் பல இடங்களில் விரவி காணப்படுகின்றன. ஒரு மனித மனத்தின் துன்பியல் அவலங்களை நன்கு சித்தரிக்கின்றார்.




'மலையகமே இளைய மலையகமே' தலைப்பில் தனது மலைவாழ் சமூகத்தின் உயர்வுக்குக் கல்வியின் அவசியத்திதை வலியுறுத்தி இவ்வாறு புலம்புகிறார்.

'அறிவுத்தேன் பல இடங்களில் பலகுடங்களில் உனக்குத் தெரியாமல் ஒளிந்திருக்கும் அதை, தேடிப்படி, தேடிக்குடி, கல்வி நம் அம்மா அப்பாக்களோடு கைகுலுக்கிக் கொள்ளாத பெரும் செல்வம், மலையேறி அவர்கள் மடிந்துவிழுவது நாங்கள் நிமிர்ந்திருக்கத்தான்' என்று கூறும் விதம் மனதை வெகுவாகப் பாதிக்கின்றது. வெலிமடை ரபீக் அவர்களின் கவிதைகள் தத்ரூபமாகவும், யதார்த்தத்தை சமர்ப்பிக்கும் வாழ்வின் நிலைகுலைவுகளை எடுத்தியம்ப வாசிக்கத்தூண்டும் வகையில் எழிய மொழிநடையில் புதுவிதமாய் நடப்பியல் புகளின் காயங்களை தொட்டுச் செல்கின்றன. எங்கே நீங்களும் ஒருமுறை வாசி த்து மேகவாழ்வின் கவிதைத் துளிகளுக்குள் போய்த்தான் பாருங்கள். அட்டைப்படத்தில் வரும் சமாதான புறாவின் திசையை நோக்கி நாமும் செல்வோம் சமாதானம் வெறும் மேகமாய் கலைந்திடாது, நிரந்தரமாய் அமையவேண்டிய அவசியத்தை இந்த மேகவாழ்வு கவித்தொகுதி தொட்டு நிற்கிறது என்றே கூறலாம்.

**செங்கதிரான்**

எழுத்தாளர்களே...!
நீங்களும் நூல்களை வெளியிட்டிருந்தால், உங்களுடைய நூலின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பிவையுங்கள். நிச்சயமாக அவை 'இருக்கிறம்' சஞ்சிகையின் 'ராக்கை' பகுதியில் பிரசுரிக்கப்படும்.

'இருக்கிறம்' வார இதழ்,
03, டொரிங்டன் அவனியூ, கொழும்பு-7
தொலைபேசி: 011 3150836.

நேரடி ரிப்போர்ட்

# யாழில் அதிகரித்துவரும் சட்டவிரோத மின்பாவனை


ஞானகணேசன்

## திண்டாடுகிறது யாழ்ப்பாண மின்சாரசபை



✱ ஜனவரி மாதத்தில் 5 பேரும் பெப்ரவரி மாதத்தில் 21 பேரும் மார்ச் மாதத்தில் 33 பேரும் ஏப்ரல் மாதத்தில் 27 பேரும் சட்டவிரோத மின் பாவனையாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

✱ இவ்வருடத்தின் முதல் 4 மாதகாலப் பகுதிகளில் பிடிபட்டவர்கள் மட்டும் 40 இலட்சம் ரூபாவை நீதிமன்றங்களில் அபராதமாகச் செலுத்தியுள்ளனர்.

✱ கடந்த மே மாதத்தில் வட்டுக்கோட்டை, பருத்தித்துறை, யாழ். நகரை அண்டிய பகுதிகளில் 21 சட்டவிரோத மின் பாவனையாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

✱ இவர்களிடமிருந்து 9 இலட்சத்து 65 ஆயிரத்து 294 ரூபா அபராதமாக அறவிடப்பட்டுள்ளது.

✱ கடந்த ஜூன் மாதம் யாழ். நகரை அண்டிய பகுதிகளில் 17 சட்டவிரோத மின்பாவனையாளர்கள் இனங்காணப்பட்டனர்.

✱ அவர்களிடமிருந்து 4 இலட்சத்து 12 ஆயிரத்து 606 ரூபா அபராதமும் அறவிடப்பட்டுள்ளது.

இன்று நாடளாவிய ரீதியில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்து வருவதை அன்றாடம் செய்திகளுடாக அறிந்து வருகின்றோம். சட்டவிரோத மின் பாவனையாளர்களிடமிருந்து பெரியளவில் தண்டப்பணம் அறவிடப்பட்டும் இந்நடவடிக்கை தொடர்ந்து நடைபெறத்தான் செய்கின்றது.

யாழ் மாவட்டத்தில் மட்டும் கடந்த மூன்று மாத காலத்தில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற 59 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மொத்தம் 19 இலட்சம் ரூபாவை அபராதமாக செலுத்தியுள்ளனர். எமக்குக் கிடைத்த இவ்அதிர்ச்சி செய்தியைத் தொடர்ந்து இலங்கை மின்சார சபையின் யாழ். மாவட்ட பிரதம மின் பொருளியலாளரான சங்கரப்பிள்ளை ஞானகணேசனைச் சந்தித்தேன்.

தமக்கு வரும் தகவல்களைக் கொண்டு முடிந்தளவு தாம் சட்டவிரோத மின் பாவனையை மட்டுப்படுத்தி வருவதாக அவர் கூறினார். சட்டவிரோத மின்பாவனை தொடர்பான தகவல்கள் மின்சார சபைக்கு கடிதம் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதனையடுத்து குறித்த இடத்திற்கு மின்சாரசபை ஊழியர்கள் சென்று அதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

மின்மானி வாசிப்பாளர்கள் தம் கைவசம் 3 ஆண்டுகளுக்குரிய வாசிப்பினை வைத்திருப்பார்கள். எனவே, ஒவ்வொரு முறையும் வாசிப்பினை எடுக்கும்போது திடீரென வாசிப்புப் பெறுமானம் குறைந்தால் அவ்விடத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பாவிக்கப்படுவது தெரிய வரும். அதனை எப்படி அறிந்துகொள்வீர்கள் என்று கேட்டேன்.

'நாங்கள் அதனை ஊடுருவிப்பார்க்கும்போது மின்மானியில் துளையிட்டு வைத்திருப்பார்கள். இவ்வாறு துளையிடுவதால் மின்மானியின் டிஸ்க் சுற்றாமல் விடுகின்றது. இதன்மூலம் அவர்களது வாசிப்பு குறைவடைகின்றது. ஒரு மாதத்திற்கு எமக்கு கிட்டத்தட்ட பத்து முறைப்பாடுகள் கிடைக்கும். தொலைபேசியில்தான் அதிக முறைப்பாடுகள் கிடைக்கும்.

எமது ஊழியர் ஒருவர் ஆகக்குறைந்தது ஒரு வீட்டின் மின்மானி இருக்கும் இடம் வரையே செல்ல முடியும். அதற்கு மேல் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமாயின் குறித்த வீட்டில் வசிப்போருக்கு மூன்று நாட்கள் தவணை கொடுக்க வேண்டும். அதன் பின்னர்தான் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த மூன்று நாட்களுக்குள் குற்றவாளி தப்பிக்க வாய்ப்புள்ளது. அத்துடன் இச்சோதனை நடவடிக்கையின் போது வீட்டிலுள்ள மின்சார உபகரணங்கள் அனைத்தும் சோதனைக் குட்படுத்தப்படும்' என்றார்.

இவர்களைப் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்துவதில் தாம் பாரிய சவால்களை எதிர்நோக்குவதாக எம்மிடம் தெரிவித்தார். அது தொடர்பாக நாம் கேட்டபோது 'இவங்கள கோட்டுக்குக் கொண்டு போனா நாமதான் அலையணும். அவங்க மறுபடியும் தப்பு பண்ணிட்டே இருப்பாங்க. எங்க தரப்பில் விவாதிப்பதற்கு நாம சட்டத்தரணி நியமிக்கணும். அதைவிட சம்மந்தப்பட்ட குற்றவாளிகளை கோட்டிற்கு கொண்டு செல்வதற்கு வாகன வசதியையும் நாங்களே செய்யவேண்டியுள்ளது.

எல்லாவற்றையும் விட மனிதாபிமான அடிப்படையில் குற்றவாளிக்கு உணவு வழங்க வேண்டிய தேவையும் உள்ளது. பொலிஸிடம் கையும் மெய்யுமாக பிடிபட்டால் அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்புவார்கள். ஆனால் பாரிய தண்டனைகள் எதுவும் வழங்கப்படுவதில்லை. செலுத்த வேண்டிய மொத்தப்பணத்தைப் பெற்றுக்கொள்வதோடு தண்டப்பணமாக சிறிய தொகைப் பணமே அறவிடப்படுகின்றது. இதனால் இச்சட்டவிரோத செயல் மீண்டும் இடம்பெறுகின்றது. எமது நோக்கம் இவ்வாறான செயல்களை முடியுமானவரை தடுப்பதே' என்று கூறினார்.

'எனது பக்கத்து வீட்டுக்காரரின் செயலால் நானும் பாதிக்கப்பட்டேன். அவர் மின்மானிக்கு வரும் மின் கம்பியை இடையே ஓரிடத்தில் துண்டித்து தனது வீட்டிற்கு வரும் மின்வாசிப்பைக் குறைத்துவிட்டார். இதனால் எனது வீட்டிற்குவரும் மின்னின் அளவு குறைவடைந்தது. மங்கலான வெளிச்சத்தையே பெறமுடிந்தது. இது தொடர்பாக நான் இலங்கை மின்சார சபையிடம் முறையிட்டேன். அதன் பின் அவர்கள் எடுத்த நடவடிக்கையில் சட்ட விரோத மின் பாவனை கண்டறியப்பட்டது' என்கிறார் நல்லூர் பிரதேச வாசியான நந்தகுமார்.

சட்டவிரோத மின்பாவனை தொடர்பாக புகார் மற்றும் தகவல் தரும் நபர்களின் பெயர் மற்றும் அவர்கள் தொடர்பான விடயங்கள் இரகசியமாகப் பேணப்பட்டு வருகின்றது. இதனால் எங்கெல்லாம் மின் தொடர்பான சமூக விரோத செயல்கள் இடம்பெறுகின்றதோ அதைப் பற்றிய தகவல்களைப் பயமில்லாமல் மின்சார சபைக்குத் தெரியப்படுத்தக்கூடியதாக உள்ளது.

மின்சாரம் சம்மந்தமான வேலைகளில் (wiring) ஈடுபடும் ஒருவர் என்பவர் தான் சந்தித்த விடயங்களை எம்மிடம் தெரிவித்தபோது ஆச்சரியமாக இருந்தது.

'என்னிடம் நிறைய பேர் மின்மானி வாசிப்பைக் குறைக்க என்ன செய்யலாம் எனக்கேட்டுள்ளனர். என்னைப் போன்ற மின்சார வேலைகளில் ஈடுபடுவோருக்கு அது தொடர்பான உத்திமுறைகள் தெரியும். நாம் பணத்திற்காக வேலை செய்பவர்கள். அவர்கள் கேட்பதை செய்து கொடுத்து பணத்தைப் பெற்றுக் கொள்வோம். அவ்வளவு தான் எங்கள் வேலை. நாம் இதைப் போய் மின்சாரசபையிடம் முறையிடமாட்டோம். பணத்தைப் பெற்றதுடன் எமது வேலை முடிந்துவிடும். ஆனால், இவ்வாறான சட்ட விரோத மின் இணைப்புக்களைக் கண்டறிவது கடினம். மானி வாசிப்பவர் சந்தேகப்பட்டால் மட்டுமே கண்டறிய முடியும்' என்று எவ்வித சலனமுமின்றிக் கூறுகிறார். அவரைக் குறைகூறி என்ன செய்வது?

**◀ தட்சா. ஜோ (MRTC) ▶**

குடாநாட்டைப் பொறுத்தவரை சட்டவிரோத மின் பாவனை நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றது. மக்களது அதிகரித்த மின் பொருட்களின் பாவனையும் மின்சாரக் கட்டணங்களின் அதிரடி அதிகரிப்பும் மக்களை திக்குமுக்காட வைத்துவிட்டதால் மக்கள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடத்தொடங்கிவிட்டனர். கட்டணம் அதிகரித்துவிட்டது என்பதற்காக தவறான நடவடிக்கையில் மக்கள் ஈடுபடுவது சட்டவிரோதமானது.

அதுமட்டுமன்றி சட்டவிரோத மின் இணைப்பால் உயிர்ச்சேதம் ஏற்பட்ட நிகழ்வுகளையும் நாம் ஊடகங்கள் வாயிலாக அறியாமலில்லை. ஆகவே இதுதொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட வழிவகுக்க வேண்டும். அதுமட்டுமன்றி அரச அலுவலகங்களில் இராப் பகலாக மின் விரயமாவதையும் தெருவிளக்குகள் காலை 7 மணியாகியும் எரிவதையும் கண்டுகொள்ளாத மின்சாரசபை மக்களது மின் கட்டணத்தில் மட்டும் தன் ஆதிக்கத்தைச் செலுத்துவதும் முறையன்று.

அதுமட்டுமல்ல யாழில் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுத்தப்பட்டு வருவதால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே மின்சாரசபை மக்களுக்கான சிறந்த சேவையை வழங்க முன்வரவேண்டியது கட்டாயமானதே. அதுமட்டுமல்லாது சட்ட விரோத மின்பாவனை தொடர்பாகவும் அதனால் ஏற்படப்போகும் விளைவுகள் தொடர்பாகவும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை மின்சார சபை வழங்க வேண்டும். சட்டவிரோத மின்பாவனையாளருக்கான தண்டனையையும் அதிகரிக்க நடவடிக்கை ஏடுக்க வேண்டும். எனவே இவ்விடயத்தில் மின்சாரசபை நன்கு ஆராய்ந்து ஒரு தீர்வைக் கொண்டுவரவேண்டும்.



**ஒருவர் :** அவர் ஒரு பஞ்சத்தில அடிபட்ட கஞ்சன்.

**மற்றவர் :** அப்படியா..? எப்பிடிச் சொல்றீங்க?

**ஒருவர் :** அம்புலன்சுக்கு கூட மிஸ்ட் கோல்தான் குடுக்குறான் எண்டா பாருங்கோவன்.

நக்கல் நையாண்டிப் போடியார் கொக்கட்டிச் சோலையில் அமைந்துள்ள அவர் வேலை செய்யும் அலுவலகத்திற்கு படகு மூலம்தான் பயணிக்க வேண்டும். ஒரு மணி நேரத்துக்கு ஒரு படகு தான். படகை விட்டுவிட்டால் அடுத்த படகுக்காகக் காத்திருப்பதிலேயே ஒரு மணி நேரம் வீணாகி விடும்.

ஒருநாள் மாலை போடியார் வேலை முடிந்து வீடுதிரும்ப மண்முனை படகுத்துறைக்கு வந்து கொண்டிருந்தார். அப்போது படகுத்துறையில் இருந்து ஒரு 15 அடி தூரத்தில் படகினைப் பார்த்தார்.

'அடடா...! இந்த படக விட்டுட்டா இன்னும் ஒரு மணிநேரம் வீணா காத்திருக்க வேண்டுமே என்று அவசர அவசரமாக ஓடிச் சென்று படகுத்துறையின் விளிம்புவரை போய் கஷ்டப் பட்டு தாவி குதித்தார் படகில்.

குதித்த வேகத்தில் கைகளை கீழே ஊன்றி முழங் காலிட்டு சின்ன சின்ன சிராய்ப்புகளோடு எப்படியோ சமாளித்து படகில் ஏறி விட்டார்.

இப்போது மெல்ல எழுந்து திகைத்துப் போய் பார்த்துக்கொண்டிருந்த படகில் இருந்த மக்களைப் பார்த்து பெருமையாக 'அப்பாடி. ஒரு வழியா படகைப் பிடிச் சுட்டன். இல்லாட்டி இன்னும் ஒரு மணி நேரமுல்ல வீணா காத்திருக்கவேணும்?' என்றார்.

படகில் இருந்த ஒருவர் சொன்னார், 'அட, ஒரு நிமிசம் காத்திருந்தீங்க எண்டா படகுதான் கரைக்கு வந்திருக்குமே...? நாங்களெல்லாம் இறங்கினப்பிறகு நீங்க பாதுகாப்பா படகில ஏறி இருக்கலாமே?'



**மொட்டை பாஸ் :** டேய்...! அதிகமா காட்டுதெண்டு சொல்லி, எடை காட்டும் இயந்திரத்தில் இரண்டாவது தடவை சரிபார்க்கலாம் எண்டு ஏறினது தப்பாப் போச்சுடா.

**நண்பர் :** ஏண்டா, கூட்டமா ஏறாதீங்களெண்டு சொல்லுதா?

**மொட்டை பாஸ் :** இல்லடா, 'வீணா என்னை சந்தேகப்படாதே சனியனே, திங்குற சோத்தக் குறைச்சு சாப்பிடு' எண்டு திட்டுதுடா.








**ஆசிரியர் :** உங்க பையன் ஆங்கிலத்தில் படு வீக்கா இருக்கான்.

**மாணவனின் தந்தை :** தமிழிலே எப்படி இருக்கான் எண்டு சொல்லுங்க சேர்

**ஆசிரியர் :** தங்களின் மகன் ஆங்கிலத்தில் மிகவும் வலுவிழந்த நிலையில் இருக்கின்றான் ஐயா...!




**திருடன் :** (சிறுவனிடம்) தம்பி! உனக்கு மிட்டாய் தருகிறேன். உங்க வீட்ல நகைகளை எங்கே வைப்பாங்க சொல்லு..
**சிறுவன் :** அடகுக் கடையில...!



**பயனாளர் :** நான் ஏதாவது பொண்ணுக்கு Friend Request அனுப்பும்போது 'Do u Know Her..?' எண்டு கேட்குறியே facebook...?

**@ facebook :** அவ என்ன உன்ட ஆளா..? பொத்திக்கிட்டு உன்ட வேலையை மட்டும் பாரு!!!





**ஒரு விமானம் விபத்துக்குள்ளாயிற்று. ஒரு குரங்கைத் தவிர வேறு யாருமே உயிர் பிழைக்கவில்லை. சிலோன் சின்னத்தம்பி அந்தக் குரங்கை தனது அலுவலகத்தில் வைத்து விசாரணை செய்தார். சிலோன் சின்னத்தம்பிக்கும் குரங்குக்கும் நடந்த உரையாடல் இது.**

**சின்னத்தம்பி :** விமானம் கிளம்பும்போது என்ன நடந்தது? பயணிகள் என்ன செய்தார்கள்?
**குரங்கு :** சீட் பெல்ட் போட்டார்கள்.
**சின்னத்தம்பி :** பணிப் பெண்கள்?
**குரங்கு :** பெல்ட் போட உதவினார்கள்.
**சின்னத்தம்பி :** விமானிகள்?
**குரங்கு :** விமானத்தைக் கிளப்பினார்கள்.
**சின்னத்தம்பி :** நீ என்ன செய்தாய்?
**குரங்கு :** வேடிக்கை பார்த்தேன்.
**சின்னத்தம்பி :** 15 நிமிடம் கழித்து என்ன நடந்தது?
**குரங்கு :** பயணிகள் பேசிக்கொண்டிருந்தார்கள். பணிப்பெண்கள் பவுடர் பூசிக்கொண்டார்கள். விமானிகள் விமானத்தைக் கையாண்டு கொண்டிருந்தார்கள்.
**சின்னத்தம்பி :** நீ என்ன செய்தாய்..?
**குரங்கு :** நான் விமானத்தை சுற்றிப் பார்த்து கொண்டிருந்தேன்.
**சின்னத்தம்பி :** விபத்து நடக்கும்போது என்ன நடந்தது?
**குரங்கு :** பயணிகள் தூங்கினார்கள். பணிப்பெண்கள் ஓய்வறைக்குப் போய்விட்டார்கள். விமானிகள் பணிப்பெண்களுடன் பேசிக்கொண்டிருந்தார்கள்.
**சின்னத்தம்பி** நீ என்ன செய்துகொண்டு இருந்தாய்?
**குரங்கு :** நான் விமானத்தை ஓட்டிக் கொண்டு இருந்தேன்...!



**ஸ்பெஷல் ரிப்போர்ட்**

# மரணித்துப்போன மனிதாபிமானம்

யுத்தத்தின் பின்னர் சரணடைந்தவர்களும் தடுப்புமுகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களும் அனுபவித்துவரும் வேதனைகளும், துன்பங்களும் சிறைக்கம்பிகளின் பின்னால் அவர்களுடனே முடிந்து போகின்றன. இவை குறித்த எந்தச் செய்திகளும் வெளிவருவதில்லை. அப்படி வெளிவந்தாலும் நடக்கப் போவதும் ஒன்றுமில்லை.


ஜெகதீஸ்வரன்

அண்மையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நாம் கண்ட காட்சி எம் உதிரத்தை ஒருகணம் உறைய வைத்தது. இரண்டு கால்களும் பெரிய சங்கிலியால் பிணைக்கப்பட்டு உணர்வற்ற நிலையில் கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தார் ஜெகதீஸ்வரன் எனும் கைதி. இவரது இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்த நிலையில் அதற்காக சிகிச்சை பெற்று வருகிறார். கைதியாக இருந்தாலும் மனிதன் நோய்வாய்ப்பட்டு கட்டிலில் கிடக்கும் போது எழுந்து உட்காரத்தானும் முடியாத நிலையில் இப்படி பிணைத்து வைத்திருப்பது இரக்கமற்ற செயலாகும். சாப்பிடும்போதுகூட அவரைப் பிணைத்திருக்கும் சங்கிலிகள் அகற்றப்படுவதில்லை.


ஜெகதீஸ்வரன் சிகிச்சை பெற்றுவரும் 49ஆம் இலக்க வார்ட்

இத்தனைக்கும் ஜெகதீஸ்வரன் இன்னும் மூன்று மாதங்களே வாழ முடியும் என்று வைத்தியரால் கூறப்பட்டிருக்கிறது. அந்த மூன்று மாத காலத்திற்குள் அவருக்கு பொருந்தக்கூடிய, அவரது உறவினர் ஒருவரது சிறுநீரகத்தை பொருத்தினால் அவரால் தொடர்ந்து உயிர்வாழலாம்.

இப்படிப்பட்ட ஒரு நோயாளியை மனிதநேயமற்ற முறையில் கட்டிவைத்திருக்கிறது சிறைச்சாலை நிர்வாகம்.

சிறைக் கைதிகளும் மனிதர்களே என எம் தலைவர்கள் முழங்குவது வெறும் மேடைப் பேச்சிற்கே என்பதை உணர்த்தியிருக்கிறது இந்தக் கொடுஞ்செயல்.

இறுதி யுத்தத்தின்போது அதிகமான மக்கள் துப்பாக்கிச் சூட்டுக்கும் எறிகணைத் தாக்குதலுக்கும் ஆளானமை குறிப்பிடத்தக்கது. அப்படித் தான் ஜெகதீஸ்வரனும் முள்ளியவளையிலிருந்து இடம்பெயர்ந்து முள்ளிவாய்க்காலுக்கு சென்றிருந்தபோது, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தார். பின் கப்பல் மூலமாக புல்மோட்டைக்குச் சென்று திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தார். இங்குள்ள முகாமொன்றில் இருக்கும்போது இவரது உடலில் இருந்த காயங்களைப் பார்த்த புலனாய்வுப் பிரிவினர் இவரைக் கைதுசெய்து வெலிக்கடை சிறைச்சாலையில் அடைத்தனர். இவர் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர் என்பதையும் புலிகளின் புலனாய்வுப் பிரிவில் நீண்ட காலம் பணியாற்றியவர் என்பதையும் அவரது மனைவியிடமிருந்து அறிந்து கொண்டோம்.


ஜெகதீஸ்வரனின் மனைவி ரனிதா

கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் இருந்த ஜெகதீஸ்வரனை எம்மால் நெருங்க முடியவில்லை. ஆனாலும் அவரது மனைவியான ரனிதாவை சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது.

‘புல்மோட்டையில் வந்து ஒரு கிழமைக்கிடையிலேயே காயங்களைப் பார்த்து இவரைப் பிடிச்சிட்டாங்கள். பிடிக்கேக்க சொல்லிச்சினம் விசாரிச்சுப் போட்டு 15 நாள்ல விட்டு விடுவம் எண்டு. அதுக்குப்பிறகு திருகோணமலை பொலிஸ் ஸ்ரேசனில மூன்று மாதம் வைத்திருந்தவங்கள். பிறகு 4ஆம் மாடிக்கு மாத்தி 5 ,6 நாள் வைத்திருந்திட்டு பூசாவிற்கு மாத்திட்டாங்கள். பூசாவில வைத்திருக்கேக்க 2 தடவை போய் பார்த்தனான். இப்ப அங்கையிருந்து வெலிக்கடைக்கு கொண்டுவந்து 8 மாதமாகுது. ஏற்கனவே அவருக்கு கிட்னில பிரச்சினை இருந்தது. உள்ளுக்க வச்சு அடிச்சிருக்குறாங்கள் போல. அதுதான் இவருக்கு வருத்தம் கூடி இருக்கு. ஆனா நாங்கள் கவலைப்படுவ மெண்டு அடிச்சது பற்றி எதுவும் எங்களிட்ட சொல்லல. டொக்டர்மாரும் கைவிட்டுட்டீனம். மூன்று மாதம்தான் இருப்பாராம்’ என்று வேதனை மிகுதியில் அழத் தொடங்கி விட்டார்.

**படங்கள் : மலரவன்**

98 ஆம் ஆண்டிலிருந்தே ஜெகதீஸ்வரனுக்கு பல தடவை கள் சிறுநீரக சிகிச்சைகள் இடம்பெற்றிருந்ததாக அவரது மனைவி குறிப்பிட்டார். 2007ஆம் ஆண்டு திருமணம் முடித்திருக்கிறார்கள். தொடர்ந்து இவர் மருந்து மாத்திரைகளை உட்கொள்ளாது விட்டமையால் உடல்நிலை மேலும் மோசமாகிப்போயிருக்கிறது. மருத்துவ உபகரணங்களின் உதவியுடன் இவருக்கு தற்போது இரத்தம் சுத்திகரிக்கப்படுகிறது. வைத்தியர்களின் ஆலோசனைப்படி இவருக்கு மூன்று தடவைகளே இரத்தம் மாற்றமுடியும். அம்மூன்று தடைவைகளும் முடிந்து விட்ட நிலையில் இவரது உயிருக்கு உத்தரவாதமில்லாமல் இருக்கின்றது. இவரது விடுதலை தொடர்பாக வைத்திய அறிக்கை தேவைப்படுகிறது. ஆனால் இன்று தருகின்றோம் நாளை தருகின்றோம் என வைத்தியர்களின் வழமையான இழுத்தடிப்புக்களால் தாமதமாகிப் போய்கொண்டிருக்கிறது.

ஜெகதீஸ்வரனைப் பார்வையிட்டுச் சென்ற வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இவரது விடுதலைக்குத் தம்மாலான உதவிகளைச் செய்வதாகக்

**◄ தமிழியன் ►**

கூறியிருக்கிறார். இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு நடமாட முடியாமலிருக்கும் கைதி ஒருவரை, வைத்தியசாலையிலும் விலங்கு போட்டு வைத்திருக்கிறீர்களே? என்று சிறைச்சாலைகள் தலைமை ஆணையாளர் B.W.கொடிப்பிலியிடம் கேட்டபோது, ‘கைதிகள் தப்பியோடி விடாமல் இருப்பதற்காக அங்கு சிறைக்காவலர் ஒருவரின் காவலுடன் அவர்களை விலங்கு போட்டு வைத்திருப்பது தான் வழமை. விடுதலை தொடர்பான முடிவுகளை சட்டமா அதிபரின் ஆலோசனைப் படி நீதிமன்ற உத்தரவூடாக மேற்கொள்ள முடியும். சிகிச்சை முடியும் வரை, வைத்தியசாலையில் தங்கியிருப்பதற்குத் தம்மால் அனுமதி வழங்க முடியும்’ என்று கூறினார்.

**செயலற்ற சிறுநீரகங்களால் இயங்க முடியாத கால்கள் கட்டிலுடன் பிணைப்பு!**

ஜெகதீஸ்வரனின் விடுதலையானது அரசியற் காரணங்களுக்கப்பால் ஒரு மனித நேயத்துடன் அணுகப்பட வேண்டிய விடயமாகும். இதற்கு மனித உரிமை அமைப்புக்கள் இணைந்து குரல் கொடுக்கவேண்டியது அவசரமான ஒன்றாகும். கைதியான ஜெகதீஸ்வரனுக்கு தற்போது A+ பிரிவு சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுவதாகவும் யாராவது இவருக்கு உதவி புரிந்து இவரின் உயிரைக் காப்பாற்றுமாறும் இவருடைய மனைவியும், சகோதரியும் உதவிக்கரம் ஏந்தியுள்ளனர். ஒரு உயிர் போகப் போகின்றது என்று தெரிந்து ஜெகதீஸ்வரனின் உறவுகள் தவிக்கும் தவிப்பை சொல்லிப் புரியவைக்க முடியாது ●

**உதவிசெய்ய விரும்புவோர் தொடர்புகளுக்கு சகோதரி தனலட்சுமியின் தொலைபேசி இல. 0770535273**

18

# திகிலோடு மர்மம் நிறைந்த தொடர்!

மரகதத் தீவின்
இரகசிய ஒற்றன்
'நெடுமாறன் 999'
உளவறியும்

# கறுப்பு செப்டெம்பர் அழகி



கறுப்புக் கண்ணாடி அணிந்த ஒரு மனிதர் அமர்ந்திருந்தார். அவருக்கு சுமார் நாற்பத்தைந்து வயதிருக்கும். நல்ல உயரமாக இருந்தார்.

"வாருங்கள் நெடுமாறன் உங்களைத் தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். உட்காருங்கள்!" என்று சிரித்தபடியே சொன்னார் டொக்டர் விக்ரம்.

அவரைக் கூர்ந்து பார்த்தபடியே,

எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டார் நெடுமாறன்.

டொக்டருக்குப் பக்கத்தில் மதுபாலா அமர்ந்து கொண்டாள்.

ஒரு வேலைக்காரன் வந்து அவர்களுக்கு உணவு பரிமாறினான்.

"என்னை இங்கே எதற்காக அடைத்து வைத்திருக்கிறீர்கள் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?" என்று கேட்டு விட்டு,

டொக்டரின் முகத்தையே கவனித்துக் கொண்டிருந்தார்.

டொக்டரின் முகத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை.

"முதலில் சாப்பிடுங்கள். சாப்பிட்டுக்கொண்டே பேசலாம்" என்று சொல்லியபடியே பட்டர் பூசிய பாண் துண்டுகளை எடுத்துச் சாப்பிட

## 'தப்பிக்க இதுதான் தருணம் கரணம் தப்பினால் மரணம்'

ஆரம்பித்தார் டொக்டர் விக்ரம்.

அவரைத் தொடர்ந்து,

நெடுமாறனும் மதுபாலாவும் சாப்பிட ஆரம்பித்தார்கள்.

'ம்...நீங்கள் ஏன்ன கேட்டீர்கள்?" என்று நெடுமாறனைப் பார்த்துக் கேட்டார் டொக்டர் விக்ரம்.

"என்னை ஏன் இங்கே கொண்டு வந்து அடைத்து வைத்திருக்கின்றீர்கள் என்று கேட்டேன்"

"உங்களை அவர்கள், அவர்களின் இயக்கத்தில் சேர்த்துக் கொள்ளப் போகிறார்கள்!"

"அவர்கள் என்றால் யார்?"

"கறுப்பு செப்டெம்பர் இயக்கத்தினர்!"

"ஓ... அப்படியானால் நீங்களும் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவரா?"

"இல்லை"

"அப்படியானால் நீங்கள் ஏன் என்னை இங்கு பாதுகாப்பாக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" வியப்புடன் கேட்டார் நெடுமாறன்.

"நான் ஒரு டொக்டர். என்ன டொக்டர் தெரியுமா? மூளை சம்பந்தமான ஆராய்ச்சியில் விஷேட திறமை பெற்றவன். அதாவது ப்ரெயின் ஸ்பெஷலிஸ்ட்! என்ன புரிகிறதா?"

"சொல்லுங்கள்!"

"உங்களுக்கு ப்ரெயின் வொஷ் பண்ணி அவர்களிடம் உங்களை ஒப்படைக்க வேண்டும் என்பது அவர்களின் கட்டளை. ப்ரெயின் வொஷ் பண்ணினால் என்ன நடக்கும் என்பது உங்களுக்குத் தெரியும் தானே?" என்று கேட்டுவிட்டு,

நிமிர்ந்து நெடுமாறனைப் பார்த்தார் டொக்டர் விக்ரம்.

"அதையும் நீங்களே சொல்லுங்கள்!" என்று அமைதியுடன் சொன்னார் நெடுமாறன்.

"நீங்கள் யார் என்பதையே மறந்து விடுவீர்கள். கறுப்பு செப்டெம்பர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ன சொல்லுகிறார்களோ அதன்படிதான் நீங்கள் நடப்பீர்கள். ஆனால் ஒன்று" என்று நிறுத்தி விட்டுத் தண்ணீரைக் குடித்தார் டொக்டர்.

"என்ன சொல்லுங்கள்!" என்று சொல்லிவிட்டு இரண்டு பாண் துண்டுகளை எடுத்து பொக்கெட்டுக்குள் போட்டுக் கொண்டார் நெடுமாறன்.

இதை,

டொக்டரோ மதுபாலாவோ கவனிக்கவில்லை.

அவ்வளவு திறமையாக இந்த பாண் திருட்டை நடத்தினார் நெடுமாறன்.

"இரண்டு வாரங்களுக்குத்தான் இந்த



நிலை நீடிக்கும். மீண்டும் உங்களுக்கு ப்ரெயின் வொஷ் செய்யவேண்டும். இல்லையென்றால் நீங்கள் ஒரு பைத்தியமாகி விடுவீர்கள்!"

"இப்படியான ஒரு பயங்கர காரியத்தை நீங்கள் ஏன் செய்யப்போகின்றீர்கள்?"

"என் மகளின் உயிரைக் காப்பாற்றுவதற்காக!"

இதைக் கேட்டதும் நெடுமாறன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"அப்படியென்றால்!" அவர் புருவங்கள் உயர்ந்தன.

"ஆமாம் நெடுமாறன். அவர்கள் என் மகளைக் கடத்திச் சென்று விட்டார்கள். உங்களுக்கு ப்ரெயின் வொஷ் பண்ணி அவர்களிடம் ஒப்படைக்காவிட்டால் என் மகளின் பிணத்தை என்னிடம் ஒப்படைப்பார்களாம்" இப்படிச் சொல்லும் போது,

டொக்டரின் விழிகள் கலங்கி நின்றன.

"நீங்கள் பொலிஸாரின் உதவியை நாடியிருக்கலாமே!" என்று கேட்டபடியே கையைக் கழுவினார் நெடுமாறன்.

"வேறு வினையே வேண்டாம். பொலிஸாரால் நிச்சயமாக எனது மகளைக் காப்பாற்ற முடியாது!" உடைந்த குரலால் சிதைந்த வார்த்தைகள் வெளியே வந்தன. கொஞ்ச நேரம் சிந்தித்தபடியே அமர்ந்திருந்த நெடுமாறன்,

பிறகு சொன்னார். "நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்தால் நாம் இருவருமே தப்ப ஒரு வழி இருக்கிறது"

"சொல்லுங்கள்" என்று சொல்லிக் கொண்டே டொக்டர் விக்ரம் கையைக் கழுவினார்.

மதுபாலாவும் கையைக் கழுவிக் கொண்டாள்.

"எனக்கு ப்ரெயின் வொஷ் செய்து விட்டதாகச் சொலலி என்னை அவர்களிடம் ஒப்படையுங்கள். நானும் அப்படியே நடிக்கிறேன். உங்கள் மகள் திரும்பிவந்த பிறகு நான் எனது கைவரிசையைக் காட்டுகிறேன்"

"அதுவும் நடக்காது நெடுமாறன்" வேதனையுடன் சொன்னார் டொக்டர் விக்ரம்.

"ஏன் நடக்காது!" கொஞ்சம் வியப்புடன் கேட்டார் நெடுமாறன்.

"இந்த மதுபாலா அவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவள். எனது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் இவள் கவனித்துக் கொண்டே இருப்பாள். என்னை நிழல் போல் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டுமென்பது இவளுக்கு இடப்பட்டுள்ள கட்டளை. கறுப்பு செப்டெம்பர் இயக்கத்தினர் திட்டமிட்டு எல்லாக் காரியங்களையும் செய்வதனால் அவர்களை ஏமாற்றுவது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல, நெடுமாறன்!"

"ஓ... அதுவும் அப்படியா?" என்று கேட்டபடியே,

அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கும் மதுபாலாவைப் பார்த்தார் நெடுமாறன்.

"என்ன நெடுமாறன் அப்படிப் பார்க்கின்றீர்கள்?" என்று கிண்டலாகக் கேட்டாள் மதுபாலா.

"ஒன்றுமில்லை!" என்று சொல்லியபடியே எழுந்து நின்றார் நெடுமாறன்.

பிறகு,

மெல்ல நடந்து டொக்டரின் அருகில் வந்தார். "உங்கள் ஒப்பரேசனை எப்போது ஆரம்பிக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.

"நாளை மாலை ஆரம்பிக்கப் போகிறேன்!" நிமிர்ந்து நெடுமாறனைப் பார்த்தபடியே சொன்னார் டொக்டர் விக்ரம்.

"உங்கள் முயற்சியில் நீங்கள் வெற்றி பெற என் வாழ்த்துக்கள்!" என்று சொல்லி டொக்டரின் கையைப் பிடித்துக் குலுக்கி விட்டு,

முன்னால் நடந்தார் நெடுமாறன்.

"கொஞ்சம் நில்லுங்கள் நெடுமாறன்!" என்று சொல்லியபடியே எழுந்து வந்தாள் மதுபாலா.

நெடுமாறன் நின்று திரும்பினார்.

"இங்கிருந்து தப்பிப் போகலாம் என்று மட்டும் நினைத்து விடாதீர்கள். எங்கள் காவல்காரர்களிடமிருந்து தப்பிப் போக முடியாது. அப்படியே தப்பினாலும் வேட்டை நாய்களிடமிருந்து நீங்கள் தப்ப மாட்டீர்கள். அந்த நாய்களிடம் சிக்கிக் கொண்டால், உங்கள் எலும்புக் கூடு கூட மிஞ்சாது. மதில் சுவர்களுக்கு மேல் எந்த இடத்தில் நீங்கள் கால்வைத்தாலும் இந்த பங்களாவிற்குள் இருக்கும் அலாரம் அலறத் தொடங்கிவிடும். அதைத் தொடர்ந்து இயந்திரத் துப்பாக்கிகள் பல பாகங்களிலும் இருந்து வெடிக்கும். உங்கள் உடல் சல்லடையாகிவிடும். ஏற்கனவே உங்கள் கழுகுக் கண்கள் இவற்றை எல்லாம் கவனித்திருக்கும் என்று நினைக்கிறேன். இதையெல்லாம் கேட்ட பிறகும் இங்கிருந்து தப்பிப் போக வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு ஏற்படாது என்று நினைக்கிறேன். எதற்கும் விழிப்புடன் நடந்து கொள்ளுங்கள்" என்று சொல்லிவிட்டு,

மறுபக்கம் திரும்பி நடந்தாள்.

தனக்குள் மெல்ல சிரித்துக் கொண்ட நெடுமாறன்,

**ஜனரஞ்சக எழுத்தாளர்**
**மொழிவாணன்**

தனது அறையை நோக்கி நடந்தார்.

அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தித் தாழிட்டார்.

சட்டையைக் கழற்றி,

கதவில் உள்ள சாவித் துவாரம் மறையும்படி அதில் மாட்டிவிட்டார்.

ஜன்னல் சீலைகளை எல்லாம் நன்றாக இழுத்து மூடிவிட்டார்.

விளக்கை அணைத்து விட்டு கட்டிலில் சாய்ந்து கொண்டார்.

அப்படியே சாய்ந்து கொண்டு,

வெளியில் கேட்கும் ஓசைகள் அடங்கும் வரை காத்திருந்தார்.

நேரம் எவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் இருளுக்கும் அஞ்சாமல் விரைந்து கொண்டிருந்தது.

(மர்மம் தொடரும்...)

## இராணுவவியல் பார்வை

# வளர்த்துவிட்ட பூதத்தை கட்டுப் படுத்துவதற்கு வழிதேடும் நிலை

**2009**இல் யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, கொலை, கொள்ளை, களவு, ஆட்கடத்தல் என்று மக்களை மையப்படுத்தித் தொடர்ந்த பிரச்சினைகள் இன்று கிறீஸ் பூதம் அல்லது மர்ம மனிதன் என்ற புதிய தோற்றத்துடன் வந்து நிற்கிறது.

அரசு பற்றிய, அரச வன்முறை - இராணுவம், பொலிஸ் - இயந்திரங்கள் பற்றிய துறைசார் அறிவியல் எம்மிடம் வளர்ந்திருக்கவில்லை என்பதற்கு கடந்த 60 ஆண்டுகால எமது அரசியல் முறைமைதான் எமக்குச் சாட்சியம்.



இராணுவவியல் புலனாய்வுத் துறை சார்ந்து மிக நுண்ணிய அறிவைக் கொண்டிருந்த ஒரே தமிழ் ஊடக வியலாளர் தராக்கி டி. சிவராம் கூட தனக்கு எதிரான துப்பாக்கி வேட்டு, எப்போ, எங்கே எப்படி யாருடைய துப்பாக்கியில் இருந்து பறக்கும் என்பதை அறிந்திருக்கவில்லை.

புலிகளைத் தோற்கடிக்கும் நோக்கில் சுமார் 3 இலட்சத்துக்கு மேற்பட்ட இராணுவத்தைப் பிரசவித்திருந்த ஒரு சிறியதீவு இலங்கை. மக்கள் தொகைக்கணக்கின் படி சுமார் 100 பேருக்கு ஒரு இராணுவம் என்று கணக்கிடலாம். இதே கணக்கில் வட கிழக்குப் பிரதேசங்களை நோக்கின் கிட்டத் தட்ட 25 நபர்களுக்கு ஒரு இராணுவம் என்று கணக்கிடுவதும் மிகையாகாது. ஒரு சிறிய நாடு இவ்வளவு தொகையான இராணுவத்தைக் கொண்டிருப்பதனால் மக்களிலும் பார்க்க அதிக அச்சம் கொள்பவர்கள் அரசும் அதன் சிவில் நிர்வாகத் தரப்புகளும்தான்.

**◄ யோகா ராஜன் ►**

இவ்வளவு தொகையான இராணுவக் கட்டமைப்பை வழிநடத்திய உயர் அதிகாரிகள் ஒன்றிணைந்து எப்போ ஓர் இராணுவச் சதிப்புரட்சியை நிகழ்த்திவிடுவார்களோ' என்ற பயம் அரச அதிகாரத்திற்கு. அரச அதிகாரத்தின் இத்தகைய பயம்தான் சரத் பொன்சேகாவை சிறைக்குள் முடக்கியது. மேலும் பல உயர் இராணுவ அதிகாரிகள் ஸ்தானிகராலயங்களுக்கும் வேறு பல வழிகளிலும் பதவி உயர்வு, மேற்படிப்பு என்ற சாக்கில் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். வேறு சிலர் ஓய்வு பெறும்பொருட்டுத் தூண்டப்படுகிறார்கள் அல்லது வேலையில் இருந்து நீக்கப் படுகிறார்கள். இவை எல்லாமே அரசுக்கு வெளிநாடுகள் வழங்கும் ஆலோசனையின் பேரிலேயே நிகழ்த்தப்படுகின்றன.

இன்று அரசுக்குள்ள ஒரே பிரச்சினை பெருந்தொகையான இராணுவத்தை ஒரே முகாமில் தங்கவைப்பதுதான் இது இராணுவக் கிளர்ச்சிகள் ஏற்படுவதற்கு இலகுவாக வாய்ப்பளித்துவிடும் என்பது ஒன்று. இரண்டாவதாக சரத் பொன்சேகா, கோத்தபாய, ஜே.வி.பி, யூ.என்.பி என்று வெவ்வேறு விதமான சார்புநிலைக்கு உட்பட்டிருக்கும் இராணுவத்தின் குழு நிலையும் மோதலுக்கு வழிசெய்யும் என்பதிலும் ஐயமில்லை. இவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடுவது என்பதும் இயலாத காரியம். நாட்டின் பாதுகாப்பு கேள்விக் குள்ளாகிவிடுமோ என்பது ஒருபுறமிருக்க, சமூகச் சீரழிவுகளுக்கு வித்திட்டுவிடுமோ என்பதும் இன்னோர் காரணமாகும்.


அடுத்து இன்று அரசுக்கு இருக்கக் கூடிய பாரிய பிரச்சனை அதிகாரத்துவம் யாருக்கு என்பதே! ஒரு நாடு யுத்தச் சூழலில் அல்லது இராணுவ ஆட்சிக்குட்பட்ட அசாதாரண நிலைமைகளைத் தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் எல்லாம் அரச அதிகாரிகள் தொடங்கி நீதித்துறை வரையிலான சிவில் நிர்வாகத் தரப்புக்களின் மேலாண்மைக்கு உட்பட்டிருப்பதே அந்நாட்டின் ஆரோக்கியத்திற்கு உகந்தது.

ஆனால், இன்றைய இலங்கையைப் பொறுத்தவரை இந் நிலைமை இரட்டைத் தன்மைக்குட்பட்டிருப்பது கண்கூடு. குறிப்பாக வடபகுதியைப் பொறுத்தவரை அரச அதிபர் முதற்கொண்டு அனைத்து அதிகாரங்களும் இராணுவத்தின் ஆளுமைக்குட்பட்டதாகவே ஆக்கப்பட்டிருக்கிறது. நாடு முழுமையும் நோக்கின் இவ்அதிகாரப்போட்டி நிலைமை, நாட்டின் சகல பகுதிகளிலும் ஐம்பதுக்கு ஐம்பதுக்கு என்ற வகையில் *நிலவிவருகிறது. முப்படைத்* தளபதி என்றவகையில் இராணுவ அதிகாரத்தையும், சிவில் நிர்வாகத் தரப்புக்குரிய தலைமையையும் ஒருங்கே கொண்டிருப்பவர் ஜனாதிபதி என்பதும் இதற்கான காரணமாக அமையலாம். இப்போட்டி நிலைமைகளும் இராணுவத்தின் மீதான அரசின் அச்சத்திற்கு வலுச் சேர்க்கின்றன.

அடுத்த பிரச்சினை இராணு வத்தை இயங்குதிறனுடன் வைத் திருத்தல். குந்தியிருக்க வைத்துச் சாப்பாடு போடுவதற்கு இராணுவம் ஒன்றும் வேள்விக்கு நேர்ந்துவிடப்பட்ட கடாக்கள் அல்ல. அவர்கள் போரிட வேண்டியவர்கள். என்றும் போரிடும் திறனுடன் இருக்கவேண்டியவர்கள். ஏதோ ஒரு வகையில் அதற்கான பயிற்சியைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும். இலங்கை இராணுவத்தின் போரிடும் திறன் வலிமை பெற்றதற்கு புலிகளின் போர்த் தந்திரங்கள் முக்கிய காரணமாக அமைந்தது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

ஆனால் இன்றைய நிலையில் இலங்கை இராணுவம் அதன் போர்த் திறனை இழந்துவிடுமோ என்ற அச்சம் அரசின் சிவில் தரப்பைவிட இராணுவத் தரப்புக்கே அதிகம் உண்டு. புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்ததன் மூலம் அவர்களுக்குள் பிளவை உண்டாக்கியதுடன், அவர்களின் போர்த் திறனை வலிமைகுன்றச் செய்த மேற்குலக தந்திரோபாயம் இலங்கை அறியாத ஒன்றல்ல.

போர்த்திறனை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் இராணுவத்தைக் கட்டமைப்பதில் அமெரிக்காதான் உலகுக்கே முன்மாதிரி. அமெரிக்காவும் மேற்குலக நேட்டோ நாடுகளும் ஏனைய நாடுகளின் மீது படையெடுப்பது அந்நாடுகளின் எண்ணெய் வளத்தையும் கனியவளங்களையும் அபகரிப்பதற்காக மட்டுமே என்று இன்றைய சூழலில் யாராவது கருதினால், அவர்கள் இன்னும் 50 ஆண்டுகளுக்கு முந்தைய சிந்தையிலேயே வாழ்கிறார்கள் என்று பொருள்படும். இந்த ஏகாதிபத்திய நாடுகள் அன்றே, 50 ஆண்டுகளுக்கு முன்பே தீர்மானித்துவிட்டன சதாம் ஆக்கிரமிக்கும் நாடுகளே தமது இராணுவப் பயிற்சிக்குரியகளங்களா கவும் இருக்கவேண்டும் என்று.



அமெரிக்காவின் இத்தகைய தந்திரோபாயத்தை உணர்ந்துகொண்ட சீனா, இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் மாறி மாறி எல்லைத் தகராறுகளை உருவாக்கி இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்கின்றன. அமெரிக் காவின் இரட்டைக் கோபுரம் தாக்குதல் பற்றி அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் முன்கூட்டியே அறிந்திருக்க வாய்ப்பு இருந்தமையை, மோர் (More) என்பவர் தமது ஆவணப் படத்தில் வெளிக் கொணர்ந்திருந்தார். 'உலகப் பயங்கரவாதத்தை அடக்குதல்' என்ற கருத்தியலை உருவாக்குவதன் மூலம் உலகின் விடுதலை அமைப்புக்களை அடக்கி ஒடுக்கவும், உலகை புதிய முறையில் ஆளுமை செய்யும் (தமது இராணுவத்தின் புதிய பயிற்சிக் களமாக ஆப்கானிஸ்தானை மாற்றும்) நோக்கிலும் அறிந்து மேற்கொள்ளப்பட்ட ஒன்றாக இரட்டைக் கோபுரத் தாக்குதலை நோக்குகின்றனர் பலர். பின்லேடனால் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலுக்குப் பின்னாலான 'அமெரிக்காவின் சூக்குமம் எப்படி அமையும்' என்பதை பின்லாடன் முன்கூட்டியே கணித்திருக்கவில்லை என்பதுதான் பேரவலம்.



இன்றும் அமெரிக்கா, இஸ்ரேல், பிரித்தானியா போன்ற பல நாடுகளின் உயர் இராணுவ அதிகாரிகள் ஏனைய நாடுகளுக்கு ஆலோசனை வழங்குதல் என்ற பேரில் இராணுவ மூலோபாயம் குறித்து தாமும் பல்வகைப் பயிற்சிளைப் பெற்றுக்கொள்கின்றனர் என்பதே உண்மை. இன்று லிபியாவில் குறித்த இடங்களைத் துல்லியமாக தாக்குவதற்குரிய பயிற்சியைப் பெறுகின்றனர். இவை எல்லாமே மனித உரிமை மீறலுக்கு உட்பட்டுத்தான் நிகழ்கின்றன.

இத்தகைய ஒரு பயிற்சிக் களத்தை உருவாக்கவேண்டிய கட்டாயம் இலங்கை இராணுவத்திற்கும் உண்டு. இலங்கை இராணுவத்தின் மீது மனித உரிமை மீறல் பதிவாகியிருப்பதனால் பகுதியளவு இராணுவத்தை ஐ. நா. சபையின் பாதுகாப்புப் பிரிவுடன் சேர்த்துவிடுவதற்கும் சந்தர்ப்பம் இல்லை என்றே நோக்கத்தோன்றுகிறது. இலங்கை ஒரு தீவு. அதனால் எல்லைப் பிரச்சினைகளைச் சாட்டி அயல்நாட்டு இராணுவத்துடன் உரசிக்கொள்வதற்கும் வாய்ப்பில்லை. எல்லைமீறும் தமிழ்நாட்டு மீனவர்களுடன் மோதிக்கொள்வதை ஓரளவுக்குத் தமது பயிற்சிக்குரிய களமாக மாற்றியிருக்கிறது இலங்கைக் கடற்படை. இவை எதுவுமே இந்திய அரசு அறியாத ஒன்றல்ல.

அடுத்து 2009இல் யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, யுத்தச் சலுகைகள், கொடுப் பனவுகள் நிறுத்தப்பட்டதனால் இராணுவத்துக் குரிய வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி யுத்தகாலத்தில் வருமான ரீதியாக பல்வகை சலுகைகளை அனுபவித்துவந்த இராணுவம், யுத்தம் முடிந்ததும் எவ்வித பட்டாக்கள், சலுகைகளும் இன்றித் திண்டாடியது.

(அடுத்த இதழில் முடியும்...)




## இது தாண்டா பொலிஸ்

அண்மையில் யாழ். நீதிமன்றில் திருட்டு ஒன்றில் பிடிபட்ட நபர் ஒருவரைக் காவல்துறையினர் தரதரவென இழுத்துச் சென்றதால் குறித்த கைதி காயங்களுக்குள்ளான சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து வழக்கறிஞர்கள் கேட்டதற்கு 'எங்களுக்கு எங்கட வேலை தெரியும். நீங்க உங்கட வேலையைப் பாருங்கோ' என்று காவல்துறையினர் எதுகை மோனையுடன் பதிலளித்துள்ளனர். இவ்வாறு அதிகாரத் தொனியில் அப்பாவிகளைப் போட்டு வதைப்பதாக அங்கு நின்ற ஒருவர் கூறினார். குறித்த கைதி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா

யாழ். மாநகரசபை ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் மாநகர சபையின் பெண் ஊழியரிடம் தகாத முறையில் நடந்துகொண்டுள்ளார். அதைத் தட்டிக்கேட்ட பொறியியலாளர் ஒருவரையும் தாக்கியதோடு தகாத வார்த்தைப் பிரயோகங்களாலும் பேசியுள்ளார். இது குறித்து நண்பர் ஒருவர் தொலைபேசியில் ஏன் இவ்வாறு நடந்துகொண்டாய். உனக்குப் பிரச்சினை வராதோ என்று கேட்டதற்கு 'அதெல்லாம் மாநகரசபையிலுள்ள 'வக்கீல்' காப்பாத்துவான் என்று பெருமையாகக் கூறினாராம். இவர் தனது வீட்டுத் தேவைக்காக (இறைச்சி வாங்க) போவதற்கு மாநகர சபை வாகனத்தைத் தரவில்லை என்பதற்காக சாரதியைப் போட்டுத்தாக்கியதாக அண்மையில் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

## ஆபாசத்தைப் போதிக்கும் ஆசான்கள்

யாழில் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்பிக்கும் சில ஆசிரியர்களின் ஆபாச வார்த்தைகளுக்காக கூட்டம் அலைமோதுகிறதாம். யாழில் தனியார் கல்வி நிலையங்கள் கல்வித்துறையில் பெரும் பங்காற்றி வருகின்றன. இந்த நிலையில் அதிகளவான மாணவர்களைத் தம்வசம் இழுத்துக் கொள்வதற்காக தனியார் கல்வி நிலையங்கள் இவ்வாறு செயற்படுவது கலாசாரத்தைச் சீரழிக்கும் செயலென பலரும் விசனப்படுகின்றனர். இந்த ஆபாச வார்த்தைகளுக்காகவே நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அலைகிறது யாழ். இளைஞர் கூட்டம். அத்துடன் வகுப்புகளுக்கான கட்டணங்களும் அதிகமாக வசூலிக்கப்படுகிறதாம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் தமது பிள்ளைகள் சிறந்த பெறுபேறுகளைப்பெற வேண்டுமென நினைத்து ரியூசன்களுக்கு அனுப்புவதால் இங்கு என்ன நடைபெறுகிறது என்பதைப் பெற்றோர் கண்டு கொள்வதில்லை.

## தாங்க முடியவில்லை

தற்போது நாடு முழுவதிலும் புகையிரத நிலையங்களில் இலத்திரனியல் ரிக்கற் வழங்கப்படுகிறது. வெளியே பார்ப்பதற்கு நவீன மயப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிந்தாலும் ஒரு ரிக்கற் பெறுவதற்குள் போதுமென்றாகி விடுகிறது. அண்மையில் வவுனியா புகையிரத நிலையத்தில் நடந்த சம்பவமொன்று. ரிக்கற் தரும் ஊழியர் கணனியின் திரையை வெறித்துப் பார்ப்பதும் பின் இரண்டு கைகளாலும் 'மவுசை' போட்டு இழுப்பதுமாக பகீரதப் போராட்டத்தின் பின்னரே சிவனே என்று ரிக்கற் வெளியே வந்தது. ஒரு ரிக்கற் அச்சாகி வெளியே வரும்போது அந்த ஊழியரின் முகத்தில் தோன்றும் பெருமிதத்தைப் பார்த்துக் கொண்டிருக்கையில் புகையிரதம் கிளம்பி விடுகிறது. தொழில்நுட்ப வளர்ச்சி அவசியந்தான். அதற்கேற்றாற் போல் பணியாற்ற பயிற்றப்பட்ட ஊழியர்களும் இருக்க வேண்டுமே. எதிர்காலத்தில் புகையிரதத் திணைக்களம் இதைக் கவனத்திற் கொள்ளுமா?

## ஹயர் போகும் அம்புலன்ஸ்

யாழ்.வடமராட்சி மருதங்கேணி வைத்தியசாலைக்குச் சொந்தமான 'அம்புலன்ஸ்' வண்டி சிலரது தனிப்பட்ட தேவைகளுக்காகவும் ஓடித்திரிவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். அண்மையில் அவசரமாகக் கொண்டு செல்லவேண்டிய நோயாளி ஒருவரை ஏற்றாமல் இழுத்தடித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. மக்களின் அவசர தேவைகளுக்காக வழங்கப்பட்டுள்ள அம்புலன்ஸ் வண்டிகளை இவ்வாறு தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தும் ஊழியர்களைக் கண்டும் காணாதிருக்கின்றார்களா வைத்திய அதிகாரிகள்? அல்லது அவர்களும் இதற்கு உடந்தையா? பாதிக்கப்பட்ட மக்கள் விசனப்படுகின்றனர்.

## சாராயம் செய்த வேலை

வவுனியாவில் தாண்டிக்குளம் கிராமத்திற்கு அருகில் அண்மையில் மங்கள நிகழ்வொன்று நடந்து முடிந்து அன்றிரவு 'சாராயப்பாட்டி' ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தாராளமாக ஓடிய தண்ணியால் நண்பர்களுக்கிடையே சிறிய வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. சிறிது நேரத்தில் போதை தலைக்கேறிய நிலையில் பெரிதாகிய சண்டையால் தனது நண்பனை அடித்தே கொன்றிருக்கிறான் இன்னுமொருவன். சந்தோசமாக இருந்த வீடு, இந்தப் பாழாய்ப்போன சாராயத்தால் மரணவீடாகிப் போனது. இன்று எங்கு பார்த்தாலும் ஏதாவது வீட்டில் விசேஷம் என்றால் மதுவுடன் ஆரம்பிக்கும் (அ)நாகரிகம் எம்மவரிடையே தோன்றி வருவதை அவதானிக்கலாம். சிலர் இதைத் தமது கௌரவமாகவும் (?) நினைக்கின்றனர்.

## ஒரு கல்லில் இரண்டு மாங்காய்

அண்மையில் யாழ் தென்மராட்சிப் பகுதியில் பாடசாலை அதிபர் ஒருவர் சனல்-4 கொலைக்கள வீடியோப்படங்கள் காட்டுவதாகக் கூறி தனது மடிக்கணனியில் ஆபாசப் படங்களை தனது பாடசாலை ஆசிரியைகளுக்குக் காண்பித்திருக்கின்றார். ஆனால் அதில் ஒரு காட்சிகூட இலங்கை தொடர்பான கொலைக்களத்துடன் சம்பந்தப்பட்ட வீடியோ காட்சிகளல்ல. அனைத்தும் ஆபாசக் காட்சிகள். அவற்றைப் பார்த்த ஆசிரியை ஒருவர் குறித்த அதிபரைக் கடுமையாக எச்சரித்ததுடன் வெளியே சென்று அனைத்து ஆசிரியர்களுக்கும் விடயத்தை தெரியப்படுத்திவிட்டார். அதிபரின் திருகுதாளங்கள் வெளிவந்ததால் ஏனைய ஆசிரியர்களும் மாணவர்களும் கடுப்பாகிப் போயிருக்கின்றார்களாம். சமூகப் பொறுப்புள்ள க(ல)ல்விக்கூடங்கள் இவ்வாறானவர்களின் தவறான வழிநடத்தலால் சீரழிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன.




## பஞ்சாயத்துக்கு ஒரு சபாஷ்

சூரியன் f.m இன் பஞ்சாயத்து நிகழ்ச்சி பாராட்டப்படக் கூடியதொன்று. சமுதாயத்தில் இடம்பெறும் சீர்கேடுகளைத் துணிவுடன் வெளிக்கொண்டு வருவது நல்ல விடயம். அதுமட்டுமன்றி மக்களது பிரச்சினைகள் அவர்கள் வாழும் பிரதேசங்களின் பிரச்சினைகளை வெளிக் கொணர்ந்து சம்பந்தப்பட்டவர்களின் காதுகளுக்கு உரைக்கக் கூறுவது நல்ல முன்னேற்றம்.

**- எஸ்.பவன், மட்டக்குளி.**

## லாஸ்ட் பென்ச்

வானொலிகளில் பல புதுமைகளைப்படைக்கும் தென்னிந்தியாவிலிருந்து ஒலிபரப்பாகும் ஹலோ f.m இன் புதியதொரு நிகழ்ச்சியே லாஸ்ட் பென்ச். அதாவது வகுப்பறையில் கடைசி மேசையில் இருந்துகொண்டு (படிக்காத மேதைகள்தான்) மாணவர்கள் அடிக்கின்ற லூட்டிபோல இந்த நிகழ்ச்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

முழுக்கமுழுக்க நகைச்சுவை கலந்த உணர்வோடு இந்நிகழ்ச்சி அமைந்திருப்பதால் நேயர்களால் அதிகமாக விரும்பி ரசிக்கப்படுகின்றது. சுரேஷ், அலோசியஷ், சந்தோஷ் என 3 அறிவிப்பாளர்களால் தொகுத்து வழங்கப்படும் இந்நிகழ்ச்சி தங்களுக்குள் நகைச்சுவை உணர்வோடு உரையாடுவதையே கருப்பொருளாகக் கொண்டுள்ளது.

நம்நாட்டில் நகைச்சுவை என்ற பெயரில் ஆண்-பெண் அறிவிப்பாளர்களின் அறுவையை சகிக்கவே முடியாது. ஆனால், ஒருமுறை கேட்டால் தொடர்ந்து கேட்கத் தூண்டும் அளவுக்கு 'லாஸ்ட் பென்ச்' சுவாரஷ்யமானது.

**- வசீகரன், கொழும்பு-14.**

## பொதுவில் புலம்பாதீர்கள்

வெற்றி f.m இல் ஒலிபரப்பப்படும் 'நண்பனிடம் கேளுங்கள்' நிகழ்ச்சி தேவைதானா? தனிப்பட்ட பிரச்சினைகளை பாதிக்கப்பட்டவர்கள் புலம்புவதும் அதை அறிவிப்பாளர் கேட்டுவிட்டு 'கௌன்சிலிங்' ரேஞ்சுக்கு தனது அறிவுரையை அள்ளி வழங்குவதும் சின்னப் பிள்ளைத்தனமாக இருக்கின்றது. அதுவும் அதிகமாக காதல் தோல்வி, குடும்பப் பிரச்சினை போன்றவற்றை ஏன் பகிரங்கப்படுத்துகின்றீர்கள்? பில்டப் வேண்டாமப்பா, இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை மாற்றி வேறு வடிவத்தில் வழங்கலாமே?

**- எம்.அஸாம், குருநாகல்.**

'ஊடக மயக்கம்' என்ற இப்பகுதிக்கு இலத்திரனியல். அச்சு ஊடகங்களில் நீங்கள் கேட்ட. பார்த்த மற்றும் வாசித்தவற்றின் மீதான காத்திரமான விமர்சனங்களை எழுதி அனுப்பலாம். கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்போம்.

**'ஊடக மயக்கம்', 'இருக்கிறம்'**
**3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07,**
**மின்னஞ்சல்: irukiram@gmail.com**

# வாசகர் கடிதம்




'இருக்கிறம்' வார இதழாக வந்தாலும் அதன் உள்ளடக்கங்களில் முடிந்தளவு உங்கள் தனித்துவ நிலையை தக்கவைத்து விட்டீர்கள். கடந்த வார இதழில் புதிதாக நகைச்சுவைகளையும் போட்டு அசத்திவிட்டீர்கள். அதற்குரிய கார்ட்டூன் படங்கள் எல்லாம் இந்திய சஞ்சிகைக்கு நிகராக அழகாக வண்ணமயமாக காட்சியளிக்கின்றன. உங்கள் இதழ் ஆரம்பத்தில் சிறிய சஞ்சிகை வடிவில் வெளிவந்தபோது இவ்வாறான விடயங்களைப் பார்த்த ஞாபகம் எனக்கு. எங்கள் பகுதியில் ஒரு சிறு எண்ணிக்கையான இதழ்கள்தான் விற்பனைக்காக வருகின்றன என்று கடைக்காரர் கூறுகிறார். அதிலும் சிலவேளைகளில் எங்களுக்கு திங்கட்கிழமை கிடைப்பதில்லை. புதன், வியாழன் போன்ற தினங்களில் வாங்கிய சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. வாங்குபவர்கள் ஏங்கி நிற்கும் போது சற்று அதிகமாக அனுப்புங்களேன்.

- இரா. ரங்கநாதன், வவுனியா.

'இருக்கிறம்'
சஞ்சிகை வெளிவந்த நாள் முதல்
இன்று வரையில் அதன் உள்ளடக்கமும் பெறுமதியும் உயிரோட்டமும் காலத்தால் அழியாதவை என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

- அ.மு. பாறுக், மருதமுனை.

*'மரணங்கள் முடிவல்ல' சிறுகதை பார்த்து நெகிழ்ந்து விட்டேன். மிகவும் அருமையாக இருந்தது. இவ்வாறான சிறுகதைகள் உங்கள் இருப்புக்கு வலிமை சேர்க்கும் என்று நினைக்கின்றேன். புதிது புதிதாக பல ஆக்கங்களையும் தருகின்றீர்கள். நன்றி.*

ப. கோணேஸ்வரன், நெல்லியடி.

சென்ற வார 'உறவின் கதை' மனதைத் தொட்டுவிட்டது. பாவம் தேவகிப் பாட்டி. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக அவர் சிறுக சிறுக சேமித்து வைத்த பணத்தையும் எந்த கயவனோ பறித்துச் சென்று விட்டானே. என்ன உலகம் இது. இப்படியும் மனிதர்களா என்று வெறுப்படைய வைத்துவிட்டது.

- வ. கோகிலவாணி, கொட்டாஞ்சேனை.

யாருமே சொல்லத் துணியாத தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை தயங்காமல், சோதனைகளை தாங்கி முன்நின்று கொண்டு தருகின்ற 'இருக்கிறம்' பத்திரிகைக்கும் இதன் ஆசிரியர் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் ஒட்டு மொத்த தமிழ் பேசும் மக்கள் சார்பிலும் அத்தோடு வாசகர்கள் சார்பிலும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு, இனியும் தொடர்ந்து மக்களின் உரிமைக் குரலாக 'இருக்கிறம்' ஓங்கி ஒலிக்க வாழ்த்துகிறோம்.

- இராமசாமி ரமேஷ், அளம்பில்.

(24ஆம் பக்கத் தொடர்ச்சி..)

## கொழும்பிலிருந்து...

அரசாங்கத்தால் மாதமொன்றுக்கு 8000 ரூபா அடிப்படையில் ஒருவருடத்திற்கு மட்டும் 110,000 ரூபா வழங்கப்பட்டது. ஒரு வருடத்திற்குள் அவர்களுக்கு வீடு கட்டித் தருவதாக கூறியே மேற்படி தொகை வழங்கப்பட்டது.

இதேபோன்று கொழும்பு தெமட்டகொடை பிரதேசத்தில் வீடுகளைப் பெற்றுக் கொண்ட 300 குடும்பங்களினது கதையும் அரசாங்கம் கூறியது போன்று அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை. தெமட்டகொடையில் வழங்கப்பட்ட வீட்டுக்காக ஆரம்பத்தில் 25000 ரூபாவினை செலுத்துமாறு நகர அபிவிருத்தி அதிகார சபை அறிவுறுத்தியிருந்தது. மின்சாரத்தை பெற்றுக் கொடுப்பதற்காக 6000 ரூபா பணமும் அம்மக்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது. வீடுகளை வழங்குகின்ற காலம் நெருங்கிய வேளையில் இன்னும் 3000 ரூபா மேலதிகமாக வழங்குமாறு பணிக்கப்பட்டது.

அத்துடன் அவ்வதிகாரிகளது நடவடிக்கைகள் முற்றுப் பெறவில்லை. 30 வருட காலத்திற்கு மாதாந்தம் 1000 ரூபா வீதம் கூலி செலுத்த வேண்டும் என அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அத்தொகையை அடைத்து முடித்த பின்னரே வீடுகளது உரிமை அவர்களுக்குக் கிடைத்தது. ஆரம்ப கட்டணங்களை வழங்க தம்மிடம் வசதியில்லை என்று கூறிய மக்களுக்கு அவ்வதிகாரிகள் என்ன கூறினார்கள் தெரியுமா? வழங்கப்படுகின்ற வீடுகளை கூலிக்கு வழங்கி பணத்தை ஈடுசெய்யுமாறு கூறினர். ஒட்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை துரத்திய கதையாக கூலிக்கு வந்தவர்கள் அம்மக்களைத் துரத்தியடித்துவிட்டு தாம் குடியமர்ந்துவிட்டனர்.

ஆரம்பகட்டத்தில் 300 குடும்பங்களுக்கு தெமட்டகொடையில் வழங்கப்பட்ட வீடுகள் அம்மக்களை இலக்காகக் கொண்டு அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகள் இல்லை. அரசாங்கத்தினது அரசியல் விரும்பிகளுக்கும் வீதி வடிகாலமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் அப்புறப்படுத்தப்பட்ட மக்களுக்கும் கட்டப்பட்டிருந்த வீடுகளே இடம்பெயர்த்தப்பட்ட மக்களுக்கு தெமட்டகொடையில் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது.

கடந்த ஜனவரி 18ஆம் தகிதி இம்மக்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு தெமட்டகொடையில் அரசாங்கத்தால் அடிக்கல் நாட்டப்பட்டு இருந்தது. அவ்வடிக்கல் நாட்டு விழாவில் வீடமைப்பு மற்றும் பொறியியல் துறை அமைச்சர் விமல் வீரவன்ச, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா போன்றோர் கலந்து கொண்டிருந்தனர்.

தலா 250 வீடுகள் வீதம் இரண்டு தொடர் மாடிக் குடியிருப்புக்கள் அமைத்துத் தருவதாகவே அங்கு வாக்களிக்கப்பட்டிருந்தது. ஆனால், இன்று அங்கு ஒரு வேலைத்தளத்தில் அடிக்கல் மாத்திரமே காணப்படுகின்றது. மற்றைய வேலைத்தளத்தில் அத்திவாரம் மாத்திரமே இடப்பட்டுள்ளது. தற்பொழுது 9 மாதங்கள் கழிந்துள்ளன. ஏனைய வேலைகள் பற்றி எந்தத் தகவலும் இல்லை.

குறித்த வீட்டுத்திட்டம் நிறைவுசெய்யப்பட்டாலும் இடம்பெயர்த்தப்பட்ட மக்களுக்கு அத்தொடர்மாடி வீடுகள் கிடைக்குமா என்பது தற்பொழுது சந்தேகத்தை உண்டுபண்ணியுள்ளது. கொழும்பிலிருந்து வலுக்கட்டாயமான முறையில் அப்புறப்படுத்தப்பட்டிருந்த 200,300 குடும்பங்களுக்கு 3 வருடங்களாகியும் வீடு பெற்றுத் தருவதாக அளித்த வாக்குறுதியை இன்றளவும் நிறைவு செய்யாத அரசாங்கம் இனிமேலும் அப்புறப்படுத்தத் திட்டமிட்டுள்ள 70000 குடும்பங்களுக்கும் அதிகமானவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு எத்தனை வருடகாலங்களை எடுப்பார்கள்? இல்லாவிட்டால் அவர்களும் வெளிகொடவத்தை போன்ற தற்காலிக வீடுகளில் அநாதைகளாகத் தள்ளிவிடப்படுவார்களா? அப்படி நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கொம்பனித் தெரு மக்களுக்கு நடந்த அவலம்தான் எதிர்காலத்தில் நடக்கப்போகின்றதா?

நன்றி: ராவய

## வடமாகாண முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து 21 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு நடாத்தப்படும் மாபெரும் 'கவிதைப் போட்டி'

இலங்கையின் வடமாகாணத்தில் முஸ்லிம்கள் இடம்பெயர்ந்து எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துடன் 21 வருடங்கள் நிறைவடைகின்றன. இதனை முன்னிட்டு புலம்பெயர்ந்த இலங்கை முஸ்லிம் சம்மேளனமும் யாழ். முஸ்லிம் வலைத்தளமும் (www.yarlmuslim.blogspot.com) இணைந்து கவிதைப் போட்டியொன்றை ஏற்பாடு செய்துள்ளன.

### போட்டி நிபந்தனைகள்

01. வயதெல்லை கிடையாது.
02. கவிதைகள் மரபு சார்ந்த அல்லது புதுக்கவிதையாக இருக்கலாம்.
03. கவிதைகள் சுருக்கமாக இருப்பது சிறந்தது.
04. கவிதைகளின் கருப்பொருள் வடக்கு முஸ்லிம்களை இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டதை மையப்படுத்தியும் அதனால் ஏற்பட்ட அவலங்கள், வடக்கு முஸ்லிம்களின் தற்போதைய நிலை மற்றும் அவர்களின் எதிர்காலத்தை மையப்படுத்தியதாகவும் அமைவது விரும்பத்தக்கது.
05. ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட அல்லது ஒலி/ஒளிபரப்பு செய்யப்பட்ட கவிதைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
06. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

### பரிசில்கள் விபரம்

**முதலாவது பரிசு :** 10,000 ஆயிரம் ரூபாவுடன், பெறுமதிமிக்க பரிசில்கள்.
**இரண்டாவது பரிசு :** 5,000 ஆயிரம் ரூபாவுடன், பெறுமதிமிக்க பரிசில்கள்.
**மூன்றாவது பரிசு :** 2,500 ரூபாவுடன் பெறுமதிமிக்க பரிசில்கள்.
நான்கு ஆறுதல் பரிசில்களும் உண்டு.

போட்டியாளர்கள் தமது கவிதைகளை தெளிவான எழுத்தில், முகவரி, தொழில், சிறுவர்ண புகைப்படம், தொலைபேசி இலக்கம் மற்றும் பாடசாலை மாணவர்களாயின் பாடசாலை விபரம் ஆகியவற்றுடன் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும்.

**இலங்கை முகவரி**
A.A.M. SAJEETH
48. PERCI DIAS MAWATTAH,
MABOLLA,
WATTALA.

**வெளிநாட்டு முகவரி**
ABDUL AZEEZ
BAD STRASSE 6,
6423 SEEWEN,
SWITZERLAND.

*அதேவேளை, போட்டியாளர்களினால் அனுப்பி வைக்கப்படும் அனைத்து கவிதைகளும் காலக்கிரமத்தில் தொகுக்கப்பட்டு நூலுருவாக்கம் செய்யப்படும்.*

ஊடக அனுசரணை:
இருக்கிறம் வார இதழ்
தமிழ் பேசும் மக்களின் தேசிய சஞ்சிகை

# கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்டு மூன்று வருடங்கள்



**‘எம்மைப் போட்டோ பிடித்து பத்திரிகைகளில் போட வேண்டாம். எமக்கு நடந்த அநீதியை நாம் விபரமாகச் சொல்கிறோம். எங்களுடைய பெயர்கள், ஊர்கள், போட்டோக்கள் பத்திரிகைகளுக்குச் சென்றால் எத்தகைய துன்பம் எங்களை வந்து சேரும் என்பது உங்களுக்குத் தெரியாது’**

**‘ருனு (நகர அபிவிருத்தி அதிகார சபை) அதிகாரிகளை அவமானத்துக்குட்படுத்தியது ஏனென்று எம்மைத் திட்டுவார்கள். இறுதியில் எங்களுக்குத் தருவதாக வாக்களித்த வீடுகளைத் தரமாட்டார்களோ தெரியவில்லை. தருவதாக வாக்களித்துள்ள வீடுகளை வாங்குவதற்கு விதித்துள்ள தொகையை 50000, 100000 ரூபா என்று அதிகரித்து விடுவார்களோ தெரியவில்லை’**

கொழும்பு வெலிகொடவத்தை பிரதேசத்தில் வசிக்கின்ற ஒரு சில குடும்பப் பெண்களின் குரல்களே இவை. இவர்கள் இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் கொம்பனித் தெருவிலிருந்து பலாத்காரமான முறையில் இடம்பெயரச் செய்யப்பட்டனர். தற்பொழுது இவர்கள் தொட்டலந்தை ‘பெகிவ்ஸன்’ வீதியில் உள்ள வெளிகொடவத்தை என்ற இடத்தில் தற்காலிகமாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள வீட்டு முகாம்களிலேயே வாழ்க்கையை ஓட்டி வருகின்றனர். வெலிகொடவத்தையில் அமைந்துள்ள இம்முகாம்களை அண்டிய பிரதேசத்து மக்கள் குறித்த முகாம் வாசிகளை கஜிமா வாசிகள் என்றே அழைக்கின்றனர்.

2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் அழைத்துச் செல்லப்பட்ட 80 குடும்பங்களைச் சேர்ந்த அம்மக்கள் 3 வருடங்களும் 2 மாதங்களும் கடந்த நிலையில் இன்றும் அதே நிலைமையில் இருக்கின்றனர். அவர்களுக்கான வசதி வாய்ப்புகளை அமைத்துத் தருவதாகக் கூறி பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டாலும் எதுவும் நடந்தபாடில்லை. ஒரு வருடத்திற்குள் வசதிவாய்ப்புக்களுடன் கூடிய ஒரு வீடு வழங்கப்படும் என்பதுதான் இங்கு வழங்கப்பட்ட பிரதான வாக்குறுதியாகும். கொழும்பு நகரத்திலிருந்து பலாத்காரமான முறையில் வெளியேற்றப்பட்டு வெளிகொடவத்தை பிரதேசத்திற்கு இழுத்து வீசப்பட்டுள்ளவர்கள் இம்மக்கள் மாத்திரமல்ல. வனாத்தமுள்ள, மாளிகாவத்தை போன்ற பிரதேச மக்களுக்கும் இப்போது வாசஸ்தலமாக இருப்பது வெளிகொடவத்தைக் கூடாரங்களே.

**ஹெட்டி ரம்ஸி**

‘14 வீடுகளுக்கு நான்கு மலசலகூடங்களே உள்ளன. அம்மலசலகூடங்களுள் இரண்டே தற்பொழுது பாவனையில் உள்ளன. இரண்டு மலசலகூடங்களில் குழாய் வெடித்து அசுத்தங்கள் வெளியேற ஆரம்பித்துள்ளன. சில மலசலகூடங்களின் கதவுகள் உடைந்துள்ளன. மேற்குறித்த 14 வீடுகளுக்கும் கற்களால் கட்டப்பட்ட இரண்டு நீர்த்தாங்கிகளே குளிப்பதற்காக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் 2 குழாய்களே பொருத்தப்பட்டுள்ளன.

தற்பொழுது ஒரு நீர்த்தாங்கியே பாவனையில் உள்ளது. மற்றைய நீர்த்தாங்கி உடைந்து போய் அழுக்காகியுள்ளது. கான்களில் நீர் வடிந்து செல்லாமல் தேங்கி நிற்கிறது. இவற்றைப் பூர்த்திசெய்து தருமாறு நாம் ‘ருனு’க்கு கடிதங்களும் எழுதியுள்ளோம். ஆனாலும் இன்றளவும் அக்குறைபாடுகள் நிவர்த்தி செய்து தரப்படவில்லை. இதுதவிர, வீடுகளுக்கு அடிக்கப்பட்டுள்ள பலகைகளும் இத்துப் போயுள்ளன. காற்றுக்கு கூரைத் தகடுகள் மேலெழுகின்றன. நாம் அனைவரும் பணம் சேகரித்தே மலசலகூடங்கள் மற்றும் கான்களைச் சுத்தப்படுத்தி திருத்தியமைத்து வருகிறோம்’ என்றார் அப்பிரதேசவாசியொருவர்.

வெளிகொடவத்தை தற்காலிக வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. கொம்பனித்தெரு மக்கள் வெளிகொடவத்தைக்கு அழைத்து வரப்பட்டபோது மின்சாரத்திற்கும் தண்ணீருக்கும் பணம் அறவிடப் போவதில்லை என்றே அரசாங்க அதிகாரிகள் கூறியிருந்தனர். அவ்வதிகாரிகளின் வாக்குறுதிக்கு 6 மாதங்களே ஆயுள். அதற்குப் பின் நீருக்கும் மின்சாரத்திற்கும் மாதாந்தம் 500 ரூபா வீதம் 6 மாதங்களுக்குமாக ஒரே தடவையில் 3000 ரூபாவினை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.




ஓரளவாவது நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்த அம்மக்களுக்கு இப்போது நிம்மதியில்லாத ஒரு வாழ்க்கையே கிடைத்துள்ளது. செங்கற்களால் கட்டப்பட்ட அஸ்பஸ்டெஸ் சீற்றுக்கள் பொருத்தப்பட்ட தனி வீடுகளும் தொடர்மாடி வீடுகளும் முன்பு அவர்களிடம் இருந்தன. பாதுகாப்புப் படையினரது கண்காணிப்புக்களுக்கு மத்தியில் கொண்டு வரப்பட்ட ‘பெக்கோ’ இயந்திரங்கள் அவ்வீடுகளை உடைத்துத் தரைமட்டமாக்கின. அவ்வுலோக இயந்திரங்களுக்கு மாத்திரமல்ல அவ்வுலோக இயந்திரங்களுக்கு கட்டளையிட்ட நபர்களுக்கும் ஈரமான உள்ளம் இருக்கவில்லை என்பதனையே அந்நிகழ்வு எடுத்துக் காட்டியிருந்தது.

‘நாங்கள் ஒரு வீட்டில் இரண்டு மூன்று குடும்பங்களாக இருந்தாலும் மிகவும் சந்தோசமாக இருந்தோம். எங்களுடைய தாய்மார், மகள்மார் ஒவ்வொரு தட்டுமாடியில் வேறு வேறாக இருந்தனர். எங்களது வீடுகளுக்கு டொய்லட், பாத்ரூம்கள் இருந்தன. தற்பொழுது 3 வருடங்களும் 3 மாதங்களும் உருண்டோடியும் நாம் இங்கு நரக வாழ்க்கை வாழ்ந்து வருகிறோம்’ என்றார் ஒரு குடும்பத் தலைவி

இங்கு வசிப்பவர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம்களாவர். தமது மார்க்க விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தற்காலிக கூடாரங்களில் எவ்வித வாய்ப்புக்களும் கிடைப்பதில்லை என்று அம்மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அம்மக்களது குழந்தைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கான எவ்வித வசதி வாய்ப்புக்களும் அவ்விடத்தை அண்டிய பிரதேசங்களில் இல்லை. இதனால் அம்மக்களது பிள்ளைகள் முன்பிருந்த கொம்பனித்தெரு பாடசாலைகளிலேயே கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். கல்விக்காக அப்பிள்ளைகள் கொம்பனித் தெருவிலுள்ள அவர்களது உறவு வீடுகளில் தங்கி நிற்கின்றனர். ‘எங்களுக்கு அவசரமாக வீடுகட்டித் தாருங்கள். எங்களைச் சுற்றி இருக்கும் மக்கள் எங்களை வேற்று மனிதர்களாக பார்க்கின்றனர். தவறுதலாக ஒரு வார்த்தை எங்கள் வாயிலிருந்து வந்தால்கூட அம்மக்கள் எங்களுடன் சண்டை பிடிக்கின்றனர்’ என்றார் ஒரு வயது முதிர்ந்த தாய்.

இந்த அப்பாவி மக்களது உள்ளத்தில் அதிகாரிகளால் புகுத்தப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டக் கனவு எப்போது நிறைவேறும் என்று தெரியவில்லை. கொம்பனித் தெருவிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட மக்களில் சிலர் தாம் வெளிகொடவத்தைக்கு வரமுடியாது என்று கூறினர். அவ்வாறு கூறிய மக்களுக்கு

(23ஆம் பக்கம் பார்க்க..)



இச்சஞ்சிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிரைவேற் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 03ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.